




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:189 | 24-01-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

24.01.2026 தை 10
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று அதிகாலை 12.51 வரை பஞ்சமி பின்பு இரவு 11.14 வரை சஷ்டி பின்பு சப்தமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 1.19 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று பிற்பகல் 1.21 வரை சிவம் பின்பு சித்தம்.

கரணம் :
இன்று அதிகாலை 12.51 வரை பாலவம் பின்பு பிற்பகல் 12.03 வரை கௌலவம் பின்பு இரவு 11.14 வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று பிற்பகல் 1.19 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 1.19 வரை மகம் பின்பு பூரம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# திமுக அரசின் முடிவுரைக்கான கவுண்டவுன் தொடங்கிவிட்டது

## பிரதமர் மோடி

**சென்னை, ஜன.24:** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்துகொண்டுள்ளார்.

கூட்டத்தில் பாஜக தலைவர்கள், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சியின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி திமுக அரசை கடுமையாக விமர்சித்துப் பேசினார். தமிழகத்திற்கு மத்திய பாஜக அரசு செய்தவற்றை பட்டியலிட்டார்.

அவர் பேசுகையில், 2026ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எனது முதல் பயணம் இது. பொங்கலுக்கு பின் சிறப்பான ஆனந்தம் நிறைந்திருக்கிறது.

பொங்கல், எம்ஜிஆர் பிறந்தநாள் உள்ளிட்ட சிறப்பான நாட்கள் உள்ள மாதத்தில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளேன்.

“தமிழ்நாட்டில் தாய், தந்தையர்கள் எல்லாம் தங்கள் கண்முன்னே தங்களுடைய குழந்தைகள் நாசமாகிப் போவதைப் பார்த்து துடித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் இளைஞர்களை போதைப்பொருள் அபாயத்தில் இருந்து மீட்டே ஆக வேண்டும். என்டிஏ கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழ்நாட்டை போதைப்பொருளில் இருந்து மீட்டெடுக்க உதவும் வாக்காக இருக்கும். திமுக ஆட்சியில் போதைப்பொருள், மதுபான குற்றவாளிகள் நன்றாக செழிப்பாக இருக்கிறார்கள் என்றால் தேசிய ஜனநாயகக் கூட்டணி மக்கள் நலனில் கண்ணும்கருத்தாக இருக்கிறது. இளைஞர்களை போதைக் கும்பலிடம் ஒப்படைத்துவிட்டது திமுக. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் நலனே முக்கியம்.

மதுராந்தகத்தில் உள்ள ஏரி காத்த ராமரை வணங்குகிறேன், தமிழ்நாட்டின் நலனிற்காகவும் வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு காரணமாக மனிதர் எம்ஜிஆர். இங்கு கூடியுள்ள கூட்டம் நாட்டிற்கு ஒரு செய்தி சொல்கிறது. தமிழ்நாடு இப்போது மாற்றத்திற்கு தயாராகிவிட்டது என்பது தான்.

மோசமான திமுக ஆட்சியில் இருந்து தமிழ்நாடு விடுபடத்துடிக்கிறது, தமிழ்நாடு என்டிஏ கூட்டணியை விரும்புகிறது. தமிழ்நாட்டை திமுக அரசிடம் இருந்து விடுவிக்க வேண்டும் என்பது தான் நம் அனைவரின் உறுதிப்பாடு.

திமுக அரசின் முடிவுரைக்கான கவுண்டவுன் தொடங்கிவிட்டது.



இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். மருந்துகள் மற்றும் மருத்துவத் தயாரிப்பு சூழல் கொண்டுவர என்டிஏ ஊக்கமளிக்கும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் நலனே முக்கியம் முத்ரா திட்டத்தால் இங்குள்ள இளைஞர்கள், முதியோருக்கு மக்களுக்கு ஆதாயம் கிடைக்கிறது. இதுவரை இங்கு 6 கோடி கடன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 3 லட்சம் கோடிக்கும் அதிகமான உதவிகள் தொழில் முனைவோருக்கு கிடைத்துள்ளது.

மத்திய அரசுடன் இசைவுடன் செயல்படும் அரசு இங்கு எப்போது அமையுமோ அப்போதுதான் தொழில் முதலீடுகள் சிறப்பாக இருக்கும். தமிழ்நாட்டில் குற்றங்களால் பெண்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தமிழ்நாட்டில் குற்றங்களை கட்டுக்குள் வைத்திருந்தார். பெண்களே, என்டிஏ அரசை ஏற்படுத்தித் தாருங்கள், இந்த அரசு உங்களுக்கு பாதுகாப்பைத் தரும். தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளிலும் குழாய் மூலமாக குடிநீர் கிடைக்கும், இது மோடியின் உத்தரவாதம்.

தமிழ் மொழி, தமிழ் கலாசாரத்தை நேசிக்கிறேன். அது எனக்கு எப்போதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பாரதி பெயரில் இருக்கை அமைத்திருக்கிறோம். காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியால் நாட்டின் கலாசார ஒற்றுமை பலப்பட்டிருக்கிறது. காசியில் உள்ள பிள்ளைகள் தமிழ் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சி.

நாங்கள் தமிழ் கலாசாரத்துக்காக வெறும் வாய்பந்தல் போடுபவர்கள் அல்ல. அதனைப் பாதுக்காக உறுதிப்பாட்டை எடுத்து செயல்படுத்தி வருகிறோம்.

சில நாள்கள் முன்புதான் முருகப் பெருமானுக்கு விளக்கு போடுவது விவாதப்பொருளாகியுள்ளது. திமுக வாக்குவங்கியை குஷிப்படுத்த நீதிமன்றம் சென்றது.

நமது முருகப்பெருமானுக்கு விளக்கு போடுவது விவாதப் பொருளாக்கப்பட்டபோது, அப்போது நம் தலைவர்கள் எல்லாம் பக்தர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்தார்கள். அவர்களுக்கு கரவொலி அளியுங்கள்.

திமுகவும் அவர்களின் கூட்டாளிகளும் வாக்கு வங்கியை குஷிப்படுத்த நீதிமன்றங்களைக்கூட விட்டுவைக்கவில்லை. அவர்களையும் அவமானப்படுத்தினார்கள் .

தமிழ், தமிழர்கள், தமிழ் கலாசாரத்தின் எதிரி திமுக.

காங்கிரஸ், திமுகவினர்தான் ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்து உங்களை அவமானப்படுத்தினார்கள். ஆனால் என்டிஏ அரசு, சட்டரீதியாக ஆராய்ந்து உங்களுடைய பாரம்பரியத்தை மீட்டுத் தந்தார்கள், கௌரவப்படுத்தினார்கள். தமிழக மக்கள் அனைவரும் தங்கள் பாரம்பரியத்தை கொண்டாடி மகிழ வேண்டும். இதற்கு என்டிஏ அரசு உங்களுக்கு துணை நிற்கும். தமிழகத்தில் திறமைகள் ஏராளம் இருக்கின்றன. திறமைகளுக்கு குறை இல்லை. இப்போது எப்படிப்பட்ட அரசு தேவை என்றால் இங்கே இருக்கும் இளைஞர்கள் மீது அரசு நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த அரசாங்கம் மத்திய அரசோடு இணைந்து கரம் கோர்த்து பயணிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து தமிழ்நாட்டை வளர்ச்சி அடைந்ததாக மாற்றுவோம்” என்று பேசினார்.

# 7 மாவட்டங்களுக்கு இன்று கனமழை வாய்ப்பு!



**சென்னை, ஜன.24:** தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் நாளை (ஜன.24) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாகசென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி நகரும் வளிமண்டல அலை (*Easterly waves*) நிகழ்வு தற்போது நிலவுகிறது.

மேலும் தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜன.24) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் சனிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.

# பிரதமரின் டபுள் என்ஜின் எனும் டப்பா என்ஜின் தமிழ்நாட்டில் ஓடாது! : முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஜன.24:** பிரதமர் சொல்லும் “டபுள் என்ஜின்” எனும் “டப்பா என்ஜின்” தமிழ்நாட்டில் ஓடாது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தன்னுடைய சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பாஜக - என்டிஏ டபுள் என்ஜின் அரசு நிச்சயம் ஆட்சிக்கு வரும். தமிழ்நாட்டை வளர்ச்சியடைந்த, பாதுகாப்பான, ஊழலற்ற மாநிலமாக மாற்றுவோம் என்று மதுராந்தகத்தில் இன்று(ஜன. 23) நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியிருந்தார்.



இந்த நிலையில், இதனை விமர்சித்து முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், பிரதமர் சொல்லும் “டபுள் என்ஜின்” எனும் “டப்பா என்ஜின்” தமிழ்நாட்டில் ஓடாது! பிரதமர் அவர்களே... மத்திய பா.ஜ.க. அரசு ஏற்படுத்தி வரும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்துதான் தமிழ்நாடு வரலாறு பேசும் வளர்ச்சியை அடைந்திருக்கிறது.

கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... நீங்கள் சொல்லும் “டபுள் என்ஜின்” மாநிலங்களான உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், பிகாரைவிட, தமிழ்நாடு, கேரளம், தெலங்கானா, கர்நாடகம், மேற்கு வங்கம் என உங்கள் “டப்பா என்ஜின்” நுழையாத மாநிலங்கள்தான் வளர்ச்சியில் கொடிகட்டிப் பறக்குது.

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்யும் துரோகங்களை, நீங்கள் மறைத்தாலும் என்டிஏ தமிழகத்திற்குத் துரோகம் செய்கிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

தில்லியின் ஆணவத்துக்குத் தமிழ்நாடு தலைகுனியாது” என்று பதிவிட்டுள்ளார்.

# ஜன நாயகன் தணிக்கை வழக்கு: தீர்ப்பு தேதி வெளியானது!

**சென்னை, ஜன.24:** ஜனநாயகன் படத்தின் தணிக்கை சான்று தொடர்பான வழக்கில் வரும் செவ்வாய்க்கிழமை சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்க உள்ளது.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்து ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் ஜன.27ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட உள்ளது.

‘ஜனநாயகன்’ திரைப்படத்துக்கு தணிக்கை சான்று வழங்க உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் கே.வி. என்.புரொடக்சன் நிறுவனம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, படத்தை மறுஆய்வு குழு பார்வையிட பரிந்துரை செய்த தணிக்கை வாரியத் தலைவரின் உத்தரவை ரத்து செய்து உத்தர விட்டார்.

## அண்ணன், தம்பி போல் நானும் அண்ணன் எடப்பாடியும்... டிடிவி தினகரன்

“இந்தியாவே மதுராந்தகத்தை நோக்கி பார்த்துக்கொண்டிருக்கிறது. பிரதமர் என்ன பேசுவார் என்று நாடே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

பிரதமர் மோடி தமிழகம் வந்ததும் இயற்கையே சூரியனை மறைத்துவிட்டது. எங்களும் மக்கள் வெள்ளம், மக்கள் கடல்போல காட்சியளிக்கிறார்கள். இதுவே இந்த கூட்டணியின் வெற்றிக்குச் சான்று. உரிய இடத்தையும் காலததையும் தேர்ந்தெடுத்து செயல்பட்டால் உலகத்தையே ஆளலாம். நமக்கும் அதுக்கான காலம் வந்துவிட்டது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் ஊழல் இல்லாத துறையே கிடையாது. மக்களை வாட்டிவதைக்கும் அரசு தேவையா? ஒரு குடும்பம் வாழ 8 கோடி மக்களை சுரண்டுவது நியாயமா? நான்கே முக்கால் ஆண்டுகளில் திமுக கொடுத்தது துன்பம், வேதனைதான். மு.க. ஸ்டாலின் இந்த நான்கே முக்கால் ஆண்டுகளில் அவர் செய்தது ஒன்றே ஒன்றுதான் ஊழல்.

ஸ்டாலின் குடும்பம் மிகப்பெரிய பணக்கார குடும்பமாக இருக்கிறது. ஸ்டாலினுக்கு பிறகு முதல்வராக உதயநிதி வர வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் திமுகவில் உழைத்தவர்கள் தெருவில் இருக்கிறார்கள்.

எந்தவொரு தகுதியும் இல்லாத உதயநிதிக்கு முதலில் எம்எல்ஏ, அமைச்சர், தொடர்ந்து துணை முதல்வர் ஆக்கியிருக்கிறார்கள். இனி எந்த தேர்தலிலும் திமுக வெற்றி பெறாது. திமுகவுக்கு இது இறுதித் தேர்தல். தீய சக்தி திமுகவை வீழ்த்துவோம். எம்ஜிஆர், ஜெயலலிதாவின் கனவை நிறைவேற்றுவோம். எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணி, வலிமையான கூட்டணி. தேர்தல் எனும் இந்த போரில் கூட்டணி கட்சித் தலைவர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டு வெற்றிக்கொடி நாட்டுவோம். குடும்ப வாரிசுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற தேர்தல், குடும்ப ஆட்சிக்கு ஊழல் ஆட்சிக்கு முடிவு கட்டுகிற தேர்தல். வரும் தேர்தலில் 210 இடங்களில் எங்கள் கூட்டணி வெல்லும். அதிமுக ஆட்சியமைக்கும்.

அதிமுக ஆட்சியில் மத்திய அரசு அனுமதியளித்த காவிரி நதிநீர் தூய்மைப்படுத்தும் திட்டத்தை திமுக அரசு செயல்படுத்தவில்லை. கரோனா போன்ற காலங்களில் மக்களின் உயிரைக் காப்பாற்றியவர் பிரதமர் மோடி” என்று பேசினார்.

## முதல்வர் ஸ்டாலினை விமர்சித்த எடப்பாடி பழனிசாமி

நான்கரை ஆண்டுகளாக ஒரு அடி கூட நகராத, ஒரு “ஓடாத ஓட்டை என்ஜின் ஆட்சி”யை முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருவதாக அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளப் பதிவில், இன்றைய தினம், மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் இந்திய திருநாட்டின் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து பங்கேற்றதில் பெருமகிழ்ச்சி.

அதிமுக தலைமையிலான நம் வெற்றிக் கூட்டணியின் சார்பில் இப்பொதுக்கூட்டத்தில் பங்கேற்று, இன்றைய நமது கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டம், ஆளுங்கட்சி திமுக-வை ஆட்டம் காண வைத்துள்ளதை ஆணித்தரமாக எடுத்துரைத்த பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனுக்கும், “திமுக ஆட்சி என்றாலே அது ஒரு பூஜ்ஜியம் ஆட்சி” என்ற உண்மையை உரக்கச் சொன்ன பா.ம.க. தலைவர் அன்புமணிக்கும், “மக்கள் விரோத திமுக குடும்ப ஆட்சியை அகற்றி, மீண்டும் அம்மாவின் ஆட்சி அமைய அம்மாவின் தொண்டர்கள் ஒன்றாக இணைந்து அயராது உழைக்க வேண்டும்” என்று உரைத்த அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரனுக்கும், மேலும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களுக்கும், பல்வேறு அமைப்பைச் சார்ந்த தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் மகிழ்ச்சிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் கூட்டணியின் எழுச்சியை நேரலையில் மு.க.ஸ்டாலின் பார்த்து அலறிப் போய் விட்டார் போல. உடனே எக்ஸ் தளத்தில் தனது புலம்பலை ஆரம்பித்துவிட்டார். தமிழ்நாட்டில் ஆட்சி, நாடாளுமன்றத்தில் 39 எம்.பி.க்கள் என எல்லாவற்றையும் கொடுத்த தமிழக மக்களுக்கு எதுவுமே செய்யாமல் ஏமாற்றி நீங்கள் நடத்திய #FraudModel_திமுகஆட்சி-யைக் கண்ட பிறகு, நீங்கள் எத்தனை தகிடுத்தத்தங்கள் போட்டாலும், இனி #தமிழ்நாடு_ஏமாறாது !

குடும்ப ஆட்சியை, ஊழல் ஆட்சியை, மக்களின் பாதுகாப்பை சீர்குலைத்த இந்த ஆட்சியை விரட்டி அடிக்க வேண்டும் என்பது தான் தமிழக மக்களின் ஒருமித்த எண்ணம்.







# திருக்குறள் குறள்-509

**தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின் தேறுக**
**தேறும் பொருள்**



யாரையும் ஆராயாமல் தெளியக்கூடாது, நன்றாக ஆராய்ந்த பின்னர் அவரிடம் தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



சந்தோஷம் என்பது
நீ வாழும் இடத்தில்
இல்லை...

நீ வாழும் விதத்தில்
தான் உள்ளது
என்பதை உணர்ந்து
கொள்.....

**உஷா முத்துராமன்**

## அக்னி பிரவேச தினத்தை முன்னிட்டு அலங்காரத்தில் வாசவி அம்மன்



**கடலூர்,ஜன.24:**
கடலூர் மாவட்டம் ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வாசவி அம்மன் அக்னி பிரவேசம் தினத்தை முன்னிட்டு வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண பூக்களால் அலங்காரங்கள், ஹோமங்கள் வளர்த்து, அம்மனை அலங்கரித்து வாசவி அம்மனை சுற்றி தீபங்களை ஏற்றி, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும்நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கலசப்பாக்கம் ஆற்றுத் திருவிழாவை முன்னிட்டு அரசு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம்



**திருவண்ணாமலை,ஜன24:**
திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் ஊராட்சியில் வட்டாட்சியர் அலுவலகத்தில் கலசபாக்கம் செய்யாற்று ஆற்று திருவிழாற்கான (ரதசப்தமி) முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் தலைமையில் அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாக்காளர் உறுதிமொழி ஏற்பு



திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் டாக்டர்.M.சுதாகர் இ. கா.ப அவர்களின் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்பட்டது.உடன் அரசு அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதிய நான்குவழிச் சாலை பாலம் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை ராஜீவ் காந்தி சாலை, ஒக்கியம் மடுவில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நான்குவழிச் சாலை பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# வாக்காளர் உறுதி ஏற்பு நிகழ்ச்சி




**அறந்தாங்கி, ஜன.24:**
ஆவுடையார்கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்காளர் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மற்றும் நிருவாகவியல் துறைத்தலைவருமான முனைவர் மு.அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், ஆங்கிலத்துறைத்தலைவர் பேராசிரியர் அ.கணேசன், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கு. சீனிவாசன், கணிதவியல் துறைத்தலைவர் முனைவர் பா.கிளாடிஸ், வேதியியல் துறைத்தலைவர் து.சிற்றரசு உள்ளிட்ட பேராசிரியர்கள், கல்லூரி கண்காணிப்பாளர் பா.மகாராஜன் உள்ளிட்ட அலுவலகப்பணியாளர்கள், நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் உள்ளிட்ட மாணவ மாணவியர் பலரும் பங்கேற்றனர்.

கல்லூரி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் மு. பழனித்துரை, உறுதிமொழியை வாசித்தளிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## 3 புதிய ரயில் சேவைகளை பிரதமர் மோடி கேரளாவில் துவக்கி வைத்தார்




திருவனந்தபுரம் - தாம்பரம் அம்ரித் பாரத் ரயில் சேவை உள்பட 3 புதிய ரயில் சேவைகளை பிரதமர் மோடி நேற்று கேரளாவில் துவக்கி வைத்தார்.

## தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி உரையாற்றினார்



மதுரை நேதாஜி சாலையில் உள்ள நேதாஜி சிலைக்கு பிறந்த நாளை முன்னிட்டு மாலையிட்டு தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி உரையாற்றினார்.உடன் தேசியவலிமை வே.சுவாமிநாதன், சத்திரப்பட்டி இராஜா.

## இந்திய கம்யூ. கட்சியினர் காத்திருப்பு போராட்டம்



இருளர் இன மக்களுக்கு பட்டா கேட்டு காஞ்சிபுரம் தாலுகா அலுவலகம் எதிரே நேற்று இந்திய கம்யூ. கட்சியினர் காத்திருப்பு போராட்டம் நடத்தினர்.

## மதுரை மேற்கு வட்டக் கிளை செயற்குழு கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மதுரை மேற்கு வட்டக் கிளை செயற்குழு கூட்டம் வட்டக் கிளை தலைவர் கே.நாகேஸ்வரன் தலைமையில் நேற்று 23.1.26 காலை பொதுப் பணித் துறை வளாகத்தில் நடைபெற்றது

## காலை உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரத்தை கலெக்டர் இளம் பகவத் ஆய்வு



தூத்துக்குடி முக்காணி தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரத்தை கலெக்டர் இளம் பகவத் ஆய்வு செய்தார்.

## தேசிய வாக்காளர் தின உறுதிமொழி



திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

## அ.ம.மு.க.வின் செயலாளர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்



அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் தென்மண்டல பொறுப்பாளர் மாணிக்கராஜா தலைமையில் அ.ம.மு.க.வின் கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஸ்டெல்லஸ் கன்னியாகுமரி மத்திய மாவட்டச் செயலாளர் ரத்தினராஜ் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராமச்சந்திரமூர்த்தி (எ) வினோத் ஆகியோர் நேற்று முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். கனிமொழி எம்.பி.. அமைச்சர் கீதாஜீவன், ஆர்எஸ்.பாரதி , செந்தில் பாலாஜி, உடன் உள்ளனர்.

## வேலூரில் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கிய முன்னாள் ஒன்றிய குழு தலைவர்!



**வேலூர், ஜன.24:**
வேலூர் மாநகராட்சி 22, 23, 24 ஆகிய வார்டுகளில் பணியாற்றும் 100-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு புத்தாண்டையொட்டி ஆடைகள் வழங்கும் நிகழ்ச்சி ரங்காபுரத்தில் நடந்தது. இந்த எளிய நிகழ்வுக்கு ஊர் நாட்டாண்மைதாரர் சீனிவாசன் தலைமை தாங்கினார். முன்னாள் கவுன்சிலரும், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட துணைத் தலைவருமான பி.பி. சந்திரபிரகாஷ் முன்னிலை வகித்தார். வேலூர் மாநகர் காங்கிரஸ் கமிட்டி பொருளாளரும், முன்னாள் ஒன்றிய தலைவருமான சி.கே. தேவேந்திரன், தூய்மைப் பணியாளர்களுக்கு புத்தாடைகளை வழங்கி மகிழ்ந்தார். இந்த நிகழ்வில் பாரத், கட்சியின் துணைத் தலைவர் ராஜேந்திரன், சுகாதார மேற்பார்வையாளர்கள் மேகராஜ், உதயராஜ், ரவி, வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா




சென்னை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ரவி பட்டங்களை வழங்கினார்.

## செய்யாறில் தி.மு.க., பொறுப்பாளர் சுந்தர் கருணாநிதி தலைமையில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல் !



**செய்யாறு, ஜன. 24:**
செய்யாறு கலைஞர் சிலை அருகே 22-ம் நாளான நேற்று மாவட்ட பொறியாளர் அணி பொறுப்பாளர் சந்தர் கருணாநிதி ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது.

செய்யாறு சட்ட மன்ற உறுப்பினர் ஜோதி, வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.சங்கர், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

இதையடுத்து வெம்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர்கள் ஜே.சி.கே.சீனுவாசன், மாவட்ட சற்றுச்சூழல் அமைப்பு துணைத் தலைவர் கலைஞர் பாஸ்கர், சி.கே.ரவிக்குமார், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராணி, கவுன்சிலர்கள் ரவி, ரமேஷ், கோவேந்தன், ராஜலட்சுமி அண்ணாதுரை, கோபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க., பொறுப்பாளர்கள் மோகனவேல், அமுல்ராஜ், தியாகு, வந்தவாசி பிரபு, சிவச்சந்திர பிரகாஷ் ஆகியோர் பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கினர்..

## மின்னணு வாக்குப்பதிவு கருவி செயல்முறை விளக்க மையங்கள்

**சென்னை, ஜன.24:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, நடைபெறவுள்ள 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியினை பயன்படுத்துவது குறித்த செயல்முறை விளக்க மையங்கள் புதனன்று (ஜன.21) முதல் அமைக்கப்பட்டுள்ளன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் எவ்வாறு வாக்களிப்பது மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் வாக்களித்த விவரங்களை எவ்வாறு தெரிந்து கொள்வது என்பது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், இந்த கருவிகளின் செயல்விளக்கம் அளிப்பதற்காக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான செயல்முறை விளக்க மையங்கள் சென்னை மாவட்டத்தில் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்கள் என மொத்தம் 10 இடங்களில் புதனன்று முதல் வாக்காளர்களுக்கு விழிப்புணர்விற்காக செயல்முறைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## 38 காவல் ஆய்வாளர்கள் பணியிடமாற்றம்

**சென்னை, ஜன. 24:**

சென்னையில் நிர்வாக வசதிக்காக 38 காவல் ஆய்வாளர்களை பணியிடமாற்றம் செய்து சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் உத்தரவு பிறப்பித்துள்ளார். ராயபுரம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் காதர் மீரா மாதவரம் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கும், திரு. வி.க.நகர் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் கிருபாநிதி மதுரவாயல் குற்றப்பிரிவுக்கும், எஸ்பிளனேடு ஆய்வாளர் பிரபு புழல் குற்றப்பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். அதேபோல், பாண்டி பஜார் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் புஷ்பராஜ் மீனம்பாக்கம் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கும், கொத்தவால்சாவடி சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் ராஜன் வளசரவாக்கம் குற்றப்பிரிவுக்கும், அடையார் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் இளங்கனி நொளம்பூர் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் வேளச்சேரி சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் ஜெயராம் மதுரவாயல் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கும், வானகரம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் மகேஷ்வரி கோயம்பேடு சட்டம் ஒழுங்கு பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து சென்னை முழுவதும் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி வந்த மொத்தம் 38 காவல் ஆய்வாளர்கள் புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டு, உடனடியாக பணியில் இணைய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**காஞ்சிபுரம், ஜன.24:**


காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளியன்று (ஜன. 23) காலை 11 மணிக்கு ஆட்சியர் கலைச்செல்வி மோகன் தலைமையில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் வேளாண் வல்லுநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கமளிக்க உள்ளனர். இதில் பங்கேற்கும் விவசாயிகள் தனித்துவ அடையாள எண் (டிஜிட்டல் பார்மர் ரிஜிஸ்ரி) பெற ஆதார் மற்றும் சிட்டா விவரங்களுடன் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## மினி பேருந்து சேவை தொடக்கம்

**திருவள்ளூர், ஜன.24:**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி - ஆரணி இடையே புதிய மினி பேருந்து சேவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி 9-ஆம் தேதி பாடியநல்லூரில் நடைபெற்ற 'உங்கள் கனவைச் சொல்லுங்கள்' திட்டத் தொடக்க விழாவில், ஆரணி பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி பிரியங்கா என்பவர் இப்பகுதிக்கு போதிய பேருந்து வசதி இல்லாதது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேரில் கோரிக்கை விடுத்தார். மாணவியின் கோரிக்கையை ஏற்று முதல்வர் உடனடியாக உத்தரவிட்டதன் அடிப்படையில், தற்போது மினி பேருந்து சேவை நடை முறைக்கு வந்துள்ளது. இதனை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உரிய நேரத்திற்குச் செல்ல வழிவகை செய்த முதல்வ ருக்கு, மாணவி பிரியங்கா மற்றும் அப்பகுதி மக்கள் தங்கள் நன்றியைத் தெரி வித்துள்ளனர்.

## 18 சேவைகள் அடங்கிய 'ஸ்பிரின்ட் 1' பதிவுத் துறையின்கீழ் புதிய திட்டம் தொடக்கம்




**சென்னை, ஜன.24:**

பதிவுத்துறையின் ஸ்டார் 3.0 திட்டத்தின் கீழ், காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகை இல்லா ஆவணப்பதிவு, தானியங்கி பத்திர உருவாக்கம் உள்ளிட்ட 18 சேவைகளை உள்ளடக்கிய 'ஸ்பிரின்ட் 1' செயல் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசுநேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: பதிவுத்துறையின் ஸ்டார் 3.0 மென்பொருள் திட்டத்தின்கீழ் 18 புதிய சேவைகளை உள்ளடக்கிய 'ஸ்பிரின்ட் 1' செயல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், பதிவுத்துறை செயலர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த புதிய செயல் திட்டத்தில், காகிதமில்லாமல் இணைய வழியில் ஆவணங்கள் சமர்ப்பிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு சொத்தை எழுதிக் கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரின் அடையாளமானது ஆதார் வழிபெறப்பட்ட குறுஞ்செய்தி அல்லதுவிரல் ரேகை வழி சரிபார்க்கப்பட்டு ஆவணதாரர்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி, ஆவணவிவரங்கள் சரியாக இருக்கும்பட்சத்தில், ஆவணம் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு மின்னணு ஆவணமாக இணையதளம் வழியாக பொதுமக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இணையவழி ஆவணப் பதிவு அதேபோல, புதிய அடுக்குமாடி குடியிருப்பை வாங்கும்போதும், மனைப் பிரிவுகளில் இருந்து மனைகளை மட்டும் வாங்கும்போதும், மக்கள் சார்பதிவாளர் அலுவலகம் செல்லாமலேயே இணையவழியாக ஆவணப் பதிவுக்கு சமர்ப்பிக்க அனுமதிக்கப்படும். மேலும், அரசு வாரியங்களால் எழுதிக் கொடுக்கப்படும் சொத்துகளுக்கு சம்பந்தப்பட்ட வாரிய அலுவலகத்தில் இருந்தே பத்திரத்தை பதிவுக்கு தாக்கல் செய்து, பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை உடனே தரவிறக்கம் செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் பிறர் உதவியின்றி, சொத்து தொடர்பான குறைந்தபட்ச விவரங்களை உள்ளிட்டு, ஆவணத்தை தாங்களே உருவாக்கும் வகையில், மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் ஆவணத்தை காகிதமில்லா ஆவணப்பதிவு முறையிலோ, அச்சுப்பிரதி எடுத்து வழக்கமான பத்திரப்பதிவு முறையிலோ பதிவு செய்து கொள்ளலாம்.

இதுதவிர, நடைமுறையில் உள்ள ஆன்லைன் கட்டண வசதி உடன் ரூ.1,000-க்கும் குறைவான பணத்தை குறுபணப் பரிவர்த்தனை இயந்திரம் (பாயின்ட் ஆஃப் சேல்), க்யூஆர் கோடு, யுபிஐ வழி பணம் செலுத்தும் வசதியும் இதன்மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அடுக்குமாடி குடியிருப்பு மறுவிற்பனை ஆவணத்தில் வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி உள்ளிட்ட வசதிகள் இருப்பதை உறுதி செய்யும் நிலையில், கட்டிடக் களப்பணியின்றி பதிவு செய்த அன்றே ஆவணங்களை திருப்பித் தரும் வகையில் மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் சொத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் கோருதல், வெளிநாடுகளில் வசிக்கும் மக்கள் அளிக்கும் பொது அதிகார ஆவணங்கள், நீதிமன்ற ஆணைகள் உள்ளிட்ட ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை ஆன்லைன் வழி உடனுக்குடன் மையக் கணினியின் மின்னணு கையொப்பத்துடன் வழங்கும் புதிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

'TNREGINET' என்ற கைபேசிசெயலி வழியாக வில்லங்கச் சான்று ஆகியவற்றை எளிதாக அறியும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சென்னை, விழுப்புரம், தென்காசியில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரிப்பு

**சென்னை,ஜன.24:**

சென்னை, விழுப்புரம், தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்து வருவதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.




சிக்குன் குனியா என்பது ஏ.டி.எஸ். வகை கொசுக்களால் பரவும் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் ஆகும். இந்த காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் மூட்டு வலி, அதீத தசை வலி, உடல் அசதி, தலைவலி ஆகியவை ஏற்படும். தமிழகத்தில் கடந்த 2007-ம் ஆண்டு சிக்குன் குனியா பாதிப்பு தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்பின்னர், சிக்குன் குனியா பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

தற்போது சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்து வருவதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. மாவட்ட அளவில் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஆஸ்பத்திரிகள் மற்றும் ஆய்வகங்களில் உரிய நேரத்தில் சிக்குன் குனியா பரிசோதனைகளை முன்னெடுத்து நோய்ப் பரவலைத் தடுப்பது அவசியம். ஆஸ்பத்திரிகளில் டெங்கு அல்லது சிக்குன் குனியாவுக்கென பிரத்யேக வார்டுகளை அமைக்க வேண்டும். பாதிப்பை கண்டறியும் எலிசா பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையானஉபகரணங்களை போதிய அளவு இருப்பில் வைத்திருப்பது கட்டாயம். நடமாடும் மருத்துவ விரைவுக் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

## ஆன்லைன் முதலீட்டில் அதிக லாபம் பெறலாம் என சமூக வலைதளங்களில் மோசடி

**தூத்துக்குடி, ஜன.24:**

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆன்லைன் முதலீட்டில் அதிக லாபம் பெறலாம் என சமூக வலை தளங்கள் மூலம் நடைபெறும் மோசடி குறித்து பொதுமக்களுக்கு காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த சில நாட்களாக தூத்துக் குடி மாவட்டத்தில் பொதுமக்களை குறிவைத்து சைபர் குற்றவாளிகள் சமூக ஊடகங்கள் மூலம் குறிப்பாக டெலிகிராம், இன்ஸ்டாகிராம், ஸ்நாப்சாட், வாட்ஸ்அப் (Telegram, Instagram, Snap chat ,WhatsApp) மூலமாக போலி யான முதலீடு மற்றும் ஆன்லைன் வர்த்தக திட்டங்களை பரப்பி வருகின்றனர். இந்த வகை மோசடிகளில் குற்ற வாளிகள் டெலிகிராம் மூலம் பொது




மக்களை தொடர்புகொண்டு, அதிக லாபம் கிடைக்கும் என்று உறுதி அளித்து முதலீடு செய்ய தூண்டு கின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை பெறுவதற்காக, முதலில் அவர்களை டெலிகிராம் குழுக்களில் சேர்த்து, போலியான லாப ஸ்கிரீன்ஷாட்கள் மற்றும் தவறான வெற்றி தகவல்களை பகிர்ந்து, உண்மையான வர்த்தக நடவடிக்கை போல் தோற்றத்தை உருவாக்குகிறார்கள். முதலீடுகளில் சிறு லாபங்களை காண்பித்து வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற்ற பின்னர், அதிக தொகையை முதலீடு செய்யுமாறு கூறி, உண்மையான முதலீட்டு இணைய தளங்களைப் போல் வடிவமைக்கப்பட்ட போலி வர்த்தக இணையதளங்களுக்கு வழி நடத்துகின்றனர். இத்தகைய போலி இணைய தளங்களில் வர்த்தக விளக்ளப்படங்கள் (candlestick) நேரடி விலை மாற்றங்கள் போன்றவை காட்டப்பட்டு அனைத்தும் உண் மையாக தோன்றும் வகையில் கையாளப்படுகின்றன. இதனை நம்பி அதிக லாபம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பாதிக்கப்பட்ட வர்கள் பணம் செலுத்துகின்றனர். பின்னர் சைபர் மோசடியாளர்கள் அவர்கள் தொடர்பை துண்டித்து விடுவதையடுத்து பொதுமக்கள் தங்கள் முதலீட்டு பணத்தை திரும்பப் பெற முடியாமல் மோசடி அடைகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் தற்சமயம் இதுபோன்று பொது மக்களின் விரைவான லாப ஆசையை பயன்படுத்தி போலி இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகக் குழுக்களின் மூலம் திட்டமிட்டு இவ்வகை ஆன்லைன் முதலீட்டு மோசடி புகார்கள் கணிசமாக அதிகரித்து வருகின்றது. எனவே சைபர் குற்றவாளிகளிடமிருந்து பொதுமக்கள் தங்களை தற்காத்துக்கொள்ளுமாறு சைபர் குற்றப்பிரிவு கேட்டுக் கொள்கிறது. முதலீட்டு அழைப்புகளை தவிர்த்திடுக எனவே, பொதுமக்கள் அனைவரும் எந்தவொரு ஆன்லைன் முதலீட்டு திட்டத்திலும் ஈடுபடும் முன் மிகுந்த விழிப்புடன் செயல்பட வேண்டும். குறிப்பாக, தெரியாத சமூக ஊடக தொடர்புகள் அல்லது சரிபார்க்கப்படாத இணையதளங்கள் மூலம் வரும் முதலீட்டு அழைப்புகளை தவிர்க்க வேண்டும்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### கொய்யா இலையின் மருத்துவ குணங்கள்



கொய்யாப்பழத்தில உள்ள அதிக அளவு VITAMIN C, உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துது. இதில் உள்ள நார்ச்சத்து (FIBER) செரிமானத்திற்கு உதவி, மலச்சிக்கலைக் குறைக்கிறது. மேலும், கொலஸ்ட்ராலைக் குறைத்து இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுது.

நம்ம உடல் ஆரோக்கியத்தில கொய்யா மர இலையின் (GUAVA LEAF) பங்கு என்ன என்று இந்தப் பதிவில் பார்ப்போம்.

நம்ம ஊர்ல எல்லா வீட்டுத் தோட்டத்திலும் சுலபமா கிடைக்குற ஒரு மரம்னா அது கொய்யா மரம்தான். கொய்யா பழம் மட்டும் இல்ல, அந்த மரத்தோட இலைகளும் ரொம்பவே பயனுள்ளவை. பாட்டி, அம்மா காலத்திலிருந்தே கொய்யா இலைகளை மருந்தா பயன்படுத்திட்டு வராங்க. இப்பவும் இயற்கை வைத்தியத்துல இதுக்கு நல்ல மதிப்பு இருக்கு.

முக்கியமா, வயிறு சம்பந்தமான பிரச்சனைகளுக்கு கொய்யா இலை ரொம்ப நல்லது.

வயிற்றுப்போக்கு, வயிறு வலி, ஜீரண கோளாறு வந்தா, கொய்யா இலைகளை தண்ணியில போட்டு காய்ச்சி குடிச்சா சீக்கிரம் நிவாரணம் கிடைக்கும். குடலுக்குள்ள இருக்குற கெட்ட கிருமிகளை அழிக்க உதவுது.

அடுத்து, சர்க்கரை நோயாளிகள் காலை நேரத்தில கொய்யா இலை கஷாயம் குடித்து வந்தால் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படும்.

வாய் புண், பல் வலி, ஈறு வீக்கம் இருந்தாலும் கொய்யா இலைகளை கொதிக்க வைத்து அந்த தண்ணியால வாய் கொப்பளிச்சா, கிருமிகள் குறையும்; வலியும் தணியும்.

அதுமட்டுமில்ல, முடி உதிர்வு, பொடுகு பிரச்சனைக்கு கொய்யா இலை தண்ணியால தலை கழுவினா நல்ல பலன் கிடைக்கும்; முடி வலுவாகும்.

கொய்யா மர இலை, சருமப் பிரச்சனைகளையும் சரி செய்யும். முகத்தில் பரு, அரிப்பு, சின்ன சின்ன புண்கள் வந்தா, கொய்யா இலை கஷாயத்தை ஆறவச்சு அந்த இடத்துல தடவினா நல்ல பலன் கிடைக்கும். இலைகளில் இருக்குற ஆன்டி-பாக்டீரியல் தன்மை, கிருமிகளை அழிச்சு, சருமத்தை சுத்தமா வச்சிருக்கும். அதனால இப்ப நிறைய இயற்கை அழகு சாதனங்கள்ல கூட கொய்யா இலை சாறு பயன்படுத்தறாங்க.

மேலும், உடம்புல நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் கொய்யா இலை உதவுது. அடிக்கடி சளி, இருமல், காய்ச்சல் வர்றவங்க கொய்யா இலை கஷாயத்தை வாரத்துல இரண்டு மூணு தடவை குடிச்சா உடம்பு வலுவாகும். ரத்தத்துல இருக்குற நச்சுகளை வெளியேற்ற உதவுறதால, உடம்பு சுறுசுறுப்பா இருக்கும்.

மொத்தத்துல, மருந்துக்கடைக்கு ஓடாம, நம்ம வீட்டு தோட்டத்திலேயே கிடைக்குற கொய்யா மர இலைகள், உடம்புக்கு ஒரு இயற்கை வரப்பிரசாதம். சரியா பயன்படுத்தினா, சிறு சிறு உடல் பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வா அமையும்.

கொய்யா மரம் முழுக்க முழுக்க நமக்கு பயன் தர்ற ஒரு மரம்னு சொல்லலாம். பழமும் நலம், இலைகளும் நலம் அதனால இந்த மரத்தை பாதுகாத்து, இவற்றை சரியான முறையில பயன்படுத்தினா நம்ம உடல் ஆரோக்கியத்திற்கு பெரிய உதவியா இருக்கும்.

3. நோய் எதிர்ப்புப் பண்புகள்: கருப்பு மற்றும் வெள்ளைப் பூண்டுகள் இரண்டுமே நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன. ஆனால், கருப்பு பூண்டில் இருதய மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் அதிகம்.

## திருவண்ணாமலையில் விமான நிலையம் அமையுமா..? - அமைச்சர் சிவசங்கர் பதில்

**சென்னை, ஜன.24:**

தமிழக சட்டசபையில் கேள்வி நேரத்தில் பேசிய துணை பேரவைத் தலைவர் பிச்சாண்டி, கீழ்பொன்னாத்தூர் தொகுதியில் ஒரு போக்குவரத்து பணிமனை அமைக்க வேண்டும் என்றும், திருவண்ணாமலைக்கு அதிகபக்தர்கள் வருவதால், உதான் திட்டத்தின் கீழ் ஒரு விமான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் சிவசங்கர், "நிதி ஆதாரத்தை சட்டமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்தால் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். விமான நிலைத்தை பொறுத்த வரையில் புரியாத புதிராக உள்ளது. அவருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பதில் அளித்தார்.

இந்த நிலையில் சட்டசபை கேள்வி நேரத்தின்போது, குளச்சல் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. பிரின்ஸ், கன்னியாகுமரியில் சுற்றுலா பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் சிவசங்கர், கும்பகோணத்தில் நவகிரக சுற்றுலா பேருந்து மற்றும் சென்னையில் 'சென்னை உலா' சுற்றுலா பேருந்து வசதி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளது.

இது போன்று கன்னியாகுமரியில் சுற்றுலா பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

## ம.நீ.ம. செயற்குழு கூட்டம் கமல்ஹாசன் அறிவிப்பு



**சென்னை, ஜன.24:**

மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாக குழு மற்றும் வெளக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நமது தலைவர், மாநிலங்களவை உறுப்பினர் கமல்ஹாசன் தலைமையில் இன்று ஜனவரி 24-ஆம் தேதி சனிக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நாளை காலை 10.30மணிக்கு தொடங்கும் இந்த கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் அனைத்து நிர்வாகிகளும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிரார்கள்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் ரத சப்தமிக்கு 14 உணவு வகைகளுடன் பக்தர்களுக்கு அன்னதானம்

**திருமலை, ஜன.24:**

திருமலையில் ரத சப்தமி விழா 25-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதனையொட்டி, நேற்று திருமலையில் உள்ள அன்னமைய்யா பவனில் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு தலைமையில் உயர் மட்ட அதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் நடந்தது. அப்போது பிஆர் நாயுடு பேசியதாவது: பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசியை தொடர்ந்து மிகப் பெரிய விழாவான ரதசப்தமி திருவிழாவை வெற்றிகரமாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

அதிகாலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை தொடர்ந்து 7 வாகனங்களில் உற்சவரான மலையப்பர் திரு வீதி உலா நடைபெற உள்ளது.



இடையே மதியம் 2 மணி முதல் 3 மணி வரை சக்கர ஸ்நான நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இதனால் 25-ம் தேதி அனைத்து ஆர்ஜித சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது. சர்வ தரிசன டோக்கன் விநியோகமும் 24, 25, 26-ம் தேதிகளுக்கு ரத்து செய்யப்படுகிறது.

ரதசப்தமிக்கு திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு 14 வகை உணவுகள் தயாரிக்கப்பட உள்ளன. மாட வீதிகளில் 24 மணி நேரமும் பக்தர்களுக்கு அன்னதானம், குடிநீர், பால் போன்றவை தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 3,700 ஸ்ரீ வாரி சேவகர்கள் தன்னார்வ தொண்டு ஆற்ற நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அயோத்தி ராமர் கோயிலுக்கு 286 கிலோ தனுசு காணிக்கை!

**புதுடெல்லி, ஜன.24:**

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோயிலில் ராமர் சிலை, கடந்த ஜனவரி 22, 2024-ல் பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டு 2 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. இதையெட்டி, 286 கிலோ எடையுள்ள தனுசு (வில்) நேற்று அயோத்திக்கு வந்து சேர்ந்தது. இது, ராமர் கோயிலுக்கு காணிக்கையாக, ஒடிசாவின் சனாதன ஜாக்ரன் மஞ்ச் சார்பில் அளிக்கப்பட்டுள்ளது.

இது, தமிழ்நாட்டின் கோயில் நகரமான காஞ்சிபுரத்தின் 48 பெண் கைவினை கலைஞர்களால் பஞ்சலோகத்தில் செய்யப்பட்டதாகும். இந்த தனுசை, ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளையின் பொதுச்செயலாளரான சம்பக் ராய், உரிய சடங்குகள் மற்றும் சம்பிரதாய முறையில் பெற்றுக் கொண்டார்.




இந்த நிகழ்வில், ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளை அதிகாரிகள், துறவிகள் மற்றும் பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இது குறித்து சனாதன ஜாக்ரன் மஞ்சைச் சேர்ந்த சந்தோஷ் குமார் பிஸ்வாஸ் கூறும்போது, 'இந்த பிரம்மாண்ட கோதண்டத்தைக் கண்ட அனைவரும் அதன் பிரம்மாண்டம், கலைத்திறன் மற்றும் தெய்வீகத் தன்மையைக் கண்டு மெய்சிலிர்த்தனர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோதண்டத்துடனான ஊர்வலம் ஒடிசாவின் 30 மாவட்டங்கள் வழியாகச் சென்றது.


பக்தர்கள் பல்வேறு இடங்களில் மலர் தூவி, மேளதாளங்கள் முழங்க, 'ஜெய் ஸ்ரீ ராம்' என்ற கோஷங்களுடன் பக்தியுடன் கோதண்டத்தை வரவேற்றனர். இந்த ஊர்வலம் ஒரு மத யாத்திரையாக மட்டுமல்லாமல், சனாதன கலாச்சாரம் மற்றும் தேசிய ஒற்றுமையின் சின்னமாகவும் மாறியது' என்றார்.

## திருமலையில் இலவச திருமணங்கள் - பக்தர்களிடையே வரவேற்பு

**திருமலை, ஜன.24:**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் கடந்த 2016ம் ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி இலவச திருமண திட்டம் தொடங்கப்பட்டது. இதில் பங்கேற்கும் மணமக்களுக்கு புரோகிதர் பங்கேற்று அவரவர் மரபுப்படி திருமணத்தை இலவசமாக செய்து வைக்கிறார். இதற்கான மங்கள வாத்திய கலைஞர்களும் இலவசமாக பங்கேற்கிறார்கள்.

தேவஸ்தானம் சார்பில் திருமலையில் உள்ள 'கல்யாண வேதிகா' எனும் இடத்தில் இந்த இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. திருமணத்தின் போது மஞ்சள், குங்குமம், கங்கனங்கள் வழங்கப்படுகிறது. திரு



மணத்திற்கு தேவையான மாலை, கூறை புடவை, வேட்டி போன்றவை மட்டும் திருமண வீட்டார் கொண்டு வந்தால் போதுமானது. மிகவும் எளிமையான முறையில் இந்த திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது.

திருமணம் முடிந்த கையோடு, ரூ. 300 சிறப்பு தரிசனம் வாயிலாக (இதுவும் இலவசமாக) புதுமண தம்பதியினர் மற்றும் இவர்களின் பெற்றோர் என மொத்தம் 6 பேருக்கு சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பையும் திருப்பதி தேவஸ்தானம் ஏற்படுத்தி கொடுக்கிறது. அதன் பின்னர் அனைவருக்கும் லட்டு பிரசாதமும் இலவசமாக வழங்கப்படுகிறது.

2016-ல் தொடங்கி கடந்த 2025 டிசம்பர் மாதம் இறுதி வரை மொத்தம் 26,777 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. கண்டிப்பாக இரு வீட்டாரும் இந்துக்களாக இருக்க வேண்டும். அதுவும் இது முதல் திருமணமாக மட்டுமே இருத்தல் அவசியம். மணமகளுக்கு வயது 18, மணமகனுக்கு வயது 21 நிரம்பி இருத்தலும் அவசியம்.

இந்த திருமணத்துக்கு தேவஸ்தானத்தின் இணையதளத்தில் ஆன்லைன் மூலமாகவும் முன்பதிவு செய்து கொள்ளலாம். திருமணம் முடிந்த பின்னர், இது சட்டப்படி பத்திரப்பதிவும் செய்யப்படுகிறது. ஏழுமலையான் குடிகொண்டிருக்கும் திருமலையில் ஏழை, பணக்காரர்கள் என்கிற பாகுபாடு இன்றி பலர் திருமணம் செய்து கொள்வதை ஒரு பாக்கியமாகவே கருதுகின்றனர்.






## நெல்லையப்பர் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

**நெல்லை, ஜன.24:**

நெல்லையப்பர் -காந்திமதி அம்பாள் கோவிலில் ஆண்டுதோறும் தைப்பூச திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டு தைப்பூச திருவிழா இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 5 மணி அளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. சுவாமி சன்னதியில் உள்ள பிள்ளையார் கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து தினமும் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக, பூஜைகள் நடைபெறுகிறது.

வரும் 26-ந்தேதி (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு சுவாமி சன்னதியில் 'நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல்' நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனையும், பின்னர் பஞ்ச மூர்த்திகள் வீதிஉலாவும் நடைபெறுகிறது. இதனைத்தொடர்ந்து பிப்ரவரி மாதம் 1-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலையில் நெல்லை சந்திப்பு கைலாசபுரம் தைப்பூச மண்டபத்தில் எழுந்தருளும் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு பூஜையும், அதை தொடர்ந்து தாமிரபரணி ஆற்றில் தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. 2-ந்தேதி காலை 10 மணிக்கு கீழரதவீதி சவுந்தர சபை மண்டபத்தில் நடராஜர் திருநடன காட்சியும், பின்னர் சந்தி விநாயகர் கோவில் அருகே திருக்காட்சி வைபவமும் நடைபெறுகிறது. 3-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு சொக்கப்பனை முக்கு அருகே உள்ள சந்திர புஷ்கரணி எனப்படும் வெளி தெப்பக்குளத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

## செங்கோட்டை சிவன் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றம்

**தென்காசி, ஜன.24:**

செங்கோட்டையில் உள்ள தர்மஸம்வர்த்தினி அம்பாள் சமேத குலசேகரநாதசுவாமி கோவிலில் ஆண்டு தோறும் தைப்பூச திருவிழா கோலாகலமாக நடத்தபடுவது வழக்கம். அவ்வகையில் நடப்பாண்டு தைப்பூச திருவிழா நேற்று தொடங்கியது.

அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகளுக்குப் பின்னர், 5.20 மணிக்கு மேல் 6.20 மணிக்குள் திருக்கொடியேற்றம் நடைபெற்றது. கொடியேற்ற விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

மாலை 5.00 மணிக்கு ஆவாஹன ஸ்ரீபலி விழா தொடங்கியது. சுவாமி மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கரத்துடன் தீபாராதனை காட்டப்பட்டு பக்தர்களுக்கு அருள் பிரசாதங்கள் வழங்கப்பட்டன். இரவு 9.00 மணிக்கு சுவாமி - அம்பாள் ஏக சிம்மாசன வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

## நொடிகளில் தகவல்... ஆனால், நெடுநாளைய பாதிப்பு - டிஜிட்டல் உலகின் மறுபக்கம்!

தகவல் தொடர்பு சாதனங்கள் உலகை இணைத்து, தகவல்களை விரைவாகப் பகிர உதவுகின்றன.கல்வி,வணிக வளர்ச்சி, உறவுகளைப் பேணுதல் போன்ற நன்மைகள் இருந்தாலும் பல தீமைகளும் உள்ளன. எனவே சரியான பயன்பாடு என்பது மிகவும் அவசியம்.

தகவல் தொடர்பு சாதனங்களின் நன்மைகள்:

* நவீன உலகின் அத்தியாவசிய அங்கமாக மாறியுள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் தொலைவில் உள்ளவர்களுடன் நொடிகளில் பேசவும், பார்க்கவும் உதவுகிறது. இந்த உலகளாவிய இணைப்பு சிறந்த நன்மைகளில் ஒன்றாகும்.



* மின்னஞ்சல், குறுஞ்செய்தி, சமூக வலைதளங்கள் மூலம் தகவல்கள் உடனடியாக பரவுகின்றன. இந்த விரைவான தகவல் பரிமாற்றம் இன்றைய அவசர உலகில் மிகவும் அவசியம்.

* இணையம் மூலம் பல்வேறு துறைகளைப் பற்றிய தகவல்களைப் பெறலாம். புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். இது கல்வி மற்றும் அறிவு வளர்ச்சியை பெருக்க உதவுகிறது.

* ஆன்லைன் ஷாப்பிங், விளம்பரம், வாடிக்கையாளர் கருத்துகளைப் பெறுதல், உலகளாவிய செயல்பாடுகளை நிர்வகித்தல் போன்ற வணிக வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

*திரைப்படங்கள், இசை, விளையாட்டுகள் மூலம் பொழுதுபோக்கிற்கான சிறந்த வாய்ப்புகளையும் வழங்குகிறது.

* வரைபடங்கள் மூலம்(GPS) எளிதாகப் புதிய இடங்களைக் கண்டறிய உதவுகிறது.

*வீடியோ கான்பரன்சிங் மூலம் தொலைவிலிருந்தே கூட்டங்களை நடத்தி திறமையான நிர்வாகம் செய்யவும் உதவுகிறது.

தகவல் தொடர்பு சாதனங்களின் தீமைகள்:

* அதிகப்படியான பயன்பாடு குறிப்பாக வீடியோ கேம்கள், தேவையற்ற விஷயங்களை பார்ப்பது போன்ற பழக்கத்திற்கு அடிமையாகி மன உளைச்சலைத் தருகிறது இந்த இணைய அடிமைத்தனம்.

* கண் எரிச்சல், பார்வை மங்குதல், தலைவலி, தூக்கமின்மை (மெலடோனின் குறைபாடு), உடல் சோர்வு போன்றவை ஏற்படுகின்றன.




* வங்கி மோசடிகள், தனிப்பட்ட தகவல்கள் திருட்டு போன்ற சைபர் குற்றங்கள் அதிகரிக்கின்றன.

* போலிச் செய்திகள், தவறான தகவல்கள், வதந்திகள், இணைய மோசடிகள் பரவ அதிகம் வாய்ப்புள்ளது.

*நவீன தகவல் தொடர்பு சாதனங்களால் நேருக்கு நேர் பேசும் பழக்கம் குறைந்து விடுவதுடன், சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படும் அபாயம் உள்ளது.

* படிக்கும் பொழுதும், வேலை செய்யும் பொழுதும் கவனச் சிதறலை ஏற்படுத்துகிறது; சுய சிந்தனையை குறைக்கிறது.

* டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் பல வேலைகள் தானியங்கி மயமாக்கப்பட்டு, வேலை வாய்ப்பில் நிச்சயமற்ற நிலையை உருவாக்குகிறது.

தகவல் தொடர்பு சாதனங்கள் நவீன உலகத்தின் அத்தியாவசிய அங்கமாக மாறியுள்ளது. அவை மனித வாழ்வை எளிதாக்கி, உலகை இணைத்திருந்தாலும், அவற்றின் தீமைகளை உணர்ந்து பொறுப்புடனும், அளவோடு பயன்படுத்துவதே ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் உலகை உருவாக்குவதற்கான சிறந்த வழியாகும்.

# விடா முயற்சி...!!

முரளி கல் சிற்பத்தை செதுக்கி கொண்டே இன்னும் இரண்டு நாளில் இதை முடித்து விட வேண்டும். தன்னுடைய ஆசிரியர் வந்து பார்த்துவிட்டு என்ன சொல்வாரோ? என்று மனதில் ஒரு பதட்டம் நிலவியது. தான் வடித்த சிலையின் முகத்தை பார்த்தான். ஆறுமுகம் கொண்ட ஆறுமுகனை பார்த்து சற்று ஆறுதல் அடைந்தான் .ஹூம்....! மூன்று வருடத்திற்கு முன்பு அவனுடைய மனம் சென்றது. மகாபலிபுரம் சிற்பக் கல்லூரியில் அவன் ஆசையுடன் சேர்ந்தான். சிலை வடிப்பது அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஒரு வருடம் தான் கல்லூரி முடித்தான் . விதி விளையாடியது. அவனுடைய தந்தையார் விபத்தில் சிக்கி இறந்துவிட்டார். எனவே ,அவனால் தொடர்ந்து கல்லூரியில் பயில முடியவில்லை. குடும்ப சூழ்நிலையால் சொந்த ஊருக்கே வந்து விட்டான். குடும்பத்தை பாதுகாக்கும் பொறுப்பு வந்ததால் கூலி வேலைக்கு சென்று விட்டான் .ஆனாலும் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் கழனியில் இருக்கும் கல்லைக் கொண்டு வந்து உளியால் செதுக்குவான் .ஆனால் சிலை உடைந்து விடும். ஐந்து முறை அழகான முருகன் சிலை வடிக்க முற்பட்டு தோற்று விட்டான் .ஒரு சமயம் வெளியூருக்கு செல்லும்போது அவனது ஆசிரியரை பஸ்ஸில் பார்த்தான். ஆசிரியரும் முரளியை பார்த்து எப்படி இருக்கிறாய்? என்ன செய்கிறாய் ?என்று விசாரித்தார் . அவன் தன்னைப் பற்றியும், தன்னுடைய வேலையை பற்றியும் கூறினான் .சிற்பம் வடிக்க ஆசை ஆனால் முடியவில்லை தோற்றுக்கொண்டே இருக்கிறேன் என்றான். ஒரு லட்சியத்தை அடைய வேண்டும் என்றால் பல இடையூறுகள் கட்டாயம் இருக்கும் விடாமுயற்சியுடன் நீ செயல்பட்டால் ஒரு நாள் நிச்சயம் வெற்றி கிடைக்கும், என வாழ்த்தி விட்டு அவனுக்கு சில அறிவுரைகளை வழங்கினார். எப்பொழுது வேண்டுமானாலும் நீ என்னிடம் தொடர்பு கொண்டு, உன்னுடைய சந்தேகங்களை கேட்கலாம் .நான் முடிந்தவரை உனக்கு உதவி செய்கிறேன் என்றார் ஆசிரியர். இரண்டு மாதங்கள் கழித்து நான் உங்கள் ஊருக்கே வந்து உன்னை பார்க்கிறேன் நீ அதற்குள் முருகன் சிலையை முடித்துவிடு என்று கூறிவிட்டு விடை பெற்றார் .தன்னுடைய அயராது உழைப்பினாலும், தொழில் பக்தியாலும், அழகான முருகன் சிலையை ஆறாவது முறையாக செதுக்கி உள்ளான் முரளி. ஆசிரியரும் நேரில் வந்து பார்த்து அழகில் மயங்கி , அகமகிழ்ந்து போனார். கல்லூரியில் முழுவதுமாக படித்து முடித்த மாணவர்களை விட நீ தத்ரூபமாக சிலையை வடித்திருக்கிறாய் என பாராட்டினார். "வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி "பட்டம் பெற்றார் போல் அவனது மனம் மகிழ்ச்சியில் பொங்கிது.





எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# "மௌன ஒப்பந்தம்"




எதிரே ஒரு மாடி கட்டிடம். பெயர்ப் பலகை வெயில், மழையில் மங்கியிருந்தது. அதை அலுவலகம் என்று சொல்வதற்கே தயக்கமாயிருந்தது. "வாழ்க்கையை ஓட்ட இந்தப் பணி தேவை" என்கிற ஒரே காரணம் அவனை இங்கே கொண்டு வந்திருந்தது. ரவி நிதானமாய் உள்ளே நுழைந்தான். மூன்று மேசைகள். அதில் இரண்டு காலி. ஒரு விசிறி அதீத ஓசையுடன் மெல்லச் சுழன்றது. ரவி தன் மேசையில் உட்கார்ந்த போது முந்தைய நகர அலுவலகத்தில் நடந்த அந்த நிகழ்வு அவன் கண் முன் விரிந்தது. (Flash back)

அந்த ஃபைல் ஒவ்வொரு மேசையையும் தாண்டி ஒவ்வொரு கையெழுத்தையும் சேர்த்துக் கொண்டது.

“உள்நிலை ஆய்வு அறிக்கை : எந்த தவறும் இல்லை.”

ரவியின் கண்கள் அந்த வார்த்தைகளை வைத்த கண் வாங்காமல் பார்த்தன.

அன்று லாரிகள் எதுவும் வரவில்லை. அதிலிருந்து கணினிகள் எதுவும் இறக்கப்படவில்லை. ஆனால் வந்திறங்கியது போல் ரசீதுகள் வந்தன. ’பேப்பர் மட்டும்தான் வரும்” யாரோ சொல்லிச் சிரித்தார்கள்.

அன்று ரவி அதைக் கண்டு கொள்ளவில்லை.

இன்று இந்த ஃபைல் "எந்த தவறுமில்லை" என்று சொல்கிறது.

“ரவி, எல்லாரும் போட்டுட்டாங்க,” என்று பக்கத்து மேசை சொன்னது.

ஒரு கையெழுத்துப் போட்டால் போதும் சம்பளம் தொடரும். வீட்டு வாடகை சிக்காது. குழந்தையின் பள்ளிப் பை அதே எடையிலேயே இருக்கும்.

மேலாளர் கேட்டார், “என்ன பிரச்சினை கையெழுத்துப் போடு?”

“இல்ல சார்...நான் கையெழுத்து போட மாட்டேன்.”

“நீ விளைவுகளைப் புரிஞ்சுக்கிட்டே பேசுறியா?” மேலாளர் கேட்டார்.

“ஆமாம் சார்... தவறு நடக்கலன்னு எழுதிருக்காங்க....ஆனா நடந்தது.”

யாரும் அவனை ஆதரிக்கவுமில்லை. எதிர்க்கவுமில்லை. ஃபைல் அவனைத் தாண்டி நகர்ந்தது.

(Flash back over)

இங்கே ஃபைல்கள் மெதுவாகத்தான் நகர்ந்தன. கையெழுத்துகள் அவசரமாகத் தேவைப்படவில்லை. மதிய வேளையில் வெளியே நின்றான்.எதிரே வெறிச்சோடிய சாலை. ரவியின் மொபைல் அதிர்ந்தது. புதிய எண். எடுத்தான்.

“ரவி... நான்தான்.” அந்தக் குரல் அவனுக்கு உடனே தெரிந்தது. பழைய அலுவலகத்தின் அதே குரல்.

“சொல்லுங்க.”

சிறிது மௌனம். பிறகு, "அன்னிக்கு நீ கையெழுத்து போடலை... ஆக்சுவலா எங்களுக்கும் இஷ்டமில்லை....ஆனா வீட்டுக் கடன்... அம்மாவின் மருந்து... புள்ளையோட பள்ளி... அதனால தவறுன்னு தெரிஞ்சுதான் கையெழுத்துப் போட்டோம்.”

ரவியின் தொண்டை இறுகியது.

“நீ தனியா நிக்கல ரவி. அன்று நின்னது நம்ம எல்லாருக்காகத்தான். அப்போ சொல்ல முடியல... இப்போ சொல்றோம்.”

அழைப்பு முடிந்தது. முன்னால் வெறிச்சோடிய சாலை. மேலே மங்கிய வானம். அவன் முதன்முறையாக அந்த மாற்றல் இடத்தில் முழுமையாகச் சிரித்தான். அது, புரிந்துகொள்ளப்பட்டதற்கான ஒரு மனிதனின் சிரிப்பு.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# ஔவைக் குறளும் 1



Banumathi Nachiyar

தினம் ஒரு செல்பி என்று போட்டவுடன் டி கே கணேசன் சார் அவர்கள் அதோட ஏதாவது ஒரு மெசேஜ் அனுப்பலாமே என்று ஆலோசனை கூறினார்.

தேடல் தானே வாழ்க்கை. ஒரு கதை புத்தகம் எழுதுவதற்காக கௌசல்யா அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவ்வையின் ஞானக் குறள் என்ற ஒரு நூல் இருப்பதாகச் சொல்ல அதனைத் தேடும் ஆர்வம் மிகுந்தது 1915 ல் பூசு குப்புசாமி முதலியார் உரையின் உதவியோடு ஆரம்பிக்கிறேன் ..

ஔவைக் குறளும்
ஆன்மீகப் பதிவும் .. காப்பு

ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து
ஓதிய நூலின் பயன்

விளக்கம்: இந்த உடலுக்கு ஆன்மா ஆதியாய் நின்று எனதறிவு இதனைச் சொல்ல இடம் கொடுத்தது.

ஆதி அட்சரமாகிய பிரணவத்தை உச்சரிக்கின்ற வேதத்தின் சாரத்தை முதலில் கொண்டு இந்நூலைச் செய்கிறேன் என்பது கருத்து.

"அறிவே ஆன்மா" என்பதை வேறொரு பாடல் விளக்குவதாகச் சொல்லும் இன்னொரு பாடலையும் எழுதுகிறேன்.

ஓசையைச் செவியால் ஓர்ந்து
முருவினை கண்ணால் உற்று
நாசியாற் கந்தங் கொண்டு
நாவினால் இரந்துஉய்ந்தும்
பூசிய தோலினாலே புலப்படப்
பரிசமுற்றும் ஆசற உடலினிற்கு அறிவு
தான் ஆன்மா தானே!

நாளை அடுத்த குறளில் அடுத்த செல்பியுடன் பின்னூட்டம்

BANUMATHI NACHIYAR

சகோதரி பானுமதி நாச்சியார் அவர்களுக்கு இனிய காலை வணக்கங்கள் ! என்னுடைய யோசனையுடன் கூடிய எனது அவாவினைச் செயல்படுத்தியமைக்கு மிக்க நன்றி ! அவ்வையின் ஞானக்குறள்..... பகிர்ந்தமைக்கு மிக்க மகிழ்ச்சி . இந்நூலை திருமூலரின் "திருமந்திரத்தின் சுருக்கம்" எனக் கூறுவர். சைவ சமயக் கருத்துக்களைக் கொண்டது. 310 குறள்களையுடையது. மேன்மேலும் பல புதிய செய்திகளைப் பதிவிட்டு மேன்மேலும் புகழ் பெற வாழ்த்துக்கள்.

நானும் விளக்கம் அளிக்க முனைகிறேன்:

@M A RAMAMOORTHY

"ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து ஓதிய நூலின் பயன்" என்பதன் பொருள், நூல்களைக் கற்று, ஆதி அந்தமில்லாத, அனைத்திற்கும் முதன்மையான அந்தப் பிரம்ம அறிவைப் (கடவுள் அல்லது மெய்ப்பொருள் (ஞானம்) பெறுவதே நூல்களைக் கற்பதன் உண்மையான பயனாகும் என்பதாகும். இது, ஔவையார் அருளிய ’ஔவைக் குறள்’ (ஞானக் குறள்) முதல் பாடலின் கருத்தாகும், இது நூல்களின் நோக்கத்தை உணர்த்துவதோடு, தன்னைத்தானே உணர்ந்து ஞானம் பெறுவதே வாழ்க்கையின் இறுதி இலக்கு என்பதைக் கூறுகிறது. நூல்களைக் கற்பதன் மூலம் நாம் உலகியலையும், நம்முடைய உண்மையான இயல்பையும், இறைவனையும் அறிவதே ஞானம்; இதுவே நூல்களின் தலையாய பயன் என்று இந்த வரி கூறுகிறது.



ஒருவர் கற்ற கல்வியின் உண்மையான பயன், தன்னை உருவாக்கிய அந்தப் பேரறிவை (இறைவனை) வணங்குவதும், நற்பண்புகளுடன் வாழ்வதுமே ஆகும்.

தாங்கள் குறிப்பிட்டது:

"ஓசையைச் செவியால் ஓர்ந்து
முருவினை கண்ணால் உற்று
நாசியாற் கந்தங் கொண்டு
நாவினால் இரந்து உய்ந்தும் பூசிய
தோலினாலே புலப்படப் பரிசமுற்றும்
ஆசற உடலினிற்கு அறிவு தான்
ஆன்மா தானே!"

ஓசையைச் செவியால் ஓர்ந்து செவி மூலம் ஒலியை அறிகிறோம்முருவினை கண்ணால் உற்று கண்களால் உருவத்தை (வடிவம்/ஒளி) காண்கிறோம் நாசியாற் கந்தங் கொண்டு மூக்கால் மணத்தை உணர்கிறோம் நாவினால் இரந்து உய்ந்தும் நாவால் சுவையை ரசிக்கிறோம் பூசிய தோலினாலே புலப்படப் பரிசமுற்றும் தோலால் தொடுதலின் இன்பம்/வேதனை உணர்கிறோம். இவ்வாறு ஐந்து புலன்களாலும் உலகை அனுபவிக்கும் இந்த உடலுக்குள், ஆசற உடலினிற்கு அறிவு தான் ஆன்மா தானே!

ஆசை, மாசு இல்லாத உடலுக்கு உயிராகவும் உணர்வாகவும் இருப்பது ஆன்மா (அறிவு) தான்.

கருத்துச் சாரம்:

உடல் என்பது கருவி. ஐம்புலன்கள் அனுபவிக்கும் எல்லாவற்றுக்கும் பின்னால் உணர்வைத் தருவது ஆன்மா/அறிவு. அதுவே மனிதனை உணர்வுள்ள உயிராக மாற்றுகிறது. இது சைவவேதாந்த சிந்தனையுடன் ஒத்த ஒரு ஆழமான தத்துவப் பாடல்.

(தொடரும்).

# துர்க்கை அம்மன் 20 வழிபாட்டு குறிப்புகள்



1. அஷ்டமி தினத்தில் துர்க்கைக்கு அரளி, ரோஜா, செந்தாமரை, செம்பருத்தி போன்ற சிவப்பு புஷ்பங்கள் கொண்டு அர்ச்சனை செய்யலாம். சிவப்பு வஸ்திரம் அம்பாளுக்கு அணிவிக்கலாம்.

2. துர்க்கைக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றி சண்டிகைதேவி சகஸ்ர நாமம் கொண்டு தான் அர்ச்சனை செய்ய வேண்டும். இவை சக்தி வாய்ந்தவை.

3. துர்க்கையின் அற்புதத்தை விளக்கும் துர்கா சப்தசதி என்ற 700 ஸ்லோகங்கள் படிப்பது நல்ல மனநிலையை ஏற்படுத்தும்.

4. பிறவி வந்து விட்டால் கஷ்டங்கள் துன்பங்கள் அதிகம். துக்கங்கள் அதிகமாகும். அந்த துக்கத்தைப் போக்குபவளே துர்காதேவி.

5. கோர்ட்டு விவகாரங்கள் வெற்றி பெறவும், சிறை வாசத்திலிருந்து விடுபடவும் துர்காதேவியை சரண் புகுந்தால், வெற்றியும் பந்த நிவாரணமும் சித்திக்கும்.

6. மிகச் சிறிய விஷயத்திலிருந்து, பெரிய பதவி அடைய முயற்சிக்கும் விஷயம் வரை, நினைத்தது நடக்க வேண்டுமானால் துர்க்கா மாதாவின் திருவடி நிழலைப் பிரார்த்திக்க வேண்டும்.

7. பரசுராமருக்கு அமரத்வம் அளித்தவள் துர்காதேவி.

8. துர்க்கையின் உபாஸனை மனத்தெளிவை தரும்.

9. துர்க்கையை அர்ச்சிப்பவர்களுக்கு பயம் ஏற்படுவதில்லை. மனத்தளர்ச்சியோ சோகமோ ஏற்படுவதில்லை.

10. ஸ்ரீ துர்கையின் வாகனம் சிம்மம். இவளுடைய கொடி மயில்தோகை.

11. ஸ்ரீ துர்க்காவை பூஜை செய்தவன் சொர்க்க சுகத்தை அனுபவித்து பின் நிச்சயமாக மோட்சத்தையும் அடைவான்.

12. ஒரு வருஷம் துர்க்கையை பூஜித்தால் முக்தி அவன் கைவசமாகும்.

13. தாமரை இலையில் தண்ணீர் போல துர்க்கா அர்ச்சனை செய்பவனிடத்தில் பாதகங்கள் எல்லாம் தங்குவதில்லை.

14. தூங்கும் போதும் நின்ற போதும், நடக்கும் போதும் கூட தேவி துர்க்கையை வணங்குபவனுக்கு சம்சார பந்தம் ஏற்படுவதில்லை.

15. ஸ்ரீ துர்கா தேவிக்கு மிகப்பிடித்த புஷ்பம் நீலோத்பலம். இது எல்லா புஷ்பங்களையும் விட நூறு மடங்கு உயர்ந்தது.

16. துர்க்கையின் முன் புல்லாங்குழல் வாத்யம் வாசிக்கக் கூடாது.

17. துர்க்கையை ஒன்பது துர்க்கைகளாக ஒன்பது பெயரிட்டுக் கூறுகின்றது. மந்திர சாஸ்திரம். 1. குமாரி, 2. த்ரிமூர்த்தி, 3. கல்யாணி, 4. ரோஹிணி, 5. காளிகா, 6. சண்டிகை, 7. சாம்பவி, 8. துர்கா, 9. சுபத்ரா.

18. சுவாஸினி பூஜையிலும் 1. சைலபுத்ரி, 2. ப்ரம்ஹசாரிணி, 3. சந்த்ரகண்டா, 4. கூஷ்மாண்டா, 5. மகாகௌரி, 6. காத்யாயனி, 7. காளராத்ரி, 8. மகாகௌரி, 9. சித்திதார்ரி என்ற ஒன்பது துர்க்கைகள் இடம் பெறுகின்றனர்.

19. துர்க்கை என்ற பெயரையும் சதாக்சி என்ற பெயரையும் எவர் கூறுகின்றனரோ அவர் மாயையினின்று விடுபடுவர்.

20. துர்க்கை என்ற சொல்லில் 'த்', 'உ', 'ர்', 'க்', 'ஆ' என்ற ஐந்து அட்சரங்கள் உள்ளன. 'த்' என்றால் அசுரர்களை அழிப்பவள். 'உ' என்றால் விக்னத்தை (இடையூறை) அகற்றுபவள். 'ர்' என்றால் ரோகத்தை விரட்டுபவள். 'க்' என்றால் பாபத்தை நலியச் செய்பவள். 'ஆ' என்றால் பயம் சத்ரு இவற்றை அழிப்பவள் என்பது பொருளாகும்.

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

## தினம் ஒரு தலைவர்கள்

# மறை. திருநாவுக்கரசு வரலாறு

மறை. திருநாவுக்கரசு (12 ஆகத்து 1907 – 1 செப்டம்பர் 1983) இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் சிறை சென்றவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் மகன். அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக எழுதி வெளியிட்டவர்.

இளமையும் கல்வியும்
பள்ளியில் படிக்கும் காலத்தில் இளைப்பிருமல் நோய் திருநாவுக்கரசைத் தாக்கியது. அவருடைய தந்தை மறைமலை அடிகள் அறிதுயில் மருத்துவம் மூலம் அந்தத் தீராத நோயைக் குணப்படுத்தினார். தமக்குப்பிறகு தம் புகழை நிலை நிறுத்துவார் என்று அடிகள் நம்பினார். தந்தையின் விருப்பமும் எண்ணமும் நிறைவேறும் வகையில் மறை திருநாவுக்கரசு திருவையாற்றில் தமிழ்க் கல்லூரியில் படித்து புலவர் பட்டம் பெற்றார். (19261931).

பணிகள்
சென்னை நுங்கம்பாக்கம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் 1932 முதல் 1938 வரை தமிழாசிரியராகவும், நெல்லைச் சீமையில் குலசேகரன் பட்டினம் திருவள்ளுவர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1949 முதல் 1952 வரை தமிழாசிரியராகவும், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் 1952 முதல் 1967 வரை தமிழ் விரிவுரையாளராகவும் பணி புரிந்து சூன் 12, 1967 இல் பணி ஓய்வு பெற்றார்.

பொது வாழ்க்கை
1937இல் மாணவர்களின் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் வகையில்அரசு சட்டம் இயற்றியபோது தமிழகத்தில் பெரும் போராட்டம் ஏற்பட்டது. அப்போராட்டத்தில் மறை திருநாவுக்கரசு ஈடுபட்டார். 1938 இல் இந்தி எதிர்ப்புப் போரில் சிறைப்பட்டார். பெரியார், அண்ணாதுரை ஆகியோருடன் இவர் சிறையில் இருந்தார். மறை

திருநாவுக்கரசு சிறையிலிருந்து விடுதலை ஆனதும் அவருடைய மனைவி ஞானம்மாள் தம் ஐந்து அகவை மகனுடனும் ஐந்து மாதக் கைக்குழந்தையுடனும் இந்தியை எதிர்த்து மறியல் செய்து சிறை சென்றார். ஆறுமாத சிறை வாழ்வு முடிந்து வெளிவந்தவுடன் ஐந்து மாதக்குழந்தை இறந்தது.

மறை திருநாவுக்கரசு தேசியக் காங்கிரசில் உறுப்பினர்; ஒரு தீவிர காந்தியவாதி. காந்தியடிகள் தொடங்கிய அறப் போராட்டத்தில் அரசை எதிர்த்து மேடைகளில் பேசினார். திரு. வி. கவுடன் தமிழகம் முழுக்கப் பயணம் செய்து இந்திய விடுதலைக்காக உரிமைக் குரல்





கொடுத்தார். அதனால் 1941 சனவர் 30 முதல் ஓராண்டு சிறையில் இருந்தார்

சிவநெறி, நாயன்மார்களின் வரலாறு, அவர்களின் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டு சொற்பொழிவுகள் செய்தார். பர்மா, மலேசியா, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து சமயச் சொற்பொழிவுகளை ஆற்றினார். சேக்கிழார் திருப்பணிக் கழகத்தைத் தொடங்கி 1942 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை சேக்கிழார் விழாவைக் குன்றத்தூரில் நடத்தி பெரியபுராணத்தின் மேன்மையைப் பரப்பினார். 1950இல் சேக்கிழார் விழா நடத்தும் வேளையில் தம் தாயார் இறந்ததால் சுடுகாட்டில் தாயாரின் உடலை ஓடோடி வந்து பார்த்துவிட்டு மீண்டும் அவ்விழாவின் ஏற்பாடுகளைச் செய்ய முனைந்து ஈடுபட்டார்.

எழுதிய நூல்கள்
தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் வரலாறு (1959, 2013), (968 பக்கங்கள் கொண்ட இந்நூலுக்கு அரசு பரிசு வழங்கியது)
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
சைவ மத வினா விடை.
நீலாம்பிகை அம்மையார் வரலாறு.
மறைமலையடிகள் வரலாறு சுருக்கம்.
பெரியபுராண ஆய்வுரை அப்பர் (1972)
பெரியபுராண ஆய்வுரை சுந்தரர் (1973)
பெரியபுராண ஆய்வுரை சம்பந்தர் (1979)-தமிழக அரசு 1982இல் முதல் பரிசு வழங்கியது.
பெரியபுராண ஆய்வுரை அறுபதடியார் (1975)
மாணிக்கவாசகர் வரலாற்று ஆய்வுரை (1984)-வெளியீடு மறை.தாயுமானவன்.
மறைமலையடிகளார் நாள்குறிப்பு (1988)-வெளியீடு மறை. தாயுமானவன்.
சைவ மத வினா விடை ஆங்கிலப் பெயர்ப்பு நூலும் வெளிவந்துள்ளது.

பெற்ற பட்டங்கள்
1951இல் சித்தாந்த தினகரன் என்று தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை வழங்கியது.
1956 இல் திருமுறைச் செல்வர் என்று மதுரை ஆதீனம் வழங்கியது.

மேற்கோள் நூல்
தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலைஅடிகளார்
ஆசிரியர் --மறை தி.தாயுமானவன்,( மறை திருநாவுக்கரசின் மகன்)
பதிப்பு: திசம்பர் 2009

# நதியா 59 வயதா?



நடிகை நதியா (59 வயது) தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்த புதிய புகைப்படங்கள் ரசிகர்களிடம் கவனம் ஈர்த்து வருகிறது.

சமீபத்தில் ஹாலிவுட் நடிகை நிக்கோல் மேரி கிட்மேனைச் சந்தித்த புகைப்படத்தைப் பகிர்ந்திருந்தார்.

நோக்கதே தூறத்து காண்ணும் நாட்டு எனும் மலையாளத் திரைப்படத்தின் மூலம் நடிகை நதியா சினிமாவில் அறிமுகமானார்.

தமிழில் பூவே பூச்சூடவா என்ற படத்தில் அறிமுகமான நதியா தெலுங்கு, மலையாளம் என தென்னிந்திய மொழிகளில் முக்கியமான நடிகையாக வலம்வந்தார்.

தோனி தயாரிப்பில் லெட்ஸ் கெட் மேரிட் எனும் படத்தில் கடைசியாக நடித்திருந்தார்.

இந்நிலையில், நதியா பகிர்ந்த இன்ஸ்டா புகைப்படங்கள் கவனம் ஈர்த்து வருகின்றன.

பிரபல நடிகையாக தமிழ் மற்றும் தெலுங்கு சினிமா துறையில் வலம் வருகிறார் மாளவிகா மோகனன். தாராள கவர்ச்சி காட்டி அவர் ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வருகிறார்.

மாளவிகா மோகனன் நடிப்பில் சமீபத்தில் ராஜா சாப் என்ற தெலுங்கு படம் ரிலீஸ் ஆனது. ஆனால் அதற்கு பெரிய அளவில் வரவேற்பு கிடைக்கவில்லை. அடுத்து அவர் சர்தார் 2 படத்தில் நடித்து வருகிறார்.

தற்போது மாளவிகா சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.



தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# அடூர் கோபாலகிருஷ்ணன் மம்மூட்டி படத்தின் பெயர் அறிவிப்பு!



இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் நடிகர் மம்மூட்டி நடிக்கும் படத்தின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

துல்கர் சல்மான் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு பாதயாத்ரா (பாதயாத்திரை) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கலைப்படங்களை இயக்கி இந்தியளவில் பிரபலமானவர் இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன். இவர் இயக்கிய படங்களில் அனந்தரம், மதிலுகள், விதேயன் ஆகிய திரைப்படங்களில் நடிகர் மம்மூட்டி முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்.

தேசிய விருதுகள் உள்ளிட்ட பல விருதுகளை வென்ற அடூர் கோபாலகிருஷ்ணன் இறுதியாக 2016-ல் பின்னேயும் என்கிற மலையாள திரைப்படத்தை இயக்கியிருந்தார்.

இவர்கள் 30 ஆண்டுகள் கழித்து மீண்டும் இணைந்துள்ளது சினிமா ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் திரையரங்குகளில் ஹிட் அடித்த மமூட்டியின் களம்காவல் ஜியோ ஸ்டார் ஓடிடியில் வெளியானது.

# ஓடிடியில் வெளியானது சிறை!



நடிகர் விக்ரம் பிரபுவின் சிறை திரைப்படம் ஓடிடியில் வெளியானது.

2025 ஆம் ஆண்டின் இறுதியில் திரையரங்குகளில் வெளியான இந்தப் படம், ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

அறிமுக இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி இயக்கத்தில் நடிகர்கள் விக்ரம் பிரபு, எல்.கே. அக்‌ஷய் குமார் நடிப்பில் திரைக்கு வந்த சிறை திரைப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகும் வெற்றிப் படமானது.

காதல் கதைக்குப் பின் காவல்துறை அதிகார பின்னணியை மையமாக வைத்து வெளியான இந்தப் படத்துக்கு கூடுதல் திரைகள் ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், சிறை திரைப்படம், இன்று(ஜன. 23) ஜீ5 ஓடிடியில் வெளியாகி ரசிகர்களைக் கவர்ந்து வருகிறது.

# எச்சரிக்கையுடன் அறிவிக்கப்பட்ட கராத்தே பாபு டீசர்!



நடிகர் ரவி மோகனின் கராத்தே பாபு திரைப்படத்தின் டீசர் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பில் யார் ஒருவரையும் குறிப்பிட்டு இந்த டீசர் உருவாகவில்லை எனக் கூறப்பட்டுள்ளதால் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கராத்தே பாபு

டாடா திரைப்படத்தின் இயக்குநர் கணேஷ் கே. பாபு மற்றும் நடிகர் ரவி மோகன் கூட்டணியில் உருவாகியுள்ள 'கராத்தே பாபு' திரைப்படத்தின் டப்பிங் பணிகள் கடந்த டிசம்பரில் துவங்கின.இசையமைப்பாளர் சாம் சி.எஸ். இசையமைக்கும், அரசியல் கதைகளத்துடன் கூடிய இந்தப் படத்தின் டைட்டில் டீசர் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தப் படத்தில், நடிகர்கள் நாசர், சக்தி வாசுதேவன், விடிவி கணேஷ் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், கராத்தே பாபு திரைப்படத்தின் டீசர் நாளை (ஜன.24) காலை 11 மணிக்கு வெளியாகுமெனப் படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

என்ன எச்சரிக்கை?

படக்குழு வெளியிட்ட அறிக்கையில், "இத்திரைப்படத்தில் வரும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே, எந்த தனிநபரையும் குறிப்பிடவில்லை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கதை திமுக அமைச்சரை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது என்ற வதந்திகளுக்கு பதில் அளிக்கும் விதமாக இந்த அறிவிப்பு இருப்பதாக ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.

சமீபத்தில் பொங்கல் வெளியீடாக வெளியான ஜீவாவின் தலைவர் தம்பி தலைமையில் படத்தில் திமுக அமைச்சர் ஒருவரின் "படிச்சி படிச்சி சொன்னனே கன்டிஷனைப் ஃபாலோ பன்னுங்கடானு" என்ற வசனம் இடம்பெற்று வைரலானது குறிப்பிடத்தக்கது.



செல்லம்மா சீரியல் மூலம் சின்னத்திரையில் பிரபலமானவர் நடிகை அன்ஷிதா. இதன்பின் பிக் பாஸ் 8ல் போட்டியாளராக களமிறங்கி நல்ல வரவேற்பை பெற்றார். மேலும், விஜய் டிவியில் 26ஆம் தேதி முதல் புதிதாக ஒளிபரப்பாகப்போகும் 'அழகே அழகு' சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில், ரசிகர்களின் மனம் கவர்ந்த சின்னத்திரை நடிகையாக இருக்கும் அன்ஷிதா, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

**தாம்பரத்தில்**
**திருமண அழைப்பிதழ் கடைக்கு அனுபவமுள்ள**
- ❖ DTP Designer
- ❖ Salesman

(ஆண்/பெண்) தேவை
**9940334020**

---

**WORK AT GUDUVANCHERY**
**SECURITY GUARD & LADY GUARD**
Salary Rs. 22,500 (26 Days) 4 OFF

| | | |
|---|---|---|
| Quali. | : 10th, 12th, Dip. | Benefits : |
| Age | : 25 to 50 years | ESI / EPF & |
| Duty | : (8hrs) Free Food | Accident Policy |
| Height | : 168cms & above | |

**BSS SECURE SOLUTIONS PVT LTD**
**99411 80023**

---

**ரீகல்** FAMOUS DETERGENT BRAND சோப் கம்பெனிக்கு தமிழ்நாடு முழுவதும்
**சோப், பவுடர், லிக்விட்ஸ்**
விற்பனை செய்ய
**டீலர்கள் தேவை**
**90430 18922 / 90430 18923**

---

**Breaking NEWS Card.com** www.breakingnewscard.com
We Create Professional
**Breaking News Cards**
Daily 4 Cards Plus
get News Portal FREE
**Call: 7789951009** ₹999 ONLY

---

**WANTED**
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
**Sal.23,000/-**
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

---

**TVS 2 Wheeler Showroom @ Chennai Req.**
- ✦ Sales Executives- (M / F)
- ✦ Customer Care Executives- (F)
- ✦ PDI Incharge/ Technicians
- ✦ Service Advisors
- ✦ Mechanics
- ✦ Floor In-Charge
- ✦ Pick-up Drop Person (with DL)
- ✦ Spare Parts Executive
- ✦ Billing Executive

Exp. & Fresher's can apply. Preference will be given to Candidates with prior Exp.
Accommodation/Excellent Salary
ESI/PF/Incentives/Annual Bonus
**Ct: 73052 37666 / 73051 87222**

---

**கலிகி அரங்கநாதன்** மாண்ட்ஃபோர்ட் குழும பள்ளிகள்
பெரம்பூர் / அயனாவரம் / கொளத்தூர் / வில்லிவாக்கம்
**ஆட்கள் தேவை**
- Transport Manager டிரான்ஸ்போர்ட் மேனேஜர்
- Drivers / டிரைவர்

விண்ணப்பிக்கவும்
hr.krmgroup@gmail.com
7708066105 / 7358500111 / 25514508
எண் 8, ஆனந்தவேலு தெரு, பெரம்பூர், சென்னை - 600011 (பெரம்பூர் பஸ்நிலையம் அருகில்)

---

**Vilambaram**
We provide Targeted Leads to grow your buisness
Boost your business



Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

---

**THINKING to BUY / SELL / RENT a PROPERTY**
New / Resale ...
Residential / Commercial ...
Plots · Flats · House · Villa · Bungalows · Farm Land · Ware Houses · Factory Sites · Sheds
JOINT VENTURES INVITED
**MK REAL ESTATE**
Tell me your Budget ⇨ We Show Your Home
**Call :7871617005**

---

**WANTED**
**CIVIL ENGINEER**
Age: Below 40 years
Experience Need
Qualification : Dip / BE
Good Salary
West Tambaram, Ch - 45
Email ID: vmgarden9@gmail.com
**88700 02462**

---

**STAR TOURS - அதிரடி ஆஃபர்**

| | |
|---|---|
| தாய்லாந்து | 5 Days-38,000 |
| மலேசியா | 4 Days.32,000 |
| வியட்நாம் கம்போடியா | 6 Days Rs. 75,000 |
| சிங்கப்பூர் மலேசியா | 6 Days.65,000 |

All Inclusive.
**94459 36579 / 95661 47112**

---

தமிழகம் எங்கும் உள்ள
**(Litigation)**
வில்லங்கமுள்ள, இல்லாத சொத்துக்கள் வாங்க,விற்க உரிமையாளர் அணுகவும்
**90039 34668**

---

தமிழகம் எங்கும் உள்ள
**(Litigation)**
வில்லங்கமுள்ள, இல்லாத சொத்துக்கள் வாங்க,விற்க உரிமையாளர் அணுகவும்
**90039 34668**

---

**PURASAIVAKKAM KOSAPET**
Land 1357 Sqft
G+2, 20 Years Old
1A, Padavatamman Koil Lane, Thana Street Last
Rental Income Property
also online Patta, Approval
**Ct: 94445 74758**

---

**CHITLAPAKKAM MAIN ROAD**
No: 5 Balaji Avenue
Opp. Arokya Milk shop
Space for rent 1300 Sq.ft
Ground Floor
Suitable for Banks, Playschool,Hotel, Super Market, Shops Etc. with Parking Facility
**98401 32657**
**99529 66895**

---

**Just499**
**JOB WEBSITE SOFTWARE**
We Provide Complete Job Portal Software Solution
**ONLY Rs. 499**
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

---

**Low Cost Matrimony Website**
999 SITE



**MATRIMONY WEBSITE RS.999/-**
Call/Whatsapp - +91 7789951009

---

**போரூர் கெருகம்பாக்கம்**
**6000 சதுரடி**
30 அடி மெயின் ரோட்டில் (பஜார்) காலி இடம் வாடகைக்கு உள்ளது
குடோன் | CRICKET TURF | SHOWROOM வைக்க உகந்தது.
**98402 19966**

---

**CHENNAI, PORUR**
Nr. Alapakkam Metro Stn
12500 sft. built. G+2
(4200 sft each floor)
Opp Magnolia Apartments.
Indl Power Ready.
**Ct : 94440 66905**
**93818 56824**
**98409 81212**

---

**கலிகி அரங்கநாதன்** மாண்ட்ஃபோர்ட் குழும பள்ளிகள்
பெரம்பூர் / அயனாவரம் / கொளத்தூர் / வில்லிவாக்கம்
**ஆட்கள் தேவை**
- Transport Manager டிரான்ஸ்போர்ட் மேனேஜர்
- Drivers / டிரைவர்

விண்ணப்பிக்கவும்
hr.krmgroup@gmail.com
7708066105 / 7358500111 / 25514508
எண் 8, ஆனந்தவேலு தெரு, பெரம்பூர், சென்னை - 600011 (பெரம்பூர் பஸ்நிலையம் அருகில்)

---

உங்கள்
**COLLEGE & SCHOOL BUS-க்கு**
எங்களிடம் வாடகைக்கு அணுகவும்
எங்களிடம் COLLEGE & SCHOOL-க்கு தேவையான A/C & Non A/C - NEW VAN மற்றும் 32 Seat, 42 Seat, 52 Seat BUS காண்ட்ராக்ட் அடிப்படையில் வாடகைக்கு கிடைக்கும்.
Logo, Name, Yellow Paint
RTO Rules & Regulation
100% பாதுகாப்பான முறையில் எங்களது சர்வீஸ் உள்ளன.
**PRINCE LOGISTICS**
**95000 85244**
**80724 11192**

---

**ஆட்கள் தேவை**
- VTL,
- Radial Drilling,
- Assembly,
- Quality Inspector,

Goodwin Pumps India Pvt Ltd, OMR, Thiruporur.
Ct: 8754010828,
vinoth@goodwinindia.in

---

**ஆட்கள் தேவை**
**WHEELS INDIA LIMITED**
EEPD – Thervoykandigai
நிரந்தர பணியிடங்களுக்கு
CNC ஆபரேட்டர் / Tool Setter தேவை
**Experience :** 5–10 years
**Machine Experience :**
VMC / HMC / CNC லேத் (Lathe)
**Education:** ITI / Diploma / B.E
**Salary:** Based on Skill and Industry standards
**Job Location :** Wheels India Limited, Sipcot Industrial Park, Thervoykandigai, Thiruvallur, Pincode - 601202
**Walk-in Date :**
From 29.12.2025 to 04.01.2026
**தொடர்புக்கு : 90941 15116**

---

**பூந்தமல்லி பைபாஸ்**
சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் 6 கிரவுண்ட்
2/4 வீலர் ஷோரூம் சர்வீஸ் சென்டர் / ஹோட்டல்களுக்கு ஏற்றது.
**90477 34343**
COSMIC PROPERTIES

Besant Nagar, MG Road. Gf-1100 sqft Clinic No Broker. 9445772827

---

**Repco Home Finance**
- We value your Dream
**EMPANELMENT OF VALUER FOR CHENNAI REGION BRANCHES**
"Repco Home Finance Ltd invites application from registered Valuers to be empanelled in respective Chennai Region Branches"
For further details, please visit
**www.repcohome.com**

---

**CHENNAI OBESITY & GASTRO SURGEONS CENTRE**
**WE ARE HIRING**
- ✦ Radiologist/Sonologist
- ✦ Nursing (ANM/B.sc) - 2 yrs Exp.
- ✦ Lab Technician ( M/F ) - 2 yrs Exp.
- ✦ PRO ( 2 yrs Exp in Medcial Field)
- ✦ ECHO Technician (C.A.)- 2yrs Exp.

**7299030915 / 9443812425**

---

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

---

தொழிலதிபர் வீட்டில் ஹவுஸ் கீப்பிங் பணிக்கு தங்கி பணிபுரிய 10ஆம் வகுப்பு படித்த
**பெண்கள்**
தேவை. வயது 18 - 40க்குள்
சம்பளம் :ரூ. 15,000 - 20,000
**Call : 98400 85521 / 99400 77012**

---

**அசுரன்** சோப்பு கம்பெனிக்கு தமிழ்நாடு முழுவதும்
NEW YEAR OFFER

| POWDER | SOAP |
|---|---|
| 1 kg - Rs.35 | 150 gm - Rs. 5.25 |
| 2 kg - Rs.70 | 400 gm - Rs. 15 |

**சோப்பு, பவுடர், லிக்விட்ஸ்**
விற்பனை செய்ய
**டீலர்கள் தேவை**
**91507 62502 / 98849 53069**

---

**அடகு நகை மீட்டு மறு அடகு வைத்து**
**G-Rs. 10000/-**கடன் வழங்கப்படும்.
அடகு நகை மீட்டு மார்க்கெட் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்படும்.
**KRISH FINCORP**
**8838358029, 9840134150**




### மகிழும் சம்பவம்...

புதிய காலையில்
புன்னகையுடன் வரும்
சூரியன் மேகங்கள்
சிந்திய சந்தோஷ மலராக
மழைத்துளி என் மீது விழ
அதிசயக்க வைக்கும் வெற்றி
என்னை பற்றிக் கொள்ள
விழிகளில் சந்தோஷ மலர்
பூக்க அன்னை தந்த பரிசாக
அன்பு வாழ்க்கை கிடைக்க
மித்திரர்களும் என் உடன்
இருந்து மகிழ்விக்க
தென்றல் காற்று மெலிதாக
வீசி என்னைத் தொட
சந்தோஷ தருணமாக
உணர்ந்தேன் சின்ன
சின்ன என் சந்தோஷம்
பெரிய மகிழ்ச்சிக்கு
அஸ்திவாரமானதே



ஒவ்வொரு
விடியலும் இதே
போல் அமைய.
காத்திருக்கிறேன்

**உஷா முத்துராமன்**

### வலி

கடந்துபோகும் கவிதைகளில்
வாசமில்லை..
நிகழும் சம்பவங்களில்
மனம் ஒட்டவில்லை..

இரவின் நெடுநேரம்
உறக்கமில்லை..
விழியின் பெருவெள்ளம்
தீரவில்லை..

நடுநசிக்கப்பால்
விடியலுமில்லை..
தவறிய உறக்கங்களில்
உன் கனவுமில்லை..

இருப்பதும் இறப்பதும்
வேறில்லை.. நீயின்றி..

உயிர்ப்பதும் வாழ்வதும்
அர்த்தமில்லை..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

### காலம் பிறந்தது.!

இங்கு பிறந்தது எதற்காக?
இன்பத் துன்பங்கள்
எதற்காக.? இந்த
கேள்வியினை... நாம்
கேட்பதுண்டு..

தாயின் வயிற்றில் கண்கள்
மூடி கருவில் இருந்தது
ஒருகாலம்.. காயும் ஒருநாள்
கனிகளாகும்.. வளர்ந்து
நின்றதும் ஒருகாலம்..
இடையினில் நமது வாழ்வுப்
பாதையில்.. இன்பத்
துன்பங்கள் சிலகாலம்.!
எதையும் தாங்கும்
இதயத்தோடு
வாழ்வதென்பதே
எதிர்காலம்..

உறுதியோடு நடந்து
பழக.. இறைவன் தந்தது
நற்காலம்.. இறுதி வரைக்கும்
அமைதியாக வாழ்ந்து
மறைவதும் பொற்காலம்..
எந்த காலம் பிறந்த போதும்..
எங்கும் அமைதியின்
ஊர்கோலம்..! சிந்தும்
வியர்வை தந்த வாழ்வை
ஏற்று நடந்தால் எதிர்காலம்.!

**வே.கல்யாண்குமார்**

இருளில் வழி தடவிப்
பார்க்கிறேன்..
விரலில் ஒட்டி இருக்கிறது
உன் பாதம் பதித்து
கசிந்த தேன் !

என்னோடு நீ
இருக்கும்போதெல்லாம்
வாழ்க்கையின்
வஸந்தருது.
நீ விலகும்போதோ



வார்த்தையை
மாற்றிப்
போகிறாய்'துருப்'
பிடித்து
விடுகிறது
என்னுள்
எல்லாமே.

**ரிஷபன்**



### தேநீர் அணை!

சென்று கொண்டிருக்கிறோம்
நானும் நண்பருமாய்,,,!


அதற்கும் முன்னதாய்
காட்சிப்பட்டு அலுத்திருந்த
பகலின் வெளிச்சத்தை
உள் வாங்கி இரவை படர
விடச்செய்திருந்தான்காலன்

தெரு விளக்குகளின் தலை
தட்டி உயிர்ப்பித்திருந்த
பொழுதாய் கனரகமும்
மித ரகமும், இரு சக்கர
வாகனங்களும் உடன்
மண்ணும் மனிதர்களும்!

சாலையோரத்தின்
இரு மருங்கிலுமான
பூத்திருத்தலை கைகொண்டு
பயணிக்கிறோம்
நாற்கரச்சாலையின் ஓரம்
காத்த வெளியில்!

தேநீர் அருந்துகிற
ஆசை வாகனத்தின்
சக்கரங்கள் இரண்டையும்
பிணைத்திழுத்து மனம் கட்டி
வைத்திருந்ததாக!

முளை விட்ட ஆசையை
காயம் கொள்ளாது
கட்டிப்போடவும்
அதற்கு தடுப்பணை
போடவும் ஆளற்ற
வேளையில் ஆசையின்



முனையை
கிள்ளி எறிய
பிரியமற்று
நுழைகிறோம்
தேநீர்
விடுதியினுள்!

**விமலன்.**

### அகிம்சை

அகக்களத்தை
மோதிச்சிதைக்கும்
ஆர்ப்பாட்டங்களையும்
அராஜகங்களையும்
மௌனமாய்த்துவம்சம்
செய்து தர்மதேவன்
சூடிக்கொள்ளும் வாகை!

சிந்தனைச்சிறகுகளால்
உயரே பறக்கின்ற விசித்திர
பாராசூட்டுகளாய்
மனித மனங்கள்!

தென்றலின் திசை நோக்கி
செல்வதா இல்லை
சூறாவளியின்
சூழ்ச்சியில் வீழ்வதா?
பூக்களின் புன்னகையை
நேசிப்பதா இல்லை
முட்களின் நஞ்சில்
புரையோடி கிடப்பதா?
புரியாமல் தவிக்கின்றன!

இங்கே போர்க்களத்திலும்
அறத்தை போதித்தது
அக்காலம் இப்போதெல்லாம்
வெட்டப்பட்ட பசுக்கள்
இறைச்சியாகின்றன

மகளிர் கற்பு
சூறையாடப்படுகிறது!
பிணியுடையோரெல்லாம்
நடந்து மடிகிறார்கள்
புதல்வரைப் பெறாதோர்
அகதிகளாய்த் திரிகிறார்கள்!

பச்சைப்பசேலெனச்
சைவமாய் அவதரித்தவள்
இயற்கை அன்னை
அவளது புதல்வர்களைப்
பலியிட்டு செக்கச்
செவேலென அசைவ
விருந்தாக்குகிறார்கள்
தீவிரவாத மிருகங்கள்!

அமைதியைக்காக்க
ஆயுதங்கள்
கொலுவிருக்கின்றன



நாளும் ஓடி
ஆடிய
வன்முறை
அக்டோபர்
இரண்டில்
ஓய்வெடுத்துக்
கொள்கிறதா?
புதுப்பித்துக்கொள்கிறதா?!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

### காலிப்பாத்திரம்

சுத்தமாய்த் தேய்த்துக் கழுவப்பட்ட அந்த கனமான எவர்சில்வர்
டிபன் பாக்ஸ் வெயிலில் காய்ந்து கொண்டிருக்கிறது


அதில் என் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது.
நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போது ஆறு ரூபாய்க்கு வாங்கியது

அம்மா அதில் இட்லி தோசையென அவ்வப்போது
கொடுத்திருந்தாலும் தாளித்த கடுகு ஆங்காங்கே பதிந்திருக்க
எலுமிச்சை ஊறுகாய்த் துண்டுகள் இரண்டு ஒன்றன் மேல்
ஒன்றாக எண்ணெயில் தோய்ந்து தயிர்சாதத்தில்
நிற்கிறது



இப்போது அம்மா இல்லை அந்தக் காலிப்
பாத்திரத்தில் தயிர்சாதமும் சோகமும் மாறி மாறி
நிரம்புகின்றன!

**எஸ் .சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை



மயிலிறகை பிய்த்து–
வைத்தால் குட்டி போடும்–
எனக் கூற நானும்
ஒவ்வொரு தாளை–

பிரட்டுகிறேன்– குட்டியை
கானும் மாறாக, அதிலுள்ள
புகைப்படங்கள்
அனைத்தும்–



நம்மை
மாதிரியே!!!!

**பானு ஸ்ரீ**
பாண்டிச்சேரி



### விடியாத இரவென்று....!

பகலென் றிருந்தால்
இரவொன் றிருக்கும்!
இரவொன் றிருந்தால்
விடிவொன் றிருக்கும்!

பிறப்பொன் றிருந்தால்
இறப்பொன் றிருக்கும்!
சிறப்பொன் றிருந்தால்
பொறுப்பொன் றிருக்கும்!

இன்பொன் றிருந்தால்
துன்பொன் றிருக்கும்!
அன்பொன் றிருந்தால்
அருளொன் றிருக்கும்!

வரவொன் றிருந்தால்
செலவொன் றிருக்கும்!
நன்மையொன் றிருந்தால்
தின்மையொன் றிருக்கும்!

### புன்னகை தானே பொன்னகை!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மண்ணின் அணிகலன்
மாண்பாம் இயற்கை
பெண்ணின் அணிகலன்
பீடுறுப் புன்னகை!

பிறந்த வீடும் புகுந்த வீடும்
சிறப்பாய் எண்ணின்
சீர்மை துலங்கும்!

நான்கு பண்புகள்
நலமாய்க் கொண்டால்
ஆன்ற பெருமை
அருமை யாகும்!

இல்லத் தரசியாய்
இனிமை கண்டால்
நல்ல முறையில்
நடக்கும் இல்லமே!

எல்லாத் துறையில்
ஏற்ற மாக வல்ல முறையில்
வண்ணமாய் இயங்குவர்!

அன்பும் பண்பும்
அரவணைத்தாலே
புன்னகை என்றும்
பொன்னகை யாமே!

### ஏறு தழுவல்!

நேரிசை வெண்பா!

ஏறு தழுவுதலை
இன்தமிழர் காண்பரே
கூறு புகழைத்தான்
கூர்மையாய்..வீறுடன்
செய்வரே காளைகளைச்
சேர்ந்தநல்காளைகள்
பெய்வரே வீரமே பீடு!

மஞ்சு விரட்டினை
மாண்பாய்க் கனிவுடன்
மிஞ்சிய வீரமுடன்
மேன்மையாய்..அஞ்சாமல்



காண்பரே காளைகள்
கண்ணிய மாகவே
பூணுவர் போற்று
பொலிந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
வடமாதிமங்கலம்.

### புதைந்த புரிதல்

வில் பின்னோக்கி
இழுத்தால்தான் அம்பு
முன்னோக்கி சீரி பாயும்....

வாழை பழத்தோலை கீழ்
நோக்கி உரித்தால்தான்
சுவையான பழத்தை ருசிக்க
முடியும்....!

கீழ் உள்ள கோட்டுக்கு மேல்
எழுதினால்தான் உன்
கையெழுத்துக்கூட
சொலிக்கும்...!

கீழ் நோக்கி
பார்வை கொண்டு
நடந்தால்தான் ...நீ
மேல் உயர்ந்த இடத்தை
அடைய முடியும்....!

ஓடுபோது ஒருகால் பின்
நோக்கி போனால்தான் ஓடி
சாதிக்க முடியும்...!

கீழே நெருப்பு வைத்தால்தான்
ராக்கெட் கூட விண்வெளி
சென்றடைய முடியும்....!



ஆரம்பம் . பின்னால்
இழுத்தால் அது தோல்வி
அல்ல...அது
விருச்சமாகும் பெரும்
வெற்றி....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## நூல் விமர்சனம் :

நூலின் பெயர் : கிழக்கும் மேற்கும் பன்னாட்டு அரசியல் கட்டுரைகள்
ஆசிரியர்: மு. இராமனாதன்
வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்
விலை : ₹290
தொடர்புக்கு: 91–4652–278525




இந்து தமிழ் திசை, ஜூனியர் விகடன், அருஞ்சொல்.காம் உள்பட பல்வேறு இதழ்களில் எழுதிய 34 கட்டுரைகளின் தொகுப்பு இது.

அதிலிருந்து சில துளிகள்:

2. சீனா பறக்க விடும் இந்தியக் கொடி :

பிரதமரின் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றுவோம்(ஹர்கர் திரங்கா) வேண்டுகோளை ஏற்று ஏற்றப்பட்ட கொடிகள் பெரும்பாலும் சீனத்தயாரிப்பாம்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையில் கனடாவில் நடைபெற்ற பொதுநல நாடுகளின் மாநாட்டில்(காமன்வெல்த் )மாநில சபாநாயகர்களும் பங்கேற்றனர்.

மாநாட்டில் ஏற்றப்பட்ட நம் தேசியக்கொடியின் மூலையிலும், "சீனத் தயாரிப்பு "என்பதைப் பார்த்த பேரவைத் தலைவர் அப்பாவு, இதை ஓம் பிர்லாவிடம் முறையிட்ட போது சிறு புன்னகையே பதிலாகக் கிடைத்ததாம். அவர் அங்கிருந்து ஒரு தமிழ்தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில், எங்களிடம் சொல்லியிருந்தால் , ஒரே இரவில் சிவகாசி, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல்லில் நூற்றுக்கணக்கான கொடிகளைத் தயாரித்து கொடுத்திருப்போமே என தன் ஆவலாதியை வெளியிட்டாராம்.

இதற்கு காரணம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பெரிய கொடிகள் (12'× 8') விலை ₹230 முதல் ₹250 வரை விற்கப்பட்டபோது, சீனத் தயாரிப்பு கொடிகள் ₹200க்கு கிடைத்தன. அதற்கு அடுத்த அளவிலான (8' × 6') உள்ளூர் தயாரிப்புகளின் விலை ₹130 முதல் ₹150 ஆகவும், சீனத் தயாரிப்புகளின் விலை ₹90 ஆகவும் இருந்தன.

4. என்று தணியும் இந்திய-சீன எல்லைப் பிரச்சினை?

சீன ஆக்கிரமிப்பு காஷ்மீர் எனும் லடாக் ஐ அடுத்துள்ள அக்சை-சின் மனிதர்கள் வாழத் தகுதியில்லாத இடத்தை இந்தியாவும், அருணாச்சலப் பிரதேசத்தை ஒட்டிய தவாங் ஐ சீனாவும் உரிமை கோருகின்றன.

இந்தியா , சீனா, திபெத் 3நாடுகளுக்கிடையேஓர் எல்லைக்கோடு உருவாக்கப் பட்டது. அதை உருவாக்கிய ஆங்கிலேய அதிகாரியின் பெயராலேயே' மக்மோகன் கோடு' என அழைக்கப்பட்டது.

1947- ல் விடுதலை அடைந்த இந்தியா, இதையே எல்லையாக வரித்துக் கொண்டது. 1949-ல் உள்நாட்டுப் போரில் வென்று ஆட்சியமைத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ' மக்மோகன் கோட்டை' ஏற்க மறுத்து விட்டது.

1959 ல் டெல்லி வந்த சீனப் பிரதமர் சூ- என் - லாய் நீண்ட வாதத்தின் முடிவில், இந்தியா அக்சை-சின்னை சீனாவிற்கு விட்டுக் கொடுத்தால் , தவாங் உள்ளிட்ட அருணாச்சல பிரதேசத்தை சீனா விட்டுக் கொடுக்கும் என்றார்.

பிரதமர் நேரு, இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

1962 இந்திய- சீனப் போரைப் பற்றி பல கற்பிதங்கள் உண்டு. சுருக்கமாகச் சொன்னால், இரண்டு பக்கமும் இருந்த தவறான கருத்துகளே போருக்கு இட்டுச் சென்றன.

திபெத் அரசியலில், இந்தியா தலையிடுகிறது என சீனா நம்பியது. அது தவறு. மறுபுறம் நேரு ஒருதலைப்பட்சமாக எல்லைகளை முடிவு செய்தார். சீனா அதை ஏற்கும் என்று மனப்பூர்வமாக நம்பினார். சீனா இந்தியாவை ஒரு போதும் தாக்காது என்றும் நம்பினார். அவரது நம்பிக்கைகள் தவறானவை என்று இடித்துரைக்க வல்லவர்கள் இல்லாத ஏமரா மன்னனாக இருந்தார் நேரு.

20. அகதிகளாக ஆக முடியாதவர்கள் : யார் அகதி?

அ.முத்துலிங்கம் அவரது கதை ஒன்றில் 'அகதி'க்கு எளிய விளக்கம் கொடுக்கிறார். " பெற்றோர் இல்லாதவன் அனாதை, நாடு இல்லாதவன் அகதி." அகதி என்பவன் சொந்த நாட்டிலிருந்து நிர்பந்தம் காரணமாக வெளியேறுபவன். நாடற்றவன். ஒரு புதிய நாடு அவனை ஏற்றுக் கொண்டால் அதன் பிறகு அவன் புதிய நாட்டின் குடிமகன் ஆவான்.

1951ம் ஆண்டின் ஐ.நா. உடன்பாட்டில் அங்கம் வகிக்கும் நாடுகள்தான் அகதிகளை ஏற்றுக்கொள்ளும்.

இதில் இந்தியா உட்பட பல நாடுகள் அங்கம் வகிக்கவில்லை. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்திலும் அகதிகளை அனுமதிப்பதற்கோ பராமரிப்பதற்கோ கூறுகள் இல்லை.

ஆனால் ஹாங்காங் ஐ.நா உடன்படிக்கையில் கையெழுத்திடாவிட்டாலும் புகலிடம் தேடி வந்தவர்களை திருப்பி அனுப்புவதில்லை என்கிறார் கட்டுரை ஆசிரியர்.

அகதிகளை குடியமர்த்துவது இல்லை என்றாலும் புலம் பெயர்வுக்கு ஹாங்காங் உதவுகிறது என்கிறார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**



### மலர்கள் மலர்கின்றன

வெள்ளை முத்துக்கள்
போன்ற பனித்துளிகள்
மலர்களை முத்தமிட
செடியில் மலர காத்திருக்கும்
மலர்கள் இதழ்கள் விரிக்க
தென்றல் காற்று மெலிதாக
வீசி மலர்களைத் தொட
பல வண்ண மலர்கள் மலர
துடிக்கின்றன அதைக்
கண்ட உள்ளம் மகிழ
விடியல் பறவை மெதுவாக
பறக்கிறதே மலர்ந்த
மலர்களில் இருக்கும் மனம்
மெல்லிய காற்றில் கலந்து
நாசிகளில் தெரிய
மனம் அமைதியை தழுவ
வாழ்க்கையில் ஒரு
நம்பிக்கை சுவாசம் வந்ததே

**உஷா முத்துராமன்**



### மாவீரன் நேதாஜி வாழ்க.வாழ்க.

வெள்ளையர்களை ஓட ஓட
விரட்டியதில் பெரும் பங்கு
வகித்தவன் நீ அடிக்கு அடி
என அடி மேல் அடித்த
அசகாய சூரன் நீ உனது
பெயரை உச்சரித்தாலே
உச்சரித்தவர்களுக்கு
வீரம் பிறக்கும் உலக
மனிதர்கள் யாவரும் சமம்
ஆண்டான் அடிமை இல்லை
அறிவித்தவன் நீ
ஆணவக்காரகளின்
ஆணவத்தை அடித்து
நொறுக்கிய வீரன் நீ
துப்பாக்கி யார் சுட்டாலும்
சுடும் என்று உணர்த்தியவன்
நீ ஆயுதம் ஏந்திய
அறிவிலிகளுக்கு
ஆயுதத்தால் தக்க பதில்
தந்தவன் நீ கொட்டக்
கொட்டக் குனிந்தது போதும்
கொட்டிய கரங்களை
முறித்தவன் நீ

நீ இறந்து விட்டதாக
யார் ? சொன்னது
மாவீரர்களின்
இதயத்தில் என்றும்
வாழ்கிறாய் நீ

தைய்வான் நாட்டில் விமான
விபத்தில் நீ
இறந்து விட்டதாகக் கதை
கட்டினார்கள் தைய்வான்
நாடோ விமான விபத்து
நடக்கவே இல்லை என்று
அறிவித்தது இந்தியாவின்
விடுதலைக்காக முதன்முதலில்
இந்திய ராணுவம்
அமைத்தவன் நீ
பெண்ணுரிமை பற்றி
பேசுகின்றோம் இன்று
பெண்களைப் படையில்
சேர்த்தாய் அன்று
உலகில் எந்த மூலையில்
ஆதிக்கம்நடந்தாலும்
உலகப் போராளிகளின்
தலைவன் நீ

வெள்ளையனே வெளியேறு
என்றாய் அன்று
வெள்ளையனுக்கு வெண்
சாமரம் வீசுகின்றனர் இன்று
தமிழரின் வீரம் அறிந்து
படையில் சேர்த்தாய் அன்று.



அடுத்த பிறவியில்
தமிழனாகப் பிறக்க
ஆசைப்பட்டவர் நேதாஜி.
தமிழராகப் பிறந்ததற்கு
பெருமை கொள்வோம்.

**கவிஞர்**
**இரா.இரவி**






குடை பிடித்து
மழையை ரசிப்பது போன்றது
நீ இல்லாத காதல்!

தினம்,தினம்
எனைத் திண்ணும்
இயந்திர வாழ்க்கை
நரகம் தான் –இருந்தும்
சிலந்திவலையில்
உனக்காக பூச்சியாய் இருந்து
விட்டு போகிறேன்டி!

மூங்கிலை துளைத்து
இசை பெறுவது போன்றது
உன்னை தொலைத்து
வாழ்க்கை?!


என்னை அறிய நீ
நானாக வேண்டுமடி!

எது நடந்தாலும்
காதலித்து கொண்டே
இருப்பேன் உன்னோடு
சேர்த்து இப்பிரபஞ்சத்தையும்
எல்லா காதலும்
தொடக்கத்தில்
இனிக்க தான் செய்கிறது
ஏனோ முடிவு மட்டும்
கொஞ்சம் கசப்பாய் தான்
இருக்கிறது !

நினைச்ச வாழ்க்கை
எல்லோருக்கும்
அமைவதில்லை கிடைச்ச
வாழ்க்கையை முடிந்தளவு
சந்தோசமா
வாழு–ஏனெனில்
அடுத்த நிமிஷம்
நிச்சயமில்லாத
வாழ்க்கை!



**லி.நௌஷாத் கான்**



பல நல்ல உள்ளங்களின்
வேண்டுதலின் பரிசு இவன்!
சிலரின் வன் சொல்லுக்கு
கிடைத்த பதிலடி இவன்!
எதிர்பார நேரத்தில் எங்கள்
வாழ்கையை வசந்தமாக்க
கிடைத்த அற்புதம் இவன்!
எங்கள் வாழ்கையை
அர்த்தமுள்ளதாகவும்
இன்பமாகவும் மாற்றிய
இவனுக்கும் கடவுளுக்கும்
என்ன கைமாறு செய்வதன்று
தெரியாமல் நிற்கிறோம்!
மறவா பல வலி வேதனைகள்
கடந்து ஈன்ற பொழுதினும்
உன் முதல் அழுகை குரல்
மற்றும் உன் முகத்தை முதன்
முதலில் பார்த்த போது
அனைத்து வலிகளும் ஒரே
நிமிடத்தில் மாறியதே!
என்னவன் என் அன்பு
மகனே!
தாயின் மனவலியை தீர்க்க
வந்த ஆண் தேவதையாகிய
அன்பு மகனுக்கு
நான்கு வருட திருமண
வாழ்வில் கிடைத்த
பொக்கிஷம் இவன்!

**பு.வே.காயத்ரி**

## என் அழகு கைபேசியே...



ஆயிரம் இரவுகள் உன்னை
தேட...
என் விழிகள் மட்டும்
ஓர் இரவில் உறக்கம்
தொலைத்தது...
சின்ன சின்ன சுகங்கள்
சுவாசத்தை பனிக்
காற்றாய்...
மயக்கம் தந்த விழிகளுக்கு
மறுப்புச் செய்த கைகள் ...
என் அருமை கைபேசி..
உன்னை தினமும்
தழுவுகின்றேன்..
உன் நிழல் தினமும் என்
கரங்களில்...
கதை கதையாய் ஆயிரம் ஆயிரம் கதைகள்...
என் உள்ளக் கதவை திறந்து உறவுகளிடம் கதை பேசிட..
காதலும் மோதலும் கூட உன் முனைகளில்..
காலம் தன்னிலை கடந்து செல்ல..
கனவுகளையும் கற்றுக் கொடுக்கின்றது..
களவுகளையும் கற்றுக் கொடுக்கின்றது..
தினம் தினம் உரிமையுடன் ஒரு முறையேனும் என்னை காதலி...
உண்மையாக..என் ஆள்காட்டி விரல்
உன்னைத்தடவுவதுபோல்..
என்னையும் வருடி கொடு மென்மையாக..



**கவிஞர் முனைவர்**
**நா மோகன செல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்



## " பிழைப்பு "

மருத்துவ மனையில்
இறந்தவரின் உறவினர்களது
அழுகை தேனாய்
பாய்ந்தது காதில்
அமரர் ஊர்தி ஓட்டுநருக்கு

**வெ. ஆசைத்தம்பி**
தஞ்சாவூர்

## திருக்கொடி பறக்கும்.!

தேசியக் கொடிப் பறக்க
வேண்டும்.. ஆங்கே
திருநாட்டின் புகழ் கேட்க
வேண்டும்.! ஆசையில்
பாரதத் தாயின்.. பாதத்தில்
நான் ஆனந்தக் கூத்தாட
வேண்டும்.!

வாசத்தில் புகழ் மணக்க
வேண்டும்.. இன்ப நேசத்தில்
தாய்நாட்டை நான் நினைக்க
வேண்டும்.! தேசத்தில்
சத்தியத்துச் சுடரை.. இந்த
ஊர்கூடி நெஞ்சத்தே
ஏற்றத்தான் வேண்டும்.!
பாசத்தில் அவள் அள்ளி
யெடுத்து இந்த பாரத
மைந்தனை பாராட்ட
வேண்டும்.!

பூக்களாய் புலர்ந்திடும்
பொழுதே.. ஒரு புதுயுகம்
தோன்றியே மலர்ந்திட
வேண்டும்.! ஈக்கள்போல்
யாவரும் குவிந்தே.. நம்
இணையற்ற தேசத்தை
நாம் மொய்க்க வேண்டும்.!
ஊக்கத்தில் உலகத்தில்
நமது கொடியை.. அந்த
உச்சி வானம் மேலேறி நாம்
ஏற்ற வேண்டும்.!

குடியரசு மலர்ந்ததே என்றே..
ஆங்கு கூடியே புலவர்கள்
கவிபாட வேண்டும்.!
துடிப்புடைய இளைஞர்கள்
இங்கே.. தன் தோள்
தட்டி.. தேசிய கீதத்தை
தான் போற்ற வேண்டும்.!
துடிப்புடன் தடைகளை
உடைத்தே.. நம் தேசத்தில்
யாவரும் முன்னேற
வேண்டும்! அடிவானம்
தொடங்கியந்த..
உச்சிவான்
வரைக்கும்நம்
ஜெயக்கொடி
பட்டொளி
வீசிப்
பறந்திடவே
வேண்டும்.!



**வேகல்யாண்குமார்.**

## மனிதன்

பெண்ணிலிருந்து பிறந்த
மனிதன், விண்ணைத்
தொட்டுக் கனவு
காண்கிறான். அன்பால்
உயர்வதும் அவனே.
அகந்தையால் அழிவதும்
அவனே. ஒரு கையில்
கருணை ஏந்தி
மறுகையில் ஆயுதம்
ஏந்துகிறான். துன்பத்தில்
சுகத்தைத் தேடுகிறான்.
இன்பத்தில் தன்னை
மறந்துவிடுகிறான்.
கற்றதால் ஒளிர்ந்த மனிதன்
உணர்ந்தால் மட்டுமே
முழுமை அடைவான்.
மனித உருவத்தில் சில
மிருகங்கள்
இருக்கின்றன.
மிருகங்கள்
உருவத்தில்
மனித நேயமும்
இருக்கின்றன.



சிறப்பானதைத்தேர்ந்தெடுத்து
சீரிய முறையில் வாழ்வோம்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## பருவம் !

குழந்தைப் பருவத்தில்
அழகாய் இருப்பின்
துருதுருவென இருப்பதாய்
சொல்கிறார்கள் !

வாலிபப் பருவத்தில்
அழகாய் இருப்பின்
'அவனுக்கென்னடா ராசா '
என்கிறார்கள் !

அறுபது வயதுக்கு மேலும்
ஒருவர் வெள்ளை முடியை
கருப்பாக்கி... பர்முடா
டிரவுசரோட சுற்றினால்...
'கிழவனுக்கு வயசாச்சு
இன்னும் வாலிப பையன்னு
நினைப்பு... ' என்கிறது
சுற்றமும் நட்பும் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## மகா நடிகன் !

மனைவி ஊருக்கு
கிளம்பும்போது
சந்தோஷத்தை மறைத்து
துக்கமாய் நடிப்பை
வெளிப்படுத்துவதில் நடிகர்
திலகம் சிவாஜியாகவும் ....

ஊரிலிருந்து கிளம்பி
மனைவி வீடு திரும்பும்போது
துக்கத்தை மறைத்து
சந்தோஷத்தை
வெளிக்காட்டுவதாய்
நடிக்கும் நடிப்பில்
கமலஹாசனையும்
வெளிப்படுத்தும் ஒவ்வொரு
கணவன்மார்களும்
ஆஸ்கர்
விருதுக்கு
தகுதியான
வர்களே !



**எம்.பி. தினேஷ்.**
கோவை

உன்னை நான் சந்தித்த பிறகு
என் நாட்குறிப்பின் ஒவ்வொரு
பக்கமும் கா த ல்
க வி தை க ளா ல்
நிரப்பப்படுகிறது!

## பூ

உன்னைப்பூ என்று
சொன்னதற்காக என்
காதிலேயே சுற்றிக்
கொள்ளப் பார்க்கிறாயே
நியாயமா அன்பே?!

## ருசி

என்னைச்சுற்றிக்
கன்னியர் கூட்டம்
இருந்தாலும் என்
கண்கள் ரசித்து ருசிக்க
ஆசைப்படுவது உன்னை
மட்டுந்தானே அன்பே!



**முத்து ஆனந்த்**
வேலூர்



## பட்டதாரி செக்யூரிட்டி

படித்து வாங்கிய பட்டம்
ஃபைலுக்குள் தூங்குகிறது!

கனவுகள் செக்யூரிட்டி
அடையாள அட்டையாய்
கழுத்தில் தொங்குகின்றன!

“கேட்டைத் திற”
என்பது மட்டும்
எனக்கு தெரிந்த மொழி!

"ஏய் செக்யூரிட்டி"
என்பதே என் பெயர்!

“இவன்
செக்யூரிட்டிதானே?”
என்ற வாக்கியத்தில்
என் பட்டமும், என்
பெற்றோரின் நம்பிக்கையும்
ஒரே நேரத்தில்
அவமதிக்கப்படுகின்றன!

நான் நின்றிருக்கிறேன்
காவலுக்காக அல்ல,
என் பொறுமையை
நானே சோதிக்க!

இரவுகளில் அபார்ட்மென்ட்
தூங்கும் போது,
என் உள்ளம் மட்டும்
வேலை தேடி
எங்கெங்கோ அலையும்!

நாளை இந்த வாசலுக்கு
நான் வரமாட்டேன் என்று
என் கனவுகள் என்னிடம்
வாக்குறுதி கொடுக்கின்றன!

அதுவரை நான்
செக்யூரிட்டி!
அதுவரை என்
மரியாதைக்கு
நோ கேரண்டி!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## ஆட்டம்

புத்தகம் அமைதியாக
இருக்கும்! அதை படித்தவன்
ஆட்டம் போடுவான்!

பாட்டில் அமைதியாக
இருக்கும்! அதை குடித்தவன்
ஆட்டம் போடுவான்!

பணம் அமைதியாக
இருக்கும்! அதை
வைத்திருப்பவன் ஆட்டம்
போடுவான்!

பிணம் அமைதியாக
இருக்கும் ! அதை தூக்கி
செல்பவன் ஆட்டம்
போடுவான்!

மனிதா உன் ஆட்டத்தை
நிறுத்து! ஆண்டவனை
நோக்கி உன் மனதை
நிறத்து!

மன அமைதியோடு
வாழ்ந்திடு!
மனித
நேயத்தோடு
வாழ்ந்திடு!



**ம. இந்திராணி**
திருச்சி

## சங்கமம்..


நினைத்தாலே மணக்கும்...
சந்தனமே..

பொழியாமலேயே என்னை
நனைக்கும்...இளமை
மழையே...

முகம் காட்டி
மலர...வை...
நீயே
அழகின்...
அரசவை...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



என்னவளின் காதலுக்கு
தகுதியற்றவன் தான் நான்.
அதனால் தான் ஏனோ,
இன்று
அவளின்
அளவற்ற
காதலை
இழந்து,
அனாதையாக
நின்று
கொண்டிருக்கிறேன்.



**வே. சுபலட்சுமி**

## பூமி

கடல்அகழியால்
சூழப்பட்ட நிலஅரண்மனை!!!

தேசியநெடுஞ்சாலை
இமயம் முதல் குமரி வரை
சலசலப்பில்லாமல் ஓடிவரும்
கடலில் கலைக்காத
கறுப்புஆறு!!!

தேனீர் இலைக்குள்
தேன்சுரக்கும் அதிசயம்.!!!

உபதேசம்
மரம் நடுவோம்
மழைபெறுவோம்
என்று நான்குமணிநேரம்
சொற்பொழிவாற்றினார்
விறகுக்கடை வியாபாரி.!!!

தென்னையின் வேருக்கு
நீருற்றிய விவசாயிக்கு
நன்றிகடன் செலுத்தியது
இளநீர்.!!!

பனித்துளி
உயிர்கள் எல்லாம்
குளிரில் நடுங்க புல்லுக்கு
மட்டும் வியர்த்தது.!!!

சைக்கிள் டியூப் தினம் தினம்
முள் எமனால் உயிர்
போனாலும் மீண்டும்
உயிர்தெழும் பீனிக்ஸ்.!!!

வயல்வெளியில்
மாடு புல்லை தின்றது.
மாடு முதுகில்
இருந்த
புண்ணை
கொத்தியது
காக்கை.!!!



**பொன்.பனகல் பொன்னையா.**



## விவசாயி உயிர் நாடி

"விவசாயி" என்பதை இப்படி உருவகப்படுத்தலாமோ !

வி – "விதைத்து" விடாமுயற்சியில்
வியர்வை சிந்தி விளைச்சல் செய்யும் ! இந்த "விவசாயி"

வ – வரண்ட நிலத்தில் வரப்பு வெட்டி வடிகால் நீர்ப்பாய்ச்சி
"வயல்வெளியாக" மாற்றியவன் ! இந்த "விவசாயி"

சா – சாகும் நிலை வந்தாலும் "சாகுபடி" செய்து சாதிக்கும்
விவசாயி சாகாத நிலை வேண்டும் சாமி என்று வேண்ட
வைப்பவனோ ! இந்த "விவசாயி"

யி – பூமித்தா"யி"ல் நெற்ப"யி"ர் விளைவித்து
மக்கள் உ"யி"ர்வாழ காக்கின்ற தெய்வம் தான் !
இந்த "விவசாயி"

விவசாயி நம் வாழ்வின்" உயிர்" நாடியே !



**G.A.கோவிந்தராஜ் (எ) சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

1. பணம் இருந்தால் பார்த்து
பார்த்து பேசுவார்கள்
பணம் இல்லை என்றால்
பார்த்தால் மட்டும்
பேசுவார்கள்

2. பிறர் நினைத்ததை
எழுதும் காகிதமாக
இருக்காதே நீ நினைத்ததை
எழுதும் பேனாவாக இரு

3. குறை கூறும்
பலருக்கு
உத்தமனாய்
இருப்பதைவிட
உன்னை நம்பும்
சிலருக்கு
உண்மையாக இரு

4. ஆயிரம் வண்ணங்கள்
உலகில் இருந்தாலும்
உங்கள் மனதில் தோன்றும்
நல்ல எண்ணமே உலகில்
சிறந்த வண்ணம்

5. எப்படி முடியும் என்பதற்கும்
ஏன் முடியாது என்பதற்கும்
உள்ள தூரமே துணிச்சல்

6. தேவை மட்டும் இல்லை
என்றால் மனிதர்கள்
ஒருவருக்கொருவர்
பேசவே யோசிப்பார்கள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## பசியறிந்து பகிர்ந்திடு

கட்டெறும்பு மரத்தின் எல்லா கிளைகளிலும் சுற்றிச்சுற்றி வந்தது அதன் கால்களும் வலியால் நோகத் தொடங்கியது பசி வேறு அதிகரித்துக் கொண்டே இருந்தது நமக்கே எதுவும் கிடைக்க வில்லையே நம் சந்ததியினர் நம்மை எதிர் பார்த்து காத்துக் கொண்டு இருப்பார்களே என மனதில் எண்ணிக் கொண்டு இருக்கும் போது சிற்றெம்பு மிகவும் சிரமப்பட்டு வந்ததைப் பார்த்து "என்ன சின்னா... சோர்ந்து போய் வருகிறாய் உடல் நலமில்லையா...."எனக் கேட்டது "இல்லைங்கய்யா.,. பசி என்னை இந்த நிலைக்கு தள்ளி விட்டது"என்று சிற்றெறும்பு சொல்ல "உனக்கும் ஒன்றும் கிடைக்கவில்லையா நமக்கு முன்னே பறவைகள் வந்து கிடைப்பதை எல்லாம் சாப்பிட்டு விட்டன போல் அதான் ஒரு புழு,பூச்சிகள் கூட கிடைக்கவில்லை " "இப்போ,என்ன செய்றது நம் இல்லத்திற்கு செல்வோமா..? "உதாவக்கரை,எங்க தூங்கி எழுந்திருச்சு வர்றே சோம்பேறி, தெண்டச்சோறு ன்னு திட்டி குதறிப்புடுவாங்களே" ன்னு சிற்றெரும்பு சொல்ல அப்போது பச்சைக் கிளி ஒன்று பறந்து வந்து மரக்கிளையில் அமர்ந்து தன் இறகுகளை தன் சிவப்பான அலகைக் கொண்டு சுத்தம் செய்தது "அய்யா கிளியாரே உனக்கும் சாப்பிட உணவு கிடைக்க வில்லையா" எனக் கட்டெறும்பு கேட்டது குரல் வந்த திசைப் பார்த்து மரத்தின் எதிர் கிளையில் இருந்த கட்டெறும்பையும்,சிற்றெறும்பையும் இருப்பதைக் கண்டதும் "எனக்கா எனக்கு சுவையான நல்ல பழங்களும் கொடுக்காப்புளிக் கொட்டையும் கிடைத்தன நன்றாக சாப்பிட்டேன் ஓய்வுக்காக இங்கு வந்தேன் "என் இறகுகள் வெயிலில் காய்ந்திருந்தது அதனை நீவி விட்டு சுத்தம் செய்கிறேன்" என்றது கிளி "புளிச்சேப்பக்காரன் உனக்கென்ன எங்கள் நிலைதான் மோசமாக உள்ளது " என்று மன வேதனையோடு சொன்னது கட்டெறும்பு அப்போது "இன்னும் நீங்கள் சாப்பிட வில்லையா..... சரி சரி இங்கேயே இருங்கள் இதோ வருகிறேன்னு" சொல்லி தன் இறகை பட பட வென அடித்துக் கொண்டு பறந்தது "கிளியார் பறந்து சென்று பழங்கள் கொண்டு வருவாரோ" என கட்டெறும்பு சொல்ல "அய்யா எது கிடைத்தாலும் சரி பசி தனிக்கும் அல்லவா..."என்று சிற்றெறும்பு சொல்ல "ஆமா ஆமா பசி தீர்க்க எது கிடைத்தாலும் சரி" என கட்டெறும்பு பசியின் வேதனையில் புலம்பியது அப்போது கிளி வாயில் கவ்வி வந்ததை மரத்தின் மேல் வைத்ததை பார்த்ததும் "அருமை அருமை கிளியாரே எங்கள் பசி அறிந்து சுவையான எண்ணெய் பலகாரம் கொண்டு வந்திருக்கிறிர்கள்" என நுகர்ந்து பார்த்து விட்டுச் சொல்லவும் "ஆம் உங்களுக்கு வேண்டிய உணவைத் தேடிப்போனேன் தேனீர் கடையின் வாசலில் இருந்ததைப் பார்த்தேன் எடுத்து வந்தேன் சாப்பிடுங்கள் பசியை தனியுங்கள்" எனச் சொல்லியது கிளி கிளியாரே உங்களுக்கு ரெம்ப நன்றி! எனச் சொல்லி சிற்றெறும்பு சிறு கவலத்தைக் கவ்விக் கொண்டு மரத்திலிருந்து கீழே இறங்கியது "என்ன சாப்பிடாமல் எங்கே செல்கிறாய் சிற்றெறும்பே" எனக் கிளியார் கேட்க "என் உறவுகள் பசியால் இருப்பார்கள் அதனால் அவர்களை அழைத்து வரச் செல்கிறேன் "எனச் சொல்லிக் கொண்டே வேகமாக சென்றது சிற்றெறும்பு "ஆகா..சிற்றெறும்புக்கு இருந்த பந்த உறவு நமக்கு தோனாம போச்சேன்னு சொல்லிக்கொண்டே" தானும் மரத்தில் இருந்து கீழே இறங்கியது கிளியார் இவர்கள் இருவரும் தங்கள் உறவுகளை மறக்காம பசியிலும் பகிர்ந்துண்ணும் எண்ணம் இருப்பதை எண்ணிக் கொண்டு இருந்த போது கீழிருந்து சாரை சாரையாக கட்டெறும்பும்,சிற்றெறும்பும்,உணவிருக்கும் இடத்திற்கு வேகமாக வந்ததைப் பார்த்து மன நெகிழ்ந்து தங்கள் உறவுகளுக்கும் பழங்கள் பறித்துக் கொண்டு போவோம் என பறந்தது கிளி




**நல.ஞானபண்டிதன்**


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
8122664699


VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING
COMPANY SINCE 2020
Dont miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com


ரியல் எஸ்டேட்
ஏஜென்டுகள் தேவை
காஞ்சிபுரத்தில்
RERA & DTCP
APPROVED
PLOTS
விற்பனை செய்வதற்கு
மாதம் ரூ.5 லட்சம்
வரை சம்பாதிக்கலாம்
தொடர்புக்கு:
936345 9002


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


ஜப்பான்
7 நாட்கள் -மே-5
ADD - ON - S.KOREA
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
வியட்நாம்
கம்போடியா
டாணாங் - பாணா - ஹனோய்
மார்ச் 15- 9 நாட்கள்
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
துபாய்
பிப்ரவரி -14 ம் தேதி, மார்ச் -24 ம் தேதி
தைப்பூசம்
மலேசியா 3-நாட்கள்
சுற்றுலா ஏற்பாடுகள்
25 வருடம்
சூரியா டிராவல்ஸ்
38-H, பர்கிட் ரோடு,
தி.நகர், சென்னை -17
98400 85622 / 9940396496


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA
PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Just499
NEWS WEBSITE
PORTAL
We Provide Complete News
Website Portal Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com
BREAKING NEWS


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009



முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009



Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Rs 8000 - Rs 15000
per month
Ananda Bhaskar
9337501889
7789941009

# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







## பலம் பலவீனம்

ஒரு ஊரில் பிரபலமான கோவில் ஒன்று இருந்தது. அந்த கோவிலில் கோவில் யானைகள் இருந்தன. அந்த கோவிலில் யானைகளை அன்புடன் வளர்த்து வந்தனர். அந்த யானைகளை தினமும் ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று குளிப்பாட்டி நெற்றியில் பட்டை தீட்டி அழகுப்படுத்துவது போன்ற பணிகளைச் செய்வதற்கு யானைப் பாகன் ஒருவனை கோவில் நிர்வாகம் நியமித்து இருந்தது.

யானைப் பாகன் ஒரு நாள் வழக்கம்போல் அந்த கோவில் யானைகளை அழைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றான். அந்த யானைகளைக் குளிப்பாட்டி நெற்றியில் பட்டை தீட்டி அழகுபடுத்தி அழைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். ஒரு ஒடுக்கமான பாலத்தில் யானைகள் வரும் போது இரண்டு பூனைகள் எதிரிலே வந்தன.

அதில் ஒரு பூனை மட்டும் சேற்றில் விழுந்து எழுந்த நிலையில் சேற்று உடலுடன் தன்னுடைய வாலை ஆட்டிக் கொண்டே வந்து கொண்டிருந்தது. சேற்றில் விழுந்து எழுந்து வந்த பூனையைப் பார்த்ததும் யானைகளில் ஒரு யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழிவிட்டது. அந்தப் பூனை, எதிரே இருந்த இன்னொரு பூனையிடம், பார்த்தாயா, உருவத்திலும், பலத்திலும் உயர்ந்த அந்த யானைகளே என்னைக் கண்டு பயந்து எனக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கிறது என்று சொல்லி சிரித்தது.

அந்த பூனை சொல்லி சிரிப்பதைப் பார்த்து யானைகளில் ஒரு யானை, அந்த பூனைக்கு ஒதுங்கி வழிவிட்ட யானையைப் பார்த்து நீ அந்த சேற்றில் விழுந்து எழுந்து வந்த பூனையைப் பார்த்து பயந்துதான் அதற்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றாயா? என்று கேட்டது.

அதற்கு அந்த யானை நான் தவறி இடறி அந்த பூனையின் மேல் விழுந்து விட்டால் அந்த பூனை நசுங்கி இறந்து விடும்.

மேலும் நான் ஆற்றங்கரையில் நன்றாக குளித்துவிட்டு சுத்தமாக இருக்கிறேன். அதனால் நான் அந்த சேற்றில் விழுந்து எழுந்து வந்த அப்பூனையின் மேல் விழுந்தால் நானும் அந்தப் பூனையைப்போல் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால் தான் நான் ஒதுங்கி அந்த பூனைக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றேன் என்றது.

தத்துவம் :

அடக்கத்தில் சிறந்தவர்கள் தன்னிடம் உள்ள பலம், பலவீனம் பற்றி தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களின் பலத்தை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்து இருப்பார்கள்.





Me~~~ உங்க வீட்டுக்கார எப்போ வேண்டுமானாலும் போலீஸ் புடிச்சிட்டு போகும் ,, கவனமா இருக்க சொல்லுங்க டோலி.....

She ~~ அவரு என்ன தப்பு பண்ணாரு...

Me ~ மயில வீட்டுல வளர்க்க கூடாதுன்னு தெரிஞ்சும் ,, உங்களை வீட்டுல

## சிந்திக்க..

1. மரத்துக்கு மேலே பழத்துக்கு மேலே மரம் - அது என்ன?- அன்னாசி பழம்.

2. கால் இல்லாத மான், வேரில்லாத புல்லைத் தின்னும் - அது என்ன? - மீன், பாசி.

3. தண்டு மேலே தாழி, தாழிக்குள்ளே தண்ணீர், தண்ணிகுள்ளே கொடி, கொடி மேலே ஒளி - அது என்ன? - பழம், குத்துவிளக்கு.



4. காயில் ஒட்டியவன் கனிந்தால் பிரிந்திடுவான் - அது என்ன? - புளியங்காய்.

5.கூரையில்லா வீட்டுக்குள் குடிக்கும் பொருளுண்டு - அது என்ன? - கிணறு.

6.ஈட்டிகள் பாதுகாப்பில் இளவரசி, தலையில் அமர தப்பி வருவாள் - அவள் யார்? - ரோஜா.

**ட.கிருஷ்ணன்,**
ஈரோடு.



## விடுகதை

| | |
|---|---|
| கூட்டுக்குள்ளே கூடி இருக்கும் குருவியும் அல்ல, பாய்ந்து செல்லும் புலியும் அல்ல, எதிரியை கொள்ளும் வீரனும் அல்ல அது என்ன? | அம்பு |
| உதை வாங்கி, உதை வாங்கி ஊருக்கு சேதி சொல்வான் அவன் யார்? | தண்டோரா |
| வாள் இல்லாமல் கேடயம் மட்டும் எப்போதும் வைத்திருக்கும், போருக்கு போகாத வீரன் அவன் யார்? | ஆமை |
| பார்த்தால் கல், பல் பட்டாள் நீர் அது என்ன? | பனிக்கட்டி |
| வயிற்றில் விரல் சுமப்பான், தலையில் கல் சுமப்பான் அவன் யார்? | மோதிரம் |

## ஜோக்ஸ்

"என்னய்யா சொல்றான்? பிராந்தி வளர்ச்சி நாட்டுக்கு நல்லதில்லே–ங்கறானே!

"தலைவரே! அது பிராந்திய கட்சி வளர்ச்சி...நீங்கதான் தப்பா புரிஞ்சிகிட்டீங்க!"

-------------------

நம் மன்னர் அயல்நாட்டுக்கு சென்று தங்கத்தை ஈர்க்க முயற்சிய செய்கிறாராமே! நலல



திட்டம்தான்

"அடேய்! எதிரிநாட்டு இளவரசி தங்கத்தை ஈர்க்க திட்டமாம் அது!"

-------------------

அந்த புலவரு பாடிய பாடல்கள் அனைத்தும் அருமைதானே

பின் ஏன் ஒரேயொரு வராகன் பரிசாக தந்தாராம் மன்னர்?

-------------------

"பாடல்களில் நீ என்று ஒருமையில் பல இடங்களில் நீ என்று பாடியதால்

---------------

"ஏம்பா சூரிய புயல் வரப்போகிறதாமே

சேதி

தெரியுமா ஒனக்கு?

"ஆமாம்பா! ஊருக்கு போன என் பொண்டாட்டி

சூரியா திரும்ப போறாளாம்

-------------------

"மன்னர் இப்பொழுதெல்லாம் கலகலப்பாக இருப்பதில்லையே ஏன்?

அந்தப்புர பணிப்பெண் கலா நீண்ட விடுப்பில் சென்று விட்டாராம்!"

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## நள்ளிரவில் அதிக பசியா? இதை செய்யுங்கள்



நீரிழிவு நோயாளிகள் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்துக்கொள்வதற்காக பெரும்பாலும் இரவில் குறைவாகத்தான் சாப்பிடுவார்கள். அப்படி குறைவாக சாப்பிடுவதால் இரவு 2 மணியளவில் கண்டிப்பாக பசி எடுத்துவிடும். ஆனால் பசியில் அதிகமாக சாப்பிட்டு விட்டாலும் சரி, தவறான உணவைத் தேர்ந்தெடுத்து சாப்பிட்டாலும் சரி ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

உண்மையைச் சொன்னால் ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கக் கூடாது ஆனால் அதே சமயம் பசியும் அடங்க வேண்டும், அதற்கான உணவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே சாதனையாகத்தான் கருதப்படுகிறது.

இரவு நேரத்தில் ஏற்படும் பசியைப் போக்க வேண்டும். ஆனால், ரத்த சர்க்கரை அளவை பாதிக்கக் கூடாது. இந்தவகை உணவுகளைப் பற்றிதான் இப்போது பார்க்கப் போகிறோம்...

முதலில் பிளைன் க்ரீக் யோகர்ட் அதாவது கிரேக்க தயிர். இதில் புரதமும் மிகக்குறைந்த அளவிலான இயற்கை சர்க்கரையும் உள்ளது. இதில் உள்ள புரதம் உங்கள் பசியை போக்குவதோடு இல்லாமல் செரிமானத்தையும் சீராக்கும். அத்துடன் ரத்த சர்க்கரை அதிகரிப்பைத் தடுக்கவும் உதவி செய்யும். 2019 –யில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், கிரேக்க தயிர் ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்காது என்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, நீங்கள் இரவு நேர பசியின் போது பயப்படாமல் கிரேக்க தயிரை சாப்பிடலாம்.

அடுத்ததாக பாதாம் பருப்பு. பாதாம் பருப்பில் குறைந்த கார்போஹைட்ரேட், அதிக நார்ச்சத்துகள் நிறைந்துள்ளதாகவும் இது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை பராமரிக்க உதவுவதாக 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது. எனவே நீங்கள் தூங்க செல்வதற்கு முன் ஒரு கைப்பிடி பாதாம் பருப்பை தாராளமாக சாப்பிடலாம். வயிறு முழுமையாக உள்ளது போன்ற உணர்வையும் தரும். அதேசமயம் உங்கள் தூக்கத்தை சீர்குலைக்காமல் பார்த்துக்கொள்ளும்.

தினமும் நள்ளிரவில் பசிக்கிறது என்றால், தூங்க செல்வதற்கு முன் நீங்கள் தாராளமாக வேக வைத்த முட்டையை சாப்பிடலாம். 2023-இல் நடத்தப்பட்ட ஆய்வின்படி முட்டையில் கார்போஹைட்ரேட் குறைவாக இருந்தாலும் நல்ல கொழுப்புகள் மற்றும் புரதம் அதிகமாக இருப்பதால் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. அதுமட்டுமின்றி, மெலடோனின் உற்பத்தியை அதிகரிக்க செய்து தூங்குவதற்கும் உதவி செய்கிறது.

கடைசியாக பாசிப்பருப்பு சூப் மற்றும் பனீர் முதலானவற்றை எடுத்துக்கொள்ளலாம். பாசிப்பருப்பு சூப் செய்யும் போது அதில் செரிமானத்திற்காக சிறிதளவு நெய், சீரகம், பெருங்காயம் முதலானவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். சூப்பை வெதுவெதுப்பான சூட்டில் குடிக்க வேண்டும். பாசிப்பருப்பு சூப்பும் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.



பனீர் எடுத்துக்கொள்ளும் போது அதனுடன் கருப்பு மிளகு சேர்த்துக்கொள்ளலாம். 2019 ஆய்வு முடிவின் படி பனீரில் கார்போஹைட்ரேட் குறைவாகவும், கேசீன் புரதம் அதிகமாகவும் உள்ளதாகவும் இதனால் பசியைக் கட்டுப்படுத்தி முழுமையாக சாப்பிட்ட உணர்வையும் வழங்குவதாக கூறுகிறது.

உங்கள் நள்ளிரவு நேர பசியை போக்கிக்கொள்ளவும் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் மேற்கண்ட உணவுகளை நீங்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்.

## சர்க்கரைக்கு பதில் வெல்லம் பயன்படுத்தினால் கிடைக்கும் நன்மைகள்



சர்க்கரை அதிகமாக எடுத்துக்கொள்பவரா நீங்கள். அப்படியென்றால் இந்த பதிவு உங்களுக்காகத்தான். ஒரு நாளில் நீங்கள் எடுத்துக்கொள்ளும் சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் எடுத்துக்கொண்டால் உங்கள் உடலுக்கு அவ்வளவு நன்மை கிடைக்கபெறும்.

வெல்லத்தில் ஆன்டி ஆக்சிடன்டுகள், இரும்புச்சத்து, செலினியம், மக்னீசியம் முதலான சத்துகள் அதிகமாக உள்ளது. அதனால் தான் சித்த மருத்துவத்தில் கூட வெல்லம் சேர்க்கப்படுகிறது.

வெல்லத்தில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளதால், இரத்தத்தை சுத்திகரிக்க உதவுகிறது. இதன்மூலம் சருமத்தை மேம்படுத்தி உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா பிரச்சனைகளுக்கு உகந்ததாகவும், தொண்டை புண் மற்றும் இருமலை போக்கவும் சளிக்கு அருமருந்தாகவும் செயல்படுகிறது.

வெல்லத்தில் பொட்டாசியம் சத்து அதிகளவில் உள்ளதால் இதய செயல்பாட்டை சீராக்கவும், ரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.


வயிறு, உணவுக்குழாய், நுரையீரல் போன்ற உடல் உறுப்புகளை உறுதியாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க உதவுகிறது. மேலும், மலச்சிக்கலைத் தடுத்து செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. முக்கியமாக வெல்லத்தில் உள்ள நீர் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

நீங்கள் உணவு அருந்தியபிறகு வெல்லம் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஏனென்றால், வெல்லம் செரிமான நொதிகளை சீராக செயல்படுத்துகிறது. இதனால் உணவானது எளிதில் உடைந்து ஜீரணமாக உதவி புரிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வெல்லம் மிகச்சிறந்த நச்சு நீக்கி என்றே சொல்லலாம். இயற்கையாகவே வெல்லத்தில் நச்சுகளை நீக்கும் தன்மை உள்ளது. இது நம்முடைய உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றி கல்லீரலையும் சுத்தப்படுத்துகிறது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்ட வெல்லத்தை சர்க்கரைக்கு மாற்றாக தாராளமாக பயன்படுத்தலாம். இருப்பினும் சர்க்கரையோ வெல்லமோ எதுவாக இருந்தாலும் அளவோடு எடுத்துக்கொள்வது நல்லது.

## தலையில் எண்ணெய் தேய்ப்பது சரியா...?



தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலையில் எண்ணெய் தேய்க்காமல் இருப்பதை விட தினமும் எண்ணெய் தேய்ப்பதினால் உடலுக்கு நிறைய நன்மைகள் இருக்கின்றன. காய்ந்து போன, கரடுமுரடான, சரிவர பராமரிக்காமல் பாதிக்கப்பட்ட, அடைபட்ட மயிர்க்கால்களின் நுண்துளைகள் எரிச்சலூட்டும் தலைப்பொடுகு உள்ள தலைமுடி மற்றும் முடி கொட்டுதல் போன்ற பிரச்சனைகள் தீர வாரத்துக்கு இருமுறை தலையில் எண்ணெய் தேய்ப்பது நல்ல பலன்களைத் தரும்.

ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது வாரத்தில் இரண்டு நாட்கள் தலையில் எண்ணெய் தேய்ப்பது என்பது உலர்ந்த காய்ந்துபோன தலைமுடிக்கு மிகவும் நல்லது. தலையில் ஏற்படும் சில சரும நோய்களுக்கு தினமும் மருந்து கலந்த எண்ணெய் தேய்ப்பது நல்லது என்று சருமநோய் சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் பரிந்துரை செய்வதுண்டு.

தலையிலுள்ள மயிர்க்கால்கள் பாதிக்கப்படாமல் இருக்க எண்ணெய் மிகவும் உதவியாய் இருக்கும். தலையில் எண்ணெய் தினமும் தேய்ப்பதால் தலைமுடிக்கு மட்டுமல்ல, உங்கள் உடம்பையே புத்துணர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும். உங்கள் தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலைக்கும் தலையிலுள்ள மயிர்க்கால்களுக்கும் தேவைப்படும் சத்துப்பொருட்களுக்கும் வைட்டமின்களுக்கும், மயிர்க்கால்கள் உறுதியாக இருக்கவும் தலைமுடி நன்கு வளரவும் எண்ணெய் மிகவும் உதவுகிறது.

தலைமுடியில் இருக்கும் சுருள்முடிகளை நேராக்க எண்ணெய் உதவுகிறது. தலையில் பொடுகு வராமல் தடுக்க, இளநரை வராமலிருக்க, மன அழுத்தத்தைப் போக்க, பேன் தொந்தரவு இல்லாமலிருக்க, தலைமுடி கொட்டுவதைத் தடுக்க எண்ணெய் மிகவும் உதவுகிறது.

## காடை இறைச்சியில் இத்தனை சத்துக்களா?



கோழி இறைச்சியைவிட மிகவும் சுவையும், சத்தும் கொண்டது காடை இறைச்சி. ‘கட்டில் கிடப்பார்க்கு காட்டில் படும் காடை’ என்கிறது, சித்த மருத்துவ பாடல் ஒன்று. நோய்களால் உடல் இளைத்த ஒருவன் காடை இறைச்சியுடன் சோறு சாப்பிட்டால், கட்டழகன் ஆவான் என்கிறது தமிழ் நூல் ஒன்று.

கோழி இறைச்சியை ஒப்பிடும்போது மிகக் குறைவான கொழுப்பு, ஏராளமான உயிர்ச்சத்துகள் காடை இறைச்சியில் உள்ளன. மூளைக்கு முக்கியமான கோலின் சத்து, வைட்டமின்கள் ஏ, பி-1, பி, டி, கே மற்றும் புரதம், கால்சியம், இரும்பு, துத்தநாகம் உள்பட பல சத்துக்கள் இவற்றின் மூலம் கிடைக்கின்றன. காடை இறைச்சியில் அதிக ஒலிக் அமிலம் இருப்பதால், இதய நோய் அபாயத்தை குறைக்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

நீரிழிவு நோயாளிகள், காடை இறைச்சியை உணவில் எடுத்துக்கொண்டால் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தலாம். மேலும் கண்பார்வை பாதிப்புகளை தடுத்து விழித்திரைகளை மேம்படுத்துகிறது. காடை இறைச்சியில் உள்ள பாஸ்பரஸ், கால்சியம் சத்துக்கள் மூட்டு தேய்மானத்தை தடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

இதே போல், காடை முட்டைகள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, மூளையின் செயல்பாட்டை அதிகரிப்பதுடன், நரம்பு மண்டலத்தை உறுதிப்படுத்துகின்றன. உடலில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிப்பதன் மூலம் ரத்த சோகையை தடுக்கிறது. காசநோய், ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சையில் காடை முட்டையை சிறந்த மருந்தாக சீனர்கள் பயன்படுத்துகின்றனர். சிறுநீரகம், கல்லீரல், பித்தப்பை போன்றவற்றில் கற்கள் உருவாவதை காடை முட்டைகள் தடுக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், போலந்து, பிரெஞ்சு போன்ற நாடுகளில் காடை, மிகவும் விரும்பி உண்ணப்படும் இறைச்சியாக உள்ளது.

## செல்போனால் இளைஞர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம்



இளைஞர்களில் பலர் எல்லாவற்றிலிருந்தும் அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். கல்வி, வேலை, நிதி சிக்கல்கள், அதிகரித்த செல்போன் பயன்பாடு, போட்டித்தன்மை போன்ற பல காரணங்களால் மன அழுத்தம் ஏற்படுகிறது.

கடுமையான மன அழுத்தத்தில் இருப்பவர்களிடையே பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக அமெரிக்க நரம்பியல் அகாடமி எச்சரித்துள்ளது.

வாழ்க்கை முறை மாற்றங்கள் காரணமாக அதிகரித்து வரும் மன அழுத்தம் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அது விளக்கம் அளித்துள்ளது.

இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மூளையின் ஒரு பகுதிக்கு ரத்த விநியோகம் துண்டிக்கப்படுகிறது. அவர்கள் சோம்பேறியாக மாறுகிறார்கள், பேச முடியாத நிலை ஏற்படும். அவர்கள் பார்வையை இழக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் மரணம் ஏற்படுகிறது.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கடுமையான மன அழுத்தத்தை அனுபவித்ததாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

பின்லாந்தில் உள்ள ஹெல்சின்கி பல்கலைக்கழக மருத்துவமனை உட்பட பல்வேறு மருத்துவ நிறுவனங்கள் இந்த ஆய்வில் பங்கேற்றன. மன அழுத்தத்தில் இருக்கும்போது. கார்டிசோல் அட்ரினலின் மற்றும் நோராட்ரெனலின் போன்ற ஹார்மோன்கள் வெளியிடப்படுகின்றன.

சிறிது மன அழுத்தத்துடன் இந்த ஹார்மோன்கள் உடலுக்கு அவசியமானவை. ஆனால் அவை அதிகமாக வெளியிடப்பட்டால் ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. உயர் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

இதையும் படியுங்கள்: நள்ளிரவில் அதிக பசியா?- நீரிழிவு நோயாளிகளுக்கு குட் நியூஸ்

இது உறுப்புகளை சேதப்படுத்தும் மன அழுத்தம் மூளை மற்றும் இதயம் உட்பட அனைத்து உறுப்புகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சியான மன அழுத்தம் நினைவாற்றலைக் குறைக்கிறது. படிக்கும் திறன் குறைகிறது. முடிவுகளை சரியாக எடுக்க முடியாது. கவனம் குறைகிறது. உணர்ச்சிகளில் அதன் தாக்கத்தால் பயம் மற்றும் பதட்டம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு இது மிகவும் ஆபத்தானது. சிலர் எடை கூடுகிறார்கள். சிலர் எடை குறைகிறார்கள். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. பாலியல் திறன் குறைகிறது. மனச்சோர்வு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.



மன அழுத்தத்தை உணரும்போது அதற்கான காரணங்களை அடையாளம் காண வேண்டும். எந்தெந்த காரணிகள் நமக்கு பிரச்சனையை ஏற்படுத்துகின்றன என்பதை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

நீண்ட நேர செல்போன் பயன்பாடுகளை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விட்டுவிட்டு நேர்மறை சிந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மன அழுத்தத்தைக் குறைப்பது நம் கையில்தான் உள்ளது. நமது வாழ்க்கை முறையிலும் உணவு முறையிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

சர்க்கரை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்து புரதம் அதிகம் உள்ள உணவுகளை உண்ணுங்கள். தேவைப்பட்டால் ஒரு உணவியல் நிபுணரின் ஆலோசனையுடன் சீரான உணவை உண்ணுங்கள். தினமும் அரை மணி நேரம் வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது உடற்பயிற்சி செய்யுங்கள்.

எல்லாவற்றிலும் மன அழுத்தத்தில் இருப்பவர்கள் அறிவாற்றல் நடத்தை சிகிச்சையைப் பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை காலை சிறப்பு அலங்காரம் மற்றும் ஆரத்தி நடைபெற்றது.

## நெல்லையப்பர் கோவிலில் தைப்பூசத் திருவிழா கொடியேற்றம்



திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் தைப்பூசத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

## சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்த அம்மன்



தர்மபுரி அருகே கடத்தை குந்தி அம்மன் கோவில் கும்பாபிசேகம் நடந்தது. சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்த அம்மன்.

## திருப்புல்லானி சுவாமி அலங்காரம்



நேற்று திருப்புல்லானி சுவாமி அலங்காரம்

## பூதலிங்கசுவாமி கோவிலில் கொடியேற்றம்



குமரி மாவட்டம் பூதப்பாண்டி பூதலிங்கசுவாமி கோவிலில் தைத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

## இன்று மகா கும்பாபிஷேக விழா



கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் உடனுறை பூவனநாதசுவாமி கோயிலில் இன்று மகா கும்பாபிஷேக விழா நடக்கிறது . இதையொட்டி நேற்று யாகசாலை பூஜைகள் நடந்தன.

## கலெக்டர் அழகுமீனா நேரில் ஆய்வு



நாகர்கோவிலில் உங்க கனவை சொல்லுங்க திட்ட தன்னார்வலர்கள் பொதுமக்களை சந்தித்து, திட்டம் குறித்து விளக்கம் அளித்து விண்ணப்ப படிவங்களை நிரப்பி திரும்பப் பெறுவதை கலெக்டர் அழகுமீனா நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியில் திருக்குறள் மாணவர் மாநாடு முன்னேற்பாடு பணிகளை கலெக்டர் அழகுமீனா நேரில் ஆய்வு செய்தார்.

## உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி



தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி நடந்தது.

## ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணை



தொழில்நுட்பக் கல்வித் துறை மற்றும் அதன் கீழ் உள்ள கல்லூரிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பொது இடமாறுதல் கலந்தாய்வில் 74 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணைகளை அமைச்சர் கோவி செழியன் வழங்கினார்.

## வாக்குப்பதிவு இயந்திர செயல் முறை விளக்க மையம்



தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் மாதிரி வாக்குப்பதிவு இயந்திர செயல் முறை விளக்க மையத்தை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்தார்.

## கர்ப்பிணிக்கு ஊட்டச்சத்து பெட்டகம்



கொடுமுடியில் நடந்த மருத்துவ முகாமில் கர்ப்பிணிக்கு கலெக்டர் கந்தசாமி ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.

## ஊழியர்கள் உறுதிமொழி



தேசிய வாக்காளர் தினமான நேற்று திருநெல்வேலி கலெக்டர் சுகுமார் தலைமையில் ஊழியர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

## விளக்கேற்றும் விழா



கே.எம்.சி.ஹெச். செவிலியர் கல்லூரியில் பிஎஸ்சி. நர்சிங் மற்றும் டிப்ளோமா நர்சிங் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான விளக்கேற்றும் விழா நேற்று நடந்தது.

## கைவினை நகை கண்காட்சி



கோவையில் நேற்று கைவினை நகை கண்காட்சி துவங்கியது.

## பூங்கா திறப்பு



சென்னை அண்ணா சாலை நந்தனத்தில் மெட்ரோ ரயில் நிறுவன வளாகம் அருகே ரூ.3 கோடியே 50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக நேற்று துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.உடன் மேயர் பிரியா, வேலு எம்எல்ஏ உள்ளனர்.

## நேதாஜி திருவுருவப் படத்துக்கு அமைச்சர்கள் மரியாதை



நேதாஜி 130வது பிறந்தநாளான நேற்று சென்னையில் அவரது சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்துக்கு அமைச்சர்கள் சமிநாதன்,சேகர்பாபு,அனிதாரா தாகிருஷ்ணன்,மா.சுப்பிரமணியன், மேயர் பிரியா மற்றும் அதிகாரிகள் மலர் தூவி மரியாதை செய்தனர்.

## ஸ்ரீஜயப்பா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் 30வது ஆண்டு விழா



சென்னை சோழிங்கநல்லூர் ஸ்ரீஜயப்பா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் 30வது ஆண்டு விழாவில் அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பங்கேற்றார்.

## வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் 16 வது தேசிய வாக்காளர் தினத்தையொட்டி வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் சிவசவுந்தரவல்லி துவக்கி வைத்தார்.

## திருக்குறள் மாணவர் மாநாடு



கன்னியாகுமரி மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பில் நடைபெற்ற தமிழ் மொழி இலக்கிய திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் பங்குபெறும் தமிழ்நாடு அரசின் திருக்குறள் மாணவர் மாநாட்டில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கலெக்டர் அழகுமீனா. மேயர் மகேஷ், விஜய் வசந்த் எம்.பி., பங்கேற்றனர்.

## சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சிராப்பள்ளி தலைமை அஞ்சலகம், மண்டல அலுவலகம், கோட்ட அலுவலகங்களில் பணிபுரியும் அஞ்சலகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மத்திய மண்டல அஞ்சல் துறைத் தலைவர் நிர்மலா தேவி தலைமையில் நடந்தது.

## கரூர் மாரியம்மன் கோயிலில் பக்தர்கள் காணிக்கை



கரூர் மாரியம்மன் கோயிலில் பக்தர்கள் காணிக்கையாக அளித்திருந்த 16 கிலோ தங்க நகைகளை தரம் பிரிக்கும் பணி, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு தலைமையில் நடந்தது.

## ரவுசு மணி

புரியாதவர்களுக்கு தான் ஆயிரம் விளக்கங்கள் சொல்ல வேண்டும்....

புரிந்தவர்களுக்கு அழகான. ஒரு புன்னகையே போதுமானது



V.முத்து ராமகிருஷ்ணன்

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் வாக்காளர் தின உறுதிமொழி ஏற்பு





**புதுக்கோட்டை, ஜன.24:** தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் ஜனவரி 25ஆம் நாள் வாக்காளர் வாக்காளர் தினமாக அனுசரித்து வருகிறது அதனை முன்னிட்டு நேற்று அனைத்து பள்ளிகளிலும் வாக்காளர் தின உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழி ஆசிரியர்கள் சீனிவாசன் ,தேன்மொழி, மாலதி, சரண்ராஜ் மற்றும் பிரதீபா மற்றும் மாணவர்கள் 70 பேர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் மக்களாட்சியில் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவோம் தேர்தலை அச்சமின்றியும் ஜாதி மத வேறுபாடு இன்றியும் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் வாக்களிப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

# சுற்றுலா: இயற்கை எழில் கொஞ்சும் தெலுங்கானாவில் பார்க்க வேண்டிய 5 இடங்கள்!

இயற்கை எழில் கொஞ்சும் ஐந்துஇடங்களைபற்றி இப்பதிவில் பார்ப்போம்.

1. ஆலம்பூர்

தெலுங்கானாவில் ஏராளமான கோவில்கள் உள்ள இந்த இடம், மத முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த இடம் ஹைதராபாத்தில் இருந்து 218 கிமீ தொலைவிலும், கர்னூலில் இருந்து 22 கிமீ தொலைவிலும் உள்ளது. ஆலம்பூர் என்பது புனித யாத்திரை நகரமான ஸ்ரீசைலத்தின் மேற்கு வாசல். ஜோகுலாம்பா கோயில், நவபிரம்ம கோயில்கள் மற்றும் சங்கமேஸ்வரர் கோயில் ஆகியவை இங்கு காணக்கூடிய கோயில்களாகும்.



2. கம்மம்

தெலுங்கானாவின் சிறந்த சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த நகரம் ஹைதராபாத்தில் இருந்து 198 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த இடம் அதன் கோட்டைகள் மற்றும் சரணாலயங்களுக்கு பிரபலமானது. ஒரு காலத்தில் காகத்தியர்கள், முசுனூரி நாயக்கர்கள் மற்றும் வெலமா மன்னர்கள், ரெட்டி மன்னர்கள், குதுப் ஷாஹி மற்றும் ஹைதராபாத் நிஜாம்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இதன் விளைவாக, இந்த இடம் கட்டிடக்கலை அதிசயங்களின் களஞ்சியமாக உள்ளது.

3. மகபூப் நகர்

இந்த இடம் ஒரு காலத்தில் சாளுக்கியர்கள், பஹ்மானிகள், விஜயநகர் மற்றும் கோல்கொண்டா நவாப்களின் பல பெரிய மன்னர்களால் ஆளப்பட்டது. இங்கு நடந்த பல போர்களுக்கு இந்த இடம் பெயர் பெற்றது. கிருஷ்ணா மற்றும் துங்கபத்ரா நதிகள் இப்பகுதியில் பாய்கின்றன, இது ஒரு பிரபலமான சுற்றுலா நகரமாக உள்ளது. ஆலம்பூர், பில்லாலமரி, ஜுராலா அணை, கோயில்கொண்டா கோட்டை, கடவால் கோட்டை, கொல்லப்பூர், சோமால்சியா போன்ற பல சுற்றுலாத் தலங்கள் இங்கு உள்ளன. அனைத்து சுற்றுலாத் தலங்களையும் ஓரிரு நாட்களில் சுற்றிப்பார்க்கலாம். இது மகபூப்நகரை சிறந்த தெலுங்கானா சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக மாற்றுகிறது.

4. அனந்தகிரி

இந்த இடம் ஹைதராபாத்தில் இருந்து வெறும் 79 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட முக்கியமானதாக மாறியுள்ளது. அனந்தகிரி காடுகளில் 400 ஆண்டுகளுக்கு முன்பு நிஜாம் நவாப்களால் கட்டப்பட்ட அனந்த பத்மநாப ஸ்வாமி கோவில் உள்ளது. கோயிலில் இருந்து சற்று தொலைவில் ஏராளமான பாழடைந்த கட்டிடங்களால் சூழப்பட்ட ஏரியும், சிவன்கோயிலும் உள்ளது. அனந்தகிரியின் பிரதான கோயில் குகையைச் சுற்றி கட்டப்பட்டுள்ளது.



5. மேடக் கோட்டை

தெலுங்கானாவின் சுற்றுலாத் தலங்களைப் பற்றிப் பேசும்போது, மேடக் கோட்டையைக் குறிப்பிட வேண்டும். இது மேடக் பேருந்து நிலையத்திலிருந்து 2.3 கிமீ தொலைவிலும், ஹைதராபாத்தில் இருந்து 95 கிமீ தொலைவிலும் அமைந்துள்ளது. தெலுங்கானாவில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இதுவும் ஒன்று. இது ஒரு மலையின் உச்சியில் அமைந்துள்ள ஒரு மாபெரும் கட்டிடக்கலை. இதை அடைய ஒருவர் 500 படிகள் ஏறவேண்டும்.

இந்த கோட்டை இந்து மற்றும் இஸ்லாமிய கட்டிடக்கலை பாணிகளின் கலவையாகும். நுழைவாயிலில், காகத்தியர்களின் இரட்டைத்தலை கொண்ட கந்தப்பெருந்தத்தை காணலாம். கோட்டையின் மகிமை முன்பு இருந்ததுபோல் இல்லை. அது இப்போது பாழடைந்த நிலையில் உள்ளது. கோட்டையின் உச்சியில் இருந்து, நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் அழகிய காட்சியைப் பெறலாம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ராணுவத்தில் பெண் அதிகாரிகள்

இந்தியத் தரைப்படையில்(Indian Army) அதிகாரிகளாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு பெண்களுக்கு வந்துள்ளது. விண்ணப்பிக்கும் பெண்களுக்குத் திருமணம் ஆகியிருக்கக்கூடாது. இந்தப் பணியிட நிரப்புதலில் தேர்ச்சி பெறக்கூடியவர்கள் லெப்டினென்ட் என்ற ரேங்கில் பணியமர்த்தப்படுவார்கள். மொத்தம் 31 இடங்கள் நிரப்பப்படுகின்றன. இவற்றில் சிவில்(7), கணினி அறிவியல்(4), மின்துறை (3), மின்னணு(6), மெக்கானிக்கல்(9), பொறியியல் அல்லாத(2) பிரிவுகளில் இடங்கள் உள்ளன. வயது வரம்பு - 20 முதல் 27 வயதுக்குள் இருக்க வேண்டும். வயது அக்டோபர் 1, 2026 ஆம் தேதிப்படி கணக்கிடப்படும். கல்வித்தகுதி - பல்வேறு பாடப்பிரிவுகளில் (முழுப்பட்டியல் அறிவிக்கையில் தரப்பட்டிருக்கிறது) பி.இ. அல்லது பி.டெக். இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தற்போது இறுதி ஆண்டில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். தேர்வு முறை - Services Selection Board நடத்தும் நேர்முகத்தேர்வு, உடற்தகுதித் தேர்வு மற்றும் மருத்துவத் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும். உடற்தகுதியைப் பொறுத்தவரையில், 2.4 கி.மீ. தூரத்தை 13 நிமிடங்கள் 30 விநாடிக்குள் கடக்க வேண்டும். இது உள்ளிட்ட மேலும் பல சோதனைகள் இருக்கும். பணிக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள் அக்டோபர் மாதத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள். கல்வித்தகுதிக்கான பாடப்பிரிவுகள், உடற்தகுதிக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட வற்றிற்கான முழு விபரங்களை www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிப்பதற்கான கடைசித்தேதி பிப்ரவரி 4, 2026 ஆகும்.

## அணுசக்திக் கழகத்தில் வேலை

ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் இந்திய அணுசக்திக் கழகத்தில்(NPCIL) 114 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது. பல்வேறு வகையான வேலைகளுக்கு ஆள் எடுக்கிறார்கள். பணிக்கேற்ற கல்வித்தகுதிகள், வயது வரம்பு, அனுபவம் உள்ளிட்டவை தேவைப்படுகின்றன. வயது வரம்பில் அரசு விதிமுறைகளின்படி தளர்ச்சி இருக்கும். பட்டியலின, பழங்குடி, மாற்றுத்திறனாளி, பெண் தேர்வர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் எதுவும் கிடையாது. தேர்வு முறை உள்ளிட்ட முழு விபரங்களுக்கு www.npcilcareers.co.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பிப்பதற்கான கடைசித்தேதி பிப்ரவரி 4, 2026 ஆகும்.

## தொடர் வேலைநிறுத்தம் தற்காலிகமாக ஒத்தி வைப்பு: சத்துணவு ஊழியர் சங்கம் அறிவிப்பு

**சென்னை, ஜன.24:**

தொடர் வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. காலமுறை ஊதியம், ஓய்வூதியம், பணிக்கொடை ஆகிய தேர்தல் வாக்கு றுதிகளை நிறைவேற்ற தமிழக அரசை வலி யுறுத்தி ஜனவரி 20 அன்று சத்துணவு ஊழி யர்கள் கால வரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கினர். மாவட்டத் தலைநகரங்களில் மறியலில் ஈடுபட்டனர். இதன் விளைவாக, “சிறப்பு கால முறை ஊதியத்தில் பணியாற்றி வரும் பணி யாளர்களின் சிறப்பு ஓய்வூதியம் குறித்த பல்வேறு கோரிக்கைகளை அரசு கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணைகளை விரைவில் வெளியிடும்” என்று ஆளுநர் உரையில் தமிழக அரசு தெரிவித்தது. ஏற்கெனவே துறை அமைச்சர் மற்றும் பேச்சுவார்த்தை நடத்திய துறையின் முதன்மைச் செயலாளர் உள்ளிட்டோரும் நம்பிக்கையூட்டும் வாக்குறுதியை அளித்திருந்தனர். எனவே, அரசின் மீதுள்ள நல்லெண்ணம், மாணவர்களின் நலன் கருதி வேலைநிறுத்தம் தற்காலிக மாக ஒத்தி வைக்கப்படுகிறது. முதல்வர் அறிவிப்பு தாமதமானால் ஜனவரி 27-ஆம் தேதிக்கு பிறகு வலுவான போராட்டங்களை முன்னெடுப்போம் என்று சங்கத்தின் மாநிலத் தலைவர் பி. செல்லத்துரை, பொதுச்செயலாளர் ஏ.ஜெசி, பொருளாளர் வி. சித்ரா ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## நடுரோட்டில் தீப்பற்றி எரிந்த லாரி

**நாகர்கோவில். ஜன, 24:**

நாகர்கோவிலில் அதிகாலையில் நடு ரோட்டில் தீப்பற்றி எரிந்த லாரியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஒழுகினசேரி தேசிய நெடுஞ் சாலையில் அமைந்துள்ள தனியார் ஹோட்டல் முன்பு அதி காலை இரண்டு மணி அளவில் டாரஸ் லாரி ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது. அதனை பார்த்த ரோட்டில் சென்ற வாகனங் கள் நிறுத்தப்பட்டன. பின்னர் சில வாகனங்களின் ஓட்டுநர் கள் சேர்ந்து அந்த தீயை அணைக்க முயன்றனர். ஆனால் பலனின்றி அந்த லாரி முற்றிலும் எரிந்து நாசமானது.

## காளை முட்டியதில் இளைஞர் உயிரிழப்பு

**வேலூர், ஜன.24:**

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டை அடுத்த ஏரிகுத்தி கிராமத்தில் 61-ஆவது ஆண்டு மாடு விடும் திருவிழா புதனன்று (ஜன.21) வெகு விமரிசையாக நடைபெற்றது. 300-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்ற இந்த விழாவைக் காண ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டி ருந்தனர்.

அப்போது கள்ளிச்சேரி பகுதியைச் சேர்ந்த அருண்குமார் (34) என்ற இளைஞரை காளை மாடு ஒன்று எதிர்பாராத விதமாக முட்டியதில் அவர் பலத்த காயமடைந்தார். உடனடியாக பேரணாம் பட்டு அரசு மருத்துவ மனையிலும், பின்னர் மேல் சிகிச்சைக்காக வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## கறிக்கோழி வளர்ப்புப் பிரச்சினைக்கு தீர்வு காண தொழில்நுட்பக் குழு அமைப்பு

**சென்னை, ஜன.24:**

கால்நடை பராமரிப்புத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 50 முதல் 55 கோடி கறிக்கோழிகள் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன.



இத்தொழிலில் சுமார் 20 ஆயிரம் பண்ணையாளர் களும், அவர்களுக்குத் தீவனம் மற்றும் குஞ்சுகளை வழங்கும் 66 ஒருங்கிணைப்பாளர் களும் ஈடு பட்டுள் ளனர். சமீபகால மாக உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் இதர சிரமங்கள் குறித்து பண்ணையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கடந்த டிச.29 மற்றும் ஜன.21 ஆகிய தேதிகளில் கால்நடை பராமரிப்பு இயக்குநர் தலைமையில் சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பண்ணையாளர்களின் கோரிக்கைகளைத் தீர ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிநுட்ப குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் பண்ணையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுடன் ஆலோசித்து, உள்ளீடுகள், தரம் மற்றும் செலவு, உற்பத்திப் பெருக்கத் துக்கான வழி வகைகள், வளர்ப்புப் பணிகள் மற்றும் பண்ணைச் செயல்பாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நோய்ப்பரவல் மற்றும் மருத்துவ சிகிச்சையிலிருக்கும் இடைவெளி, உற்பத்தி மற்றும் கொள்முதல் ஆகியவற்றிற்கிடையேயான பிரச்சினை தொடர்பான விவரங்களை ஆய்வு செய்து கறிக்கோழி வளர்ப்புத் தொழில் நடைபெறும் மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் கலந்தாலோசித்து உரிய தீர்வு காண அறிவுறுத் தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் தெற்கு ஆசியாவின் நவீன சிடி ஸ்கேனர் அறிமுகம்

**சென்னை, ஜன.24:**

போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில், தெற்கு ஆசியாவின் அதிநவீன வகை சிடி ஸ்கேனர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கதிரியக்க மற்றும் பதிவு தொழில்நுட்ப அறிவியல் துறையில், சிறப்பான படமெடுப்பு திறனுக்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய ‘ஜிஇ அபெக்ஸ் எலைட் 512 ஸ்பெக்ட்ரல்’ சிடி ஸ்கேனர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தெற்கு ஆசியாவில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சிடி ஸ்கேனரை, சென்னை மருத்துவக் கல்லூரியின் கதிரியக்கவியல் துறை முன்னாள் தலைவர் டி.எஸ்.சுவாமிநாதன் மற்றும் ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதன் செயல்பாடு குறித்து, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையின் கதிரியக்கத் துறை தலைவர் வெங்கடசாய் கூறுகையில், “இந்த நவீன சிடி ஸ்கேனர் மூலம் கதிரியக்க படம் பிடித்தல், பதிவை உருவகப்படுத்துதல், காட்சியமைத்தல், நோய் அறிதல் திறனை மேம்படுத்துதல், நோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிதல், நோய்த் தன்மைக்கான விளக்கம், நோய்களுக்கு ஏற்ப தகுந்த சிகிச்சையை பரிந்துரைத்தல், ஆய்வு செய்தல் போன்றவற்றை மிக துல்லியமாக செய்து நோயாளிகளுக்கு தனித்துவமான சிகிச்சை அளிக்கலாம். அவர்களுக்கான பாதுகாப்பு வசதிகளையும் மேம்படுத்தலாம். அதேபோல், உடனடியாக கவனிக்க வேண்டிய பதிவுகளை முதன்மைப்படுத்தி நோயாளிக்கும், கதிரியக்க பணியாளர்களுக்கும் கதிர்வீச்சை குறைத்து, படத்தின் தரத்தை உயர்த்தி மருத்துவர்களுக்கு சிறந்த தகவல்களை அளிக்க முடியும்.

சவாலான கதிரியக்க பதிவுகளை ஆராய்ந்து கணிப்பதில் உள்ள சிரமங்கள் இந்த நவீன வகை இயந்திரத்தினால் களையப்படும். அந்த வகையில், கதிரியக்கத் துறையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த நவீன சிடி ஸ்கேனர் பயன்படுத்தப்படும்” என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஸ்ரீராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாசலம், துணை வேந்தர் உமா சேகர், இணை துணை வேந்தர் மகேஷ் வக்கமுடி, மருத்துவக் கல்லூரி தலைவர் கே.பாலாஜி சிங், பதிவாளர் எஸ்.செந்தில்குமார், மருத்துவ இயக்குநர் ஆர்.பி. சுதாகர் சிங், மருத்துவ கண்காணிப்பாளர் பி.சுரேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாய் கருத்தடைக்காக 13 மருத்துவமனைகள்: அமைச்சர் நேரு தகவல்

**சென்னை, ஜன.24:**

சென்னை: சென்னையில் மட்டும் 13 இடங்களில் நாய்களுக்கு கருத்தடை செய்ய மருத்துவ மனைகளை உருவாக்கி உள்ளதாக அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில், அதிமுக உறுப்பினர் தங்கமணி பேசும் போது, “தெரு நாய்கள் பிரச்சினை நீடித்துக் கொண்டே வருகிறது. குழந்தைகளும் இதில் பாதிக்கப் படுவதாக தொடர் செய்திகள் வெளிவருகின்றன. தெருநாய் கடிக்கு தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்தார் இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு, “நாய்க்கடி பிரச்சினையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு உள்ளது.

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் நாய்களை கொண்டு வந்து கருத்தடை செய்து பிடித்த இடத்திலேயே விட வேண்டுமென அதில் கூறப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையில் மட்டும் 13 இடங்களில் கருத்தடை செய்ய மருத்துவமனையை உருவாக்கி இருக்கிறோம்” என்று தெரிவித்தார்.

## நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 127 திட்டப் பகுதிகளில் ரூ.73 கோடியில் பணிகள்

**சென்னை, ஜன.24:**

சென்னை: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 127 திட்டப் பகுதிகளில் ரூ.72.73 கோடியில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தூய்மைப் பணிகளை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாநகராட்சி சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதிகளில் தூய்மையாகப் பராமரிக்கும் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 74 குடியிருப்புப் பகுதிகளில் ரூ.15.11 கோடியில் 15,039 மீட்டர் நீளமுள்ள 37 தார்ச் சாலைகள், 11 பேவர் பிளாக் சாலைகள், 56 சிமென்ட் கான்கிரீட் சாலைகள் என மொத்தம் 104 சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மேலும் குடியிருப்புப் பகுதிகளுக்குள் சமூக உள்கட்டமைப்பை வலுப்படுத்த 37 குழந்தைகள் மையங்கள், 15 நியாய விலைக் கடைகள், 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஓர் அம்மா உணவகம் மற்றும் சுற்றுச்சுவர்கள் ஆகியவற்றில் ரூ.13.33 கோடியில் புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளை மேம்படுத்த 9 பூங்காக்கள் மற்றும் 2 விளையாட்டு மைதானங்கள் ரூ.98.99 லட்சத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.10.85 கோடியில் 123 குடியிருப்புப் பகுதிகளில் மொத்தம் 1,476 விளக்கு கம்பங்கள், 9 உயர் கோபுர மின்விளக்குகள், 2,782 எல்இடி விளக்குகள் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

மேலும் ரூ.32.45 கோடியில் 173 குடியிருப்புப் பகுதிகளில் 1,22,014 குடியிருப்புகள் பயனடையும் வகையில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1,325 தூய்மைப் பணியாளர்கள் இப்பணியில் உள்ளனர். 406 குப்பைத் தொட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இரட்டை இலை சின்னம் குறித்த வழக்கு: டெல்லி ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் பதில் மனு தாக்கல்

**புதுடெல்லி, ஜன.24:**

டெல்லி ஐகோர்ட்டில் புகழேந்தி சார்பில் வழக்குரைஞர் எஸ்.மனோஜ் செல்வராஜ், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு எதிராக கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். அதில், "இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் டெல்லி ஐகோர்ட்டு கடந்த ஆண்டு மாரச் 24-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவை தேர்தல் ஆணையம் உரிய வகையில் செயல்படுத்தவில்லை.




இதுதொடர்பாககோர்ட்டை மனுதாரா மீண்டும் நாடியபோது ஐகோர்ட்டு 17.12,2024-இல் ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன் பிறகு, மனுதாரா தோதல் ஆணையத்தில் மனுக்களை அளித்த பிறகும், அவரது கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்து 14 மாதங்கள் ஆகிவிட்டபிறகும் இந்த நிலை உள்ளது. இதனால், கோர்ட்டு உத்தரவை செயல்படுத்தாமல் இருப்பதற்காக எதிா மனுதாராகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுகவின் இரட்டை இலை சின்னம் தொடர்பாக விரைந்து பதில் அளிக்காததுஏன்? தேர்தல் ஆணையத்திற்கு டெல்லி ஐகோர்ட்டு கேள்வி எழுப்பி இருந்தது. அதுமட்டுமின்றி, அதிமுக முன்னாள் நிர்வாகி புகழேந்தியின் நீதிமன்ற கோர்ட்டு வழக்கில் பதில் அளிக்கவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் டெல்லி ஐகோர்ட்டில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. தொடர்ந்து நடந்த விசாரணையின் போது, "அ.தி.மு.க.வின் சின்னம் ஒதுக்கீடு, பெயர் மற்றும் கொடி உள்ளிட்டவை தொடர்பாக பல்வேறு நபர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் தீவிர பரிசீலனையில் உள்ளது" என்று தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# க்ரைம் கார்னர்

## கொடுக்கல், வாங்கல் பிரச்சினையில் நண்பரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

**சென்னை, ஜன.24:**

சென்னை காசிமேடு சிங்காரவேலன் நகரைச் சேர்ந்த மீனவர் சுரேஷ்(27). இவரும் அதே பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமாரும் (23) நண்பர்கள். இருவருக்குமிடையே பணம், கொடுக்கல் வாங்கலில் தகராறு இருந்தது.

கடந்த 2015-ம் ஆண்டு பிப்.6 அன்று உணவகம் முன்பாக நின்று கொண்டிருந்த இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு தகராறு முற்றியது. ஆத்திரமடைந்த சதீஷ்குமார் கட்டையை எடுத்து சுரேஷின் தலையில் அடித்தார். இதில் படுகாயமடைந்த சுரேஷ் சிகிச்சை பலனின்றி இறந்தார். இது தொடர்பாக காசிமேடு போலீஸார் வழக்குப்பதிந்து சதீஷ்குமாரை கைது செய்தனர். இந்த வழக்கு சென்னை 3-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி கே.கீதாராணி முன்பாக நடந்தது. போலீஸ் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் டி.சுரேஷ் ஆஜராகி வாதிட்டார். அதையடுத்து நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட சதீஷ்குமாருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

## அதிகாரிகளை கொல்ல முயன்ற 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது

**கிருஷ்ணகிரி, ஜன.24:**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகேயுள்ள ஆனந்தூரில் டிச. 27-ம் தேதி ஊத்தங்கரை வட்டாட்சியர் ராஜலட்சுமி, துணை வட்டாட்சியர்கள் சகாதேவன், ஜெயபால் மற்றும் அலுவலர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அப்பகுதியில் உள்ள ஏரியில் மண் கடத்திய சிலரை தடுக்க முயன்றபோது, பொக்லைன் வாகனத்தை ஏற்றி அதிகாரிகளைக் கொல்ல முயன்றனர். இது தொடர்பாக செங்கம்பட்டி சுரேஷ் (47), ஊத்தங்கரை செங்கழுநீர்பட்டி தங்கபாலு (35) ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். இந்நிலையில், அவர்கள் இருவரையும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறு மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் உத்தரவிட்டார்.

## பெற்றோர் சம்மதத்துடன் நடைபெற்ற சிறுமியின் திருமணம்: சிறுமியை மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்த அதிகாரிகள்

**திருமுடிவாக்கம், ஜன.24:**

குன்றத்தூரை அடுத்த திருமுடிவாக்கத்தில் நேற்று பெற்றோர் சம்மதத்துடன் நடைபெற்ற திருமணத்தில் மணப்பெண் 17 வயதே ஆன சிறுமி என்பதால் அவரை மீட்டு சமூக நலத்துறை அதிகாரிகள் காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

திருமுடிவாக்கம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமிக்கு பெற்றோர் சம்மதத்துடன் நேற்று பழந்தண்டலத்தில் உள்ள வீட்டில் திருமணம் நடைபெற்றதாக காஞ்சிபுரம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பு அலுவலர் அமுதாவுக்கு தகவல் கிடைத்தது.

அவர், இது குறித்து படப்பையைச் சேர்ந்த சமூக நலத்துறை அதிகாரி செல்விக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக அதிகாரி செல்வி, தமது குழுவினருடன் நேற்று நள்ளிரவு பழந்தண்டலம் சென்று, அங்கு திருமணம் செய்த இளைஞருடன் இருந்த சிறுமியை மீட்டு, காஞ்சிபுரத்தில் உள்ள காப்பகத்தில் ஒப்படைத்தார்.

அவர் சிறுமி என்று தெரிந்தும் திருமணம் செய்த பழந்தண்டலம், சிக்னல் ஆபீஸ் ரோடு பகுதியைச் சேர்ந்த இளைஞர் தேவா (22), சிறுமியின் பெற்றோர், இளைஞரின் பெற்றோர் ஆகியோர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

# விளையாட்டு செய்திகள்

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: 400-வது வெற்றியை நெருங்கும் ஜோகோவிச்

**மெல்போர்ன், ஜன.24:**

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், போலந்தின் இகா ஸ்வியாடெக் ஆகியோர் 3-வது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் 5-ம் நாளான நேற்று ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் நடப்பு சாம்பியனான இத்தாலியின் ஜன்னிக் சின்னர் 6-1, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் தகுதி நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்தையும், 4-ம் நிலை வீரரும், 10 முறை சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் 141-ம் நிலை வீரரான இத்தாலியின் பிரான்செஸ்கோ மேஸ்ட்ரெல்லியையும் வீழ்த்தி 3-வது சுற்றுக்கு முன்னேறினார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஜோகோவிச்சின் 399-வது வெற்றியாக இது அமைந்தது. 400 வெற்றிகள் என்ற மைல்கல் சாதனையை படைக்க அவருக்கு மேற்கொண்டு ஒரு வெற்றி மட்டுமே தேவையாக உள்ளது.

## பி.வி.சிந்துவுக்கு 500-வது வெற்றி!

ஜகார்த்தா: இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பாட்மிண்டன் தொடர் இந்தோனேஷியாவில் உள்ள ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து 21-19, 21-18 என்ற நேர் செட் கணக்கில் டென்மார்க்கின் லின் ஹோஜ்மார்க் கஜேர்ஃபெல்ட்டை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். சர்வதேச பாட்மிண்டன் போட்டிகளில் பி.வி.சிந்துவின் 500-வது வெற்றியாக இது அமைந்தது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் லக்சயா சென் 21-10, 21-11 என்ற செட் கணக்கில் ஹாங் காங்கின் ஜேசன் குணவனை தோற்கடித்து கால் இறுதி சுற்றில் கால்பதித்தார். மற்றொரு இந்திய வீரரான கிடாம்பி காந்த் 11-21, 10-21 என்ற நேர் செட் கணக்கில் 4-ம் நிலை வீரரான சீன தைபேவின் சோ டியன் சென்னிடம் தோல்வி அடைந்தார்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: 3-வது சுற்றுக்கு முன்னேறிய இகா ஸ்வியாடெக்

**மெல்போர்ன், ஜன.24:**

கிராண்ட்ஸ்லாம் போட்டி தொடரில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி தொடர் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது.

பெண்கள் ஒற்றையர் 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் 2-ம் நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக் (போலந்து) மேரி பவுஸ்கோவாவை (செக்குடியரசு) எதிர்கொண்டார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய இகா ஸ்வியாடெக் 6-2, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் தொடர்ந்து 24-வது முறையாக 3-வது சுற்றுக்குள் நுழைந்தார்.

# ஆபாச வீடியோ, புகைப்படம்... மடாதிபதியிடம் ரூ.1 கோடி கேட்டு மிரட்டிய இளம்பெண் கைது

**பெங்களூரு, ஜன.24:**

கர்நாடகத்தில் பிரசித்தி பெற்ற ஒரு மடத்தின் மடாதிபதியை கடந்த 2 ஆண்டுக்கு முன்பு ஹனிடிராப் முறையில் இளம்பெண் உள்பட 3 பேர் சிக்க வைத்திருந்தனர். பின்னர் இளம்பெண் உள்பட 3 பேரும் கைது செய்யப்பட்டு இருந்தார்கள்.

இந்த நிலையில், அதே மடாதிபதியின் ஆபாச வீடியோ, புகைப்படம் இருப்பதாகவும், அதனை வெளியிடாமல் இருக்கவும் பணம் கேட்டு ஒரு இளம்பெண் மிரட்டல் விடுத்தார் அந்த மடாதிபதி வேலை விஷயமாக பெங்களூருவுக்கு வந்திருந்தார். அப்போது மடாதிபதியை சந்தித்த இளம்பெண் ஆபாச வீடியோ, புகைப்படங்களை வெளியிடாமல் இருக்க ரூ.1 கோடி வேண்டும் என்று கேட்டு மிரட்டல் விடுத்தார்.






ஆனால் அவர் ரூ.1 கோடி கொடுக்க மறுத்து விட்டார். பின்னர் இளம்பெண் மிரட்டலுக்கு பயந்து ரூ.4½ லட்சத்தை மடாதிபதி கொடுத்திருந்தார். இருப்பினும் தொடர்ந்து மடாதிபதியிடம் ரூ.1 கோடி கேட்டு இளம்பெண் மிரட்டல் விடுத்து வந்தார். இதையடுத்து, நடந்த சம்பவங்கள் பற்றி பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீசில் மடாதிபதி புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், மடாதிபதிக்கு மிரட்டல் விடுத்ததாக சிக்கமகளூரு மாவட்டத்தை சேர்ந்த ஸ்பூர்த்தி (வயது 25) என்ற இளம்பெண்ணை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். அவரிடம் இருந்து பணம், செல்போன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மடாதிபதியை மிரட்டி பணம் பறித்ததை ஸ்பூர்த்தி ஒப்புக்கொண்டுள்ளார். மடாதிபதியை மிரட்டி பணம் பறித்த சம்பவத்தின் பின்னணியில் வேறு யாரும் உள்ளார்களா? என ஸ்பூர்த்தியிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

# பைக் டாக்ஸிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம் - கர்நாடக ஐகோர்ட் உத்தரவு!

**பெங்களூரு, ஜன.24:**

கர்நாடக மாநிலத்தில் விதிக்கப்பட்டுள்ள பைக் டாக்ஸி சேவைகளுக்கான தடையை அம்மாநில உயர் நீதிமன்றம் இன்று நீக்கி உத்தரவிட்டது. மேலும், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் இருசக்கர வாகனங்களை போக்குவரத்து வாகனங்களாகப் பதிவு செய்து, அவற்றுக்கு ஒப்பந்த வாகனப் போக்குவரத்து அனுமதி வழங்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.




தலைமை நீதிபதி விபு பக்ரு மற்றும் நீதிபதி சி.எம். ஜோஷி ஆகியோர் அடங்கிய அமர்வு, ஓலா, ஊபர் மற்றும் ராபிடோ உள்ளிட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்த மேல்முறையீடுகள் மீது இன்று தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பில், கர்நாடகாவில் பைக் டாக்ஸிகள் இயக்கத்திற்கு அனுமதி அளித்ததுடன், சட்டப்பூர்வ அனுமதிகளுக்கு உட்பட்டு இருசக்கர வாகனங்களை போக்குவரத்து வாகனங்களாகப் பயன்படுத்தலாம் என்றும் தீர்ப்பளித்தது.

ராபிடோ, ஓலா மற்றும் உபேர் நிறுவனங்களின் பைக் டாக்ஸி சேவைகளை இயக்குவதற்கு கடந்த ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி தனி நீதிபதி தடை விதித்திருந்தார். இதனை எதிர்த்து அந்த நிறுவனங்கள் மேல்முறையீடு செய்திருந்தன.

தற்போது, உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தனி நீதிபதியின் தீர்ப்பை ரத்து செய்ததுடன், நிறுவனங்கள் பைக் டாக்ஸி சேவைகளை வழங்க தற்போதைய விதிகளின் கீழ் உரிமம் வழங்குவதற்கு, கூடுதல் நிபந்தனைகளை விதிக்கவும் கர்நாடக அரசுக்கு சுதந்திரம் அளித்துள்ளது. மேலும், இருசக்கர வாகன உரிமையாளர்கள் மற்றும் பைக் டாக்ஸி நிறுவனங்கள் உரிமங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தற்போதுள்ள சட்டங்களின்படி அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

விண்ணப்பங்களின் அனைத்து தொடர்புடைய அம்சங்களையும் மாநில அரசு ஆராயலாம் என்றாலும், வாகனம் ஒரு மோட்டார் சைக்கிள் என்பதற்காக மட்டும் டாக்ஸி பதிவை மறுக்க முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

# வணிகச் செய்திகள்

## தூத்துக்குடியில் 25,000 ஏக்கரில் சீரமைப்பு பணிகள் தீவிரம்: 25 லட்சம் டன் உப்பு உற்பத்திக்கு இலக்கு



**தூத்துக்குடி, ஜன.24:**

தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி என்ற இலக்கை குறிவைத்து 25 ஆயிரம் ஏக்கர் உப்பளங்களை தயார்படுத்தும் பணிகள் தொடங்கி உள்ளன. நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத்துக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி மாவட்டம் 2-ம் இடத்தில் உள்ளது. அம்மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையாபுரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக்கான பணிகள் தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான 6 மாதங்கள் தான் உப்பு உற்பத்திக்கு உகந்த காலம். அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் உப்பு சீஸன் முடிவடையும். ஆண்டுக்கு சராசரியாக 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு சுமார் 19 லட்சம் டன் உப்பு மட்டுமே உற்பத்தியானது. குறைவாக உற்பத்தி செய்யப்பட்டாலும் தமிழகத்தில் உப்பு விலை உயரவில்லை. இந்நிலையில், கடந்த 19-ம் தேதி தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை விலகியது. இதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் ஏக்கர் உப்பளங்களையும் சீரமைக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

# பரஸ்பர ஒப்புதலுடன் உல்லாசத்தில் ஈடுபடுவது கற்பழிப்பு ஆகாது: கர்நாடக ஐகோர்ட்டு கருத்து

**பெங்களூரு, ஜன.24:**

பெங்களூருவில் வசித்து வரும் ஒரு பெண்ணுக்கும், வக்கீலுக்கும் இடையே இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் பெண்ணை திருமணம் செய்வதாக வக்கீல் கூறினார். மேலும் அந்த பெண்ணுடன் கடந்த 2022-ம் ஆண்டில் இருந்து 2 ஆண்டுகள் வக்கீல் பலமுறை உல்லாசம் அனுபவித்ததாக கூறப்படுகிறது. அதேநேரத்தில் அந்த பெண்ணை திருமணம் செய்ய வக்கீல் மறுத்து விட்டார்.

அத்துடன் வக்கீலுக்கு வேறு ஒரு பெண்ணை பார்த்து திருமணம் செய்து வைக்க குடும்பத்தினரும் முயற்சித்தனர். இதுதொடர்பாக அந்த வக்கீல் மீது பெண் அளித்த புகாரின் பேரில் பெங்களூரு போலீசில் கற்பழிப்பு வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், தன்மீது பதிவான கற்பழிப்பு




வழக்கை ரத்து செய்ய கோரி கர்நாடக ஐகோர்ட்டில் வக்கீல் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

அந்த மனு மீதான விசாரணை ஐகோர்ட்டு நீதிபதி நாகபிரசன்னா முன்னிலையில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணை நிறைவுபெற்றதை தொடர்ந்து நீதிபதி தீர்ப்பு கூறினார். அப்போது திருமண ஆசைவார்த்தை கூறி, 2 பேரும் பரஸ்பர ஒப்புதலுடன் உல்லாசத்தில் ஈடுபடுவது கற்பழிப்பு ஆகாது. இதனை சுப்ரீம் கோர்ட்டு பல்வேறு வழக்குகளில் சுட்டிக்காட்டி தீர்ப்பும் கூறி இருப்பதை இந்த நேரத்தில் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வேறு ஒருவருடன் திருமணமாகி, குழந்தைகளும் உள்ளனர். இதனை அவரே புகாரில் கூறி உள்ளார். எனவே திருமண ஆசை வார்த்தை கூறி தன்னை வக்கீல் கற்பழித்ததாக கூறுவதை ஏற்க முடியாது.

அதனால் வக்கீல் மீது பதிவான கற்பழிப்பு வழக்கை ரத்து செய்வதுடன், அவர் மீது கீழ் கோர்ட்டில் நடக்கும் விசாரணையும் ரத்து செய்யப்படுவதாக நீதிபதி நாகபிரசன்னா தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

# ஜம்மு காஷ்மீரில் 200 அடி பள்ளத்தில் ராணுவ வாகனம் கவிழ்ந்து 10 வீரர்கள் உயிரிழப்பு

ஜம்மு, ஜன.24:

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் 200 அடி ஆழ பள்ளத்தில் ராணுவ வாகனம் கவிழ்ந்த விபத்தில் 10 வீரர்கள் உயிரிழந்தனர். 11 வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்காக ராணுவ வாகனம் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. குண்டுதுளைக்காத இந்த வாகனத்தில் 20-க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் இருந்தனர்.

இந்நிலையில் பதேர்வா-சம்பா சாலையில், 9,000 அடி உயரம் உள்ள கன்னி டாப் பகுதியில் செல்லும்போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம், 200 அடி ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் அந்த வாகனம் உருக்குலைந்தது.




மோசமான வானிலை: விபத்து குறித்து ராணுவத்தின் ஒயிட்நைட் படைப் பிரிவு வெளியிட்டுள்ள 'எக்ஸ்' பதிவில், 'ஒரு ராணுவ நடவடிக்கைக்காக துருப்புகளை ஏற்றிச்சென்ற வாகனம் தோடாவில் ஆபத்தான நிலப்பரப்பில் பயணித்தபோது மோசமான வானிலை காரணமாக சாலையில் இருந்து தவறிவிழுந்தது' என்று கூறப்பட்டுள்ளது. விபத்தை தொடர்ந்து சம்பவ இடத்தில் ராணுவம் மற்றும் காவல் துறையினர் உடனடியாக மீட்புப் பணிகளை தொடங்கினர். இதில் 4 வீரர்கள் சடலமாகவும் 17 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். காயம் அடைந்த வீரர்கள் பதேர்வா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு சிகிச்சை பலனின்றி 6 பேர் உயிரிழந்தனர். இதனால் விபத்தில் உயிரிழந்த வீரர்கள் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது. 11 வீரர்கள் உயர் சிகிச்சைக்காக உதம்பூர் ராணுவ மருத்துவமனைக்கு ஹெலிகாப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தலைவர்கள் இரங்கல்: விபத்து குறித்து பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா, ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, முன்னாள் முதல்வர்கள் குலாம் நபி ஆசாத், மெகபூபா முப்தி, காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'தோடாவில் நடந்த துயரச் சம்பவத்தால் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். இதில் நமது துணிச்சலான ராணுவ வீரர்கள் சிலரை நாம் இழந்துவிட்டோம். தேசத்துக்கு அவர்கள் ஆற்றிய சேவை என்றென்றும் நினைவுகூரப்படும். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன' என்று தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் அமித்ஷா 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜம்மு காஷ்மீரின் தோடா பகுதியில் நடந்த சாலை விபத்தால் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் நாம் இழந்த வீரத் தியாகிகளின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறேன். காயமடைந்த வீரர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து வீரர்களும் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

## பிரேஸில் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு

புதுடெல்லி, ஜன.24:

பிரேஸில் அதிபர் லூலா டி சில்வாவுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக வியாழக்கிழமை கலந்துரையாடினார். அப்போது தெற்குலகில் இந்தியா-பிரேஸில் இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர். இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'பிரேஸில் அதிபர் லூலா டி சில்வாவுடன் கலந்துரையாடியதில் மகிழ்ச்சி. இந்தியா-பிரேஸில் இடையேயான இருதரப்பு உறவை பன்மடங்கு மேம்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தோம். தெற்குலகின் தேவைகளை பூர்த்திசெய்ய இருநாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அதிபர் லூலா டி சில்வாவை இந்தியாவில் வரவேற்க காத்திருக்கிறேன்' என குறிப்பிட்டார்.

## இண்டிகோ லாபம் 78% சரிவு

புதுடெல்லி, ஜன.24:

நாட்டின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனமான இண்டிகோவும் மூன்றாவது காலாண்டு நிகர லாபத்தில் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த 2024, டிசம்பர் காலாண்டில் ரூ.2,448.8 கோடியாக இருந்த நிகர லாபம், இந்த ஆண்டு அதே காலாண்டில் வெறும் ரூ.549.1 கோடியாகக் குறைந்துள்ளது. இது 78 சதவீத வீழ்ச்சியாகும். வருவாய் ரூ.24,541 கோடியாக உயர்ந்த போதிலும், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சேவைக் குறைப்பு குளறுபடியால் லாபம் குறைந்தது. விமானச் சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டதால், இண்டிகோவின் 10 சதவீத விமானங்களை ரத்து செய்ய டிஜிசிஏ உத்தரவிட்டது. இந்தக் கட்டுப்பாடு வரும் பிப். 10 வரை நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மராட்டியம்: மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பள்ளி வேன் டிரைவர் கைது

மும்பை, ஜன.24:

மராட்டிய மாநிலம் தானே மாவட்டம் பத்லாபூர் பகுதியில் தனியார் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் மாணவ, மாணவியரை அழைத்துச்செல்ல வேன் உள்ளது. இந்த வேனின் டிரைவராக 35 வயது நபர் வேலை செய்து வந்தார். இந்நிலையில், அந்த பள்ளியில் உள்ள மாணவ, மாணவியர் நேற்று மாலை வகுப்பு முடிந்து வேனில் வீட்டிற்கு சென்றுள்ளனர். அனைத்து மாணவ, மாணவியரையும் இறக்கிவிட்டப்பின் கடைசியாக இருந்த மாணவிக்கு வேன் டிரைவர் வேனில் வைத்து பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். வேன் டிரைவர் பாலியல் தொல்லை கொடுத்தது குறித்து பாதிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோரிடம் கூறியுள்ளார். இதையடுத்து பெற்றோர் உடனடியாக போலீசில் புகார் அளித்துள்ளார். வழக்குப்பதிவு செய்த போலீசார், வேன் டிரைவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## கான்பூர் ஐஐடியில் தற்கொலைகள்: விசாரிக்க 3 பேர் குழு அமைப்பு

புதுடெல்லி, ஜன.24:

உத்தர பிரதேச மாநிலம், கான்பூர் ஐஐடியில் மாணவர் தற்கொலைகள் தொடர்வது குறித்து விசாரணை மேற்கொண்டு, நாட்டின் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பரிந்துக்க 3 பேர் குழுவை மத்திய அரசு வியாழக்கிழமை அமைத்தது. கான்பூர் ஐஐடியில் கடந்த ஒரு மாதத்தில் இரண்டு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. தேசிய கல்வி தொழில்நுட்ப அமைப்பின் (என்இடிஎஃப்) தலைவர் அனில் சஹஸ்ரபுத்தே தலைமையிலான இந்தக் குழுவில் மனநல நிபுணர் ஜிதேந்திர நாக்பால், மத்திய உயர்கல்வித் துறை இணைச் செயலர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## வீட்டைவிட்டு சென்ற சிறுவன் பெங்களூரில் மீட்பு

புதுடெல்லி, ஜன.24:

டில்லி புராரி பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவன் படிப்பைவிடுத்து கைப்பேசியை அதிக நேரம் பயன்படுத்தியதால் சிறுவனை அவரது பெற்றோர் கண்டித்து வந்தனர். கடந்த ஜன.11-ஆம் தேதி இதைக் கண்டித்த தாயார், சிறுவனிடமிருந்து கைப்பேசியைப் பறித்தார். இதுதொடர்பாக தாயாருக்கும் மகனுக்கும் சண்டை ஏற்பட்டது. கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய சிறுவன், தனது தந்தையின் கைப்பேசியை எடுத்துச்சென்றார். மகன் காணாமல் சென்றதை அறிந்த அவரது பெற்றோர் அக்கம்பக்கத்தில் தேடினர். பின்னர், தனது மகன் கடத்தப்பட்டதாக சிறுவனின் தந்தை காவல் நிலையத்தில் புகாரளித்தார். இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்த காவல் துறையினர், ஒரு தனிப்படை அமைத்து விசாரணை நடத்தினர். இதையடுத்து பெங்களூரு ரயில்வே நிலையத்தில் ஜன.15-ஆம் தேதி காலையில் உள்ளூர் ரயில்வே காவலர்கள் சிறுவனைப் பாதுகாப்பாக மீட்டனர். சிறுவனின் தந்தையுடன் டில்லி காவல் துறையினர் ஜன.19-ஆம் தேதி பெங்களூருக்கு வந்தனர். உரிய சட்டநடவடிக்கைகளுக்குப் பின் சிறுவன் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்புக்கு இந்தியா தயார் - அஸ்வினி வைஷ்ணவ்

புதுடெல்லி, ஜன.24:

'உலகெங்கிலும் விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. இந்தியாவுடன் இணைந்து எதிர்காலத்துக்கு பங்காற்றுங்கள்' என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை, மின்னணு மற்றும் தகவல்தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அழைப்பு விடுத்தார்.

ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றுவரும் உலக பொருளாதார அமைப்பின் ஆண்டு கூட்டத்துக்கு பல்வேறு மாநில முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் கொண்ட குழுவை வழிநடத்திச் சென்றுள்ள அஸ்வினி வைஷ்ணவ், அங்கு அளித்த பேட்டியில் இக் கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:




கடந்த 11 ஆண்டுகளாக இந்திய பொருளாதாரம் உலகளாவிய பங்கேற்புக்கு திறந்துவிடப்பட்டுள்ளதன் மூலம் எந்த அளவுக்கு சிறந்த மாற்றங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது என்ற தெளிவான தகவலை டாவோஸ் மாநாட்டில் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம். விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. உலக நாடுகளின் புதிய சிந்தனைகள், யோசனைகளையும் ஏற்க இந்தியா தயாராக உள்ளது. குறைமின் கடத்தி உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, பசுமை எரிசக்தி உள்பட பிற துறைகளிலும் விரும்பும் நாடுகளுடன் ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா விருப்பம் கொண்டுள்ளது என்றார்.

## ஊதிய ஊரக வேலைச் சட்டத்துக்கு எதிராக ஏழைகள் ஒன்று திரள வேண்டும் - ராகுல் காந்தி

புதுடெல்லி, ஜன.24:

டில்லியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஊழியர்களின் தேசிய மாநாடு காங்கிரஸ் சார்பில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசியதாவது:



வேலை தேவைப்படுவோருக்கு வேலை அளிப்பதே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சாராம்சம். அந்தத் திட்டம் அரசின் 3 அமைப்புகளாலும், பஞ்சாயத்து அமைப்புகளாலும் செயல்படுத்தப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அனைத்து ஏழைகளும் வேலை செய்ய உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இதனால் பிரதமர் மோடியும், பாஜகவும் அந்தத் திட்டத்துக்கு முடிவு கட்ட விரும்பினர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு மூன்று கருப்பு வேளாண் சட்டங்களை அவர்கள் கொண்டு வந்தனர். விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அந்தச் சட்டத்தை தடுத்து நிறுத்தினர். விவசாயிகளுக்கு எதிராகச் செயல்பட்டது போலத்தான், தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத் திட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் மத்திய அரசு செயல்படுகிறது.

புதிய சட்டத்தின் மூலம், பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வேலை மற்றும் நிதி ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் (பாஜக) சொத்துகள் அனைத்தும் சிலரிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்படி இருந்தால், ஏழை மக்கள் அதானி-அம்பானியை சார்ந்திருப்பர். இதுதான் அவர்கள் விரும்பும் இந்தியா.

புதிய சட்டத்தின் பெயரை என்னால் நினைவுபடுத்தவே இயலவில்லை. உங்களுக்காவது (மாநாட்டில் கலந்துகொண்டோர்) புதிய சட்டத்தின் பெயர் நினைவுக்கு வருகிறா?.

அரசமைப்புச் சட்டம் மற்றும் தேசத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள ஏழைகளுக்கு இந்த இயக்கம் புதிய வாய்ப்பாகும். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால், மோடி பின்வாங்கிவிடுவார்.

மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என்றார் ராகுல்.

## எஸ்ஐஆர் மன அழுத்தத்தால் 110 பேர் இறப்பு - மம்தா குற்றச்சாட்டு

கொல்கத்தா, ஜன.24:

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் 49-ஆவது புத்தக கண்காட்சியை வியாழக்கிழமை தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசியதாவது: மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட எஸ்ஐஆர் நடவடிக்கையில் முரண்பாடான தகவல்களை வழங்கியதாக வகைப்படுத்தி சிலரிடம் அடையாள ஆவணங்களை இந்திய தேர்தல் ஆணையம் கோரியுள்ளது. நான் பிறந்த தேதி குறித்து விளக்கமளிக்க என்னிடம் தந்தம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உள்ளது. ஆனால் முந்தைய தலைமுறையை சேர்ந்த பலரிடமும் முறையான ஆவணங்கள் இருக்க வாய்ப்பில்லை. அவர்களை நீண்ட வரிசையில் தேர்தல் ஆணையம் காத்திருக்க வைப்பது வருத்தமளிக்கிறது. இவ்வாறு எஸ்ஐஆர் நடவடிக்கையால் ஏற்பட்ட மன அழுத்தம் மற்றும் அச்சம் காரணமாக மாநிலத்தில் 110 பேர் உயிரிழந்துவிட்டனர். எஸ்ஐஆர் நடவடிக்கையால் மக்கள் படும் துயரங்களை 26 கவிதைகளாக தொகுத்துள்ளேன். இந்த நூல் புத்தக கண்காட்சியில் இடம்பெறவுள்ளது. இது என்னுடைய 162-ஆவது நூலாகும் என்றார்.

## ஜார்க்கண்ட்: மாவோயிஸ்ட் தலைவர் உள்பட 15 பேர் சுட்டுக் கொலை

புதுடெல்லி, ஜன.24:

மேற்கு சிங்பூம் மாவட்டத்தில் நிகழ்ந்த இந்த மோதல் குறித்து காவல் துறையினர் கூறியதாவது: கிரிபுரா காவல் நிலைய எல்லைக்குள்பட்ட சரான்தா வனப் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. அந்தப் பகுதியில் காவல் துறையினர் மற்றும் துணை ராணுவப் படையினர் என 1,500 பேர் அடங்கிய குழு ஏற்கெனவே பணியில் உள்ளது. மாவோயிஸ்டுகள் குறித்து தகவல் கிடைத்ததும் கடந்த இரு நாள்களாக தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. வியாழக்கிழமை காலையில் வனப் பகுதியில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பும் பரஸ்பரம் துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். பாதுகாப்புப் படையினரின் தீவிர தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாமல் மாவோயிஸ்டுகள் படிப்படியாகப் பின்வாங்கி அடர்ந்த வனத்துக்குள் தப்பியோடினர். அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையின்போது, குண்டு பாய்ந்து உயிரிழந்த 15 மாவோயிஸ்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டன. மாவோயிஸ்ட் அமைப்பின் மூத்த தலைவர் பட்டிராம் மாஜி என்ற அனல் தா உடலும் மீட்கப்பட்டது.

## மக்கள்தொகை கணக்கெடுப்பில் கேட்க வேண்டிய 33 கேள்விகள் - மத்திய அரசு வெளியீடு

புதுடெல்லி, ஜன.24:

மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது குடிமக்களிடம் கேட்க வேண்டிய 33 கேள்விகளை மத்திய அரசு வியாழக்கிழமை வெளியிட்டது. நிகழாண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் வரை வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ள நிலையில் மத்திய அரசு இந்த அறிவிக்கையை வெளியிட்டது. மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிவிப்பை கடந்த ஜூன் மாதம் மத்திய அரசு வெளியிட்டது. இரண்டு கட்டங்களாக இந்தக் கணக்கெடுப்புப் பணி நடைபெற உள்ளது. வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணியைத் தொடர்ந்து 2027-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஜாதிவாரி கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்பட உள்ளது.

இந்நிலையில், இந்திய பதிவாளர் ஜெனரல் மிருத்யுஞ்சய் குமார் நாராயண் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் குடிமக்களிடம் மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் கேட்க வேண்டிய 33 கேள்விகள் இடம்பெற்றன. இந்தப் பணிகளை மேற்கொள்ள ரூ.11,718 கோடி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அமைச்சரவை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஒப்புதல் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# ஏர் இந்தியாவுக்கு ரூ.15,000 கோடி நஷ்டம்? அகமதாபாத் விபத்து, வான்வழித் தடையால் பின்னடைவு

புதுடெல்லி, ஜன.24:

டாடா குழுமத்துக்குச் சொந்தமான ஏர் இந்தியா நிறுவனம், நடப்பு நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய நஷ்டத்தைச் சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அகமதாபாத் விமான விபத்து மற்றும் அண்டை நாடுகளின் வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக, இந்த ஆண்டு மட்டும் நிறுவனத்துக்கு சுமார் ரூ.15,000 கோடி இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நஷ்டத்திலிருந்து மீண்டு, லாபத்தை நோக்கி நகர கடந்த சில ஆண்டுகளாக ஏர் இந்தியா பல முயற்சிகளை எடுத்து வந்தது. இந்த நிதியாண்டில் 'லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை' என்ற சமநிலையை அடைந்துவிடலாம் என்று அதன் உரிமையாளர்கள் நம்பியிருந்தனர். ஆனால், கடந்த ஜூன் மாதம் அகமதாபாதில் 240-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த விமான விபத்து, அந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது.

பாகிஸ்தான் தடையால் கூடுதல் சுமை: முன்னதாக, எல்லைப் பதற்றம் காரணமாக இந்திய விமானங்கள் தங்கள் நாட்டு வான்பரப்பை பயன்படுத்த பாகிஸ்தான் தடை விதித்தது.

இதனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் நீண்ட தூரம் சுற்றிச்செல்ல வேண்டியுள்ளது. இது எரிபொருள் உள்பட விமானத்தை இயக்குவதற்கான செலவுகளைப் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

3 ஆண்டுகளில் ரூ.32,210 கோடி இழப்பு: கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஏர் இந்தியாவுக்கு மொத்தம் ரூ.32,210 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க, அதன் முக்கியப் பங்குதாரர்களான டாடா சன்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனங்களிடம் கடந்த ஆண்டு ரூ.10,000 கோடி கூடுதல் நிதி கேட்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பாதிப்பு: ஏர் இந்தியாவில் 25.1 சதவீதப் பங்குகளை வைத்துள்ள சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் இந்த நஷ்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. விஸ்தாரா-ஏர் இந்தியா நிறுவனங்களின் இணைப்புக்குப் பிறகு, ஏர் இந்தியாவின் வீழ்ச்சி சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் வருவாயிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

தலைமை மாற்றத்துக்குத் திட்டம்: இதனிடையே, நிறுவனத்தின் நிர்வாகக் குழு அளித்த 5 ஆண்டு கால மீட்புத்திட்டத்தை ஏர் இந்தியா இயக்குநர்கள் குழு நிராகரித்துள்ளது.

தொடர் நஷ்டம் மற்றும் பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக, தற்போதைய தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) கேம்ப்பெல் வில்சனுக்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்க டாடா குழுமம் ஆலோசித்து வருகிறது. எனினும், அகமதாபாத் விபத்து குறித்த இறுதி அறிக்கை வந்த பிறகே இதுகுறித்த அதிகாரபூர்வ முடிவு எடுக்கப்படும்.

# ஐரோப்பா சரியான திசையில் செல்லவில்லை : டிரம்ப் விமர்சனம்

**நியூயார்க், ஜன.24:**

ஐரோப்பா தற்போது சரியான திசையில் செல்லவில்லை, மிகவும் எதிர்மறையான விதத்தில் அடையாளம் காண முடியாத நிலைக்கு மாறிவிட்டது என உலகப் பொருளாதார மன்றத்தில் பேசியபோது டிரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார். ஐரோப்பாவின் மீது அன்பு இருக்கிறது. அவர்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன் எனவும் அவர் கூறியுள்ளார். கிரீன்லாந்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற டிரம்ப்பின் நிலைப்பாடு காரணமாக டிரம்புக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே முரண்பாடு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் கராச்சி தீ விபத்து: 50 பேரிடம் டிஎன்ஏ மாதிரி சேகரிப்பு

**கராச்சி, ஜன.24:**

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள 'குல் ஷாப்பிங் பிளாசா' என்ற வணிக வளாகத்தில் கடந்த வாரம் சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. 36 மணி நேர போராட்டத்துக்குப் பின், தீயணைப்பு படையினர் தீயை முற்றிலும் அணைத்தனர்.

அங்கு உடல்களை சேகரிக்கும் பணிகள் நடந்து வந்தன. இதுவரை மொத்தம் 61 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இவற்றில் 11 பேரின் உடல்களை மட்டுமே அடையாளம் காண முடிந்தது. 50 உடல்களை அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகி இருந்தன. அவர்களை அடையாளம் காண, காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 50 பேரிடம் டிஎன்ஏ மாதிரிகளை பாகிஸ்தான் அதிகாரிகள் சேகரித்துள்ளனர்.

இதற்கிடையில், இந்த தீ விபத்து குறித்து நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்கு மீட்புப் பணிகள் முற்றிலும் முடிவடைய இன்னும் 10 முதல் 15 நாட்கள் ஆகும் என கராச்சி தீயணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

# காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல்: வெளியுறவுத்துறை கண்டனம்




**குரோஷி, ஜன.24:**

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான குரோஷியாவில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தின் மீது காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் வியாழக்கிழமை (ஜன.22) அன்று குரோஷியா தலைநகரான ஸாகிரேப்பில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது நடந்துள்ளது. சம்பவத்தன்று அத்துமீறி இந்திய தூதரகத்துக்குள் நுழைந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர், அங்கு தாக்குதல் நடத்தி உள்ளனர். தொடர்ந்து அங்கிருந்த இந்திய தேசிய கொடியினை அவர்கள் அகற்றியாகவும் தகவல்.

"இந்தியாவுக்கு எதிராக செயல்படும் சிலர், குரோஷியாவில் அமைந்துள்ள எங்கள் தூதரகத்தின் உள்ளே அத்துமீறி நுழைந்து, தாக்குதல் நடத்தி உள்ளனர். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவத்தை குரோஷிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். இதற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென புதுடெல்லி மற்றும் ஸாகிரேப்பில் உள்ள குரோஷியா அதிகாரிகளிடத்தில் வலியுறுத்தி உள்ளோம்.

இதுமாதிரியான செயல்கள் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பின்னணியை எடுத்துரைக்கும் வகையில் உள்ளது. நிச்சயம் இது சட்ட ரீதியான நடவடிக்கைக்குள் அவர்களை உட்படுத்தும்" என வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் இடையே அடுத்த வாரம் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ள நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

# கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்றது: ரஷ்ய அதிபர் புதின்




**மாஸ்கோ, ஜன.24:**

கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்ற விஷயம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

ஆர்டிக் பகுதியில் அமைந்துள்ள கிரீன்லாந்து, ஐரோப்பிய நாடான டென்மார்க் ஆட்சி அதிகாரத்தின் கீழ் உள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் நிர்பந்தம் அளித்து வருகிறார்.

மேலும், கிரீன்லாந்தில் வாழும் சுமார் 57 ஆயிரம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் டாலர் அளிப்பேன் என்றும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கு டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அதிபர் ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து கிரீன்லாந்தில் டென்மார்க் அரசு படைகளை குவித்து கண்காணித்து வருகிறது. இதற்கிடையில் ட்ரம்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கிரீன்லாந்து மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிடம் மாஸ்கோவில் நேற்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு புதின் அளித்த பதில் வருமாறு: கிரீன்லாந்து பகுதியை ஒரு காலனியாகவே டென்மார்க் நிர்வகித்து வருகிறது. அப்பகுதி மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு உள்ளன.

எந்த காரணத்துக்காகவும் நாங்கள் கிரீன்லாந்தை உரிமம் கொண்டாட மாட்டோம்.

இது எங்களுக்கு தேவையில்லாத விஷயம். இந்த பிரச்சினையை அவர்களே (அமெரிக்கா, டென்மார்க்) தீர்த்து கொள்வார்கள். இவ்வாறு அதிபர் புதின் தெரிவித்துள்ளார்.

## ட்ரம்ப் வாபஸ்

கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு விடுக்கப்பட்ட வர்த்தக வரி விதிப்பு மிரட்டலை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அதிரடியாக வாபஸ் பெற்றார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்றுள்ள அதிபர் ட்ரம்ப், கிரீன்லாந்து மீதான அமெரிக்காவின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

ஒத்துழைக்க தவறினால் 8 ஐரோப்பிய நாடுகளின் மீது கடுமையான வர்த்தக வரி விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த வரிவிதிப்பு திட்டத்தை கைவிடுவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த திடீர் மனமாற்றத்தைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளன.

# ஆஸ்திரேலியாவில் துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழப்பு; ஒருவர் படுகாயம்



**மெல்போர்ன், ஜன.24:**

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் நேற்று மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.


இதுகுறித்து நியூ சவுத் வேல்ஸ் போலீஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: லேக் கார்ஜெல்லிகோவில் சுமார் 1,500 பேர் வசித்து வருகின்றனர். இந்த நகரில் உள்ள ஒரு வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்தை மீட்புப் படையினர் வந்தடைந்தபோது அங்கு இரண்டு பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மொத்தம் மூன்று பேர் சடலமாக கிடந்தனர். மேலும், படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது. அவர்களைப் பிடிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அப்பகுதி மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்கு மாறும், அவசியமின்றி வெளியே வர வேண்டாம் என்றும் குறுஞ்செய்திகள் மூலம் போலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த டிசம்பர் 14-ம் தேதி சிட்னியில் ஹனுக்கா பண்டிகையின் போது மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் உயிரிழந்தனர். அந்த துயர சம்பவத்தின் நினைவாக நேற்று ஆஸ்திரேலியா முழுவதும் தேசிய துக்க தினம் அனுசரிக்கப்பட்டது. இந்தச் சூழலில் மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது ஆஸ்திரேலிய மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் போராட்ட உயிரிழப்பு 3,117: அரசு தொலைக்காட்சி முதல் முறை தகவல்



**துபாய், ஜன.24:**

ஈரானில் நடைபெற்ற போராட்டத்தில் இதுவரை 3,117 பேர் உயிரிழந்துள்ளதாக அரசு தொலைக்காட்சி முதல் முறையாகத் தெரிவித்துள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிராக கடந்த 28-ம் தேதி தொடங்கிய போராட்டம் கலவரமாக மாறியது. குறிப்பாக ஹிஜாப் அணிவது உட்பட பல கட்டுப்பாடுகளை எதிர்த்து ஆயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் இறங்கினர். இதில் 5,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அமெரிக்காவை சேர்ந்த மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியது. இதை ஈரான் அரசு மறுத்தது. இந்நிலையில் போராட்டத்தில் இதுவரை 3,117 பேர் உயிரிழந்துள்ளதாக ஈரான் அரசு தொலைக்காட்சி முதல் முறையாக கடந்த புதன்கிழமை தகவல் வெளியிட்டது.

ஈரானில் தற்போது போராட்டம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. எனினும், ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

# உலகின் பழமையான குகை ஓவியம் இந்தோனேஷியாவில் கண்டுபிடிப்பு



**ஜகார்த்தா, ஜன.24:**

உலகின் பழமையான குகை ஓவியம் இந்தோனேசியாவில் கடற்கரையில் உள்ள முனா தீவில் ஒரு குகையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டபோது ஒரு சுண்ணாம்புக் குகையின் சுவரில் மனிதனால் உருவாக்கப்பட்ட பாறை ஓவியங்களை கண்டுபிடித்தனர். குகையின் சுவரில் காணப்படும் சிவப்பு நிற கை ஓவியம், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிகவும் பழமையான பாறை ஓவியம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். மற்ற ஓவியங்களில் பறவைகளின் தலைகள் மற்றும் பிற விலங்குகளின் அம்சங்களைக் கொண்ட மனித உருவங்கள் காணப்பட்டன. குகைச் சுவரில் கைகளை வைத்து, அதன் மேல் நிறமிகளை ஊற்றி இந்த உருவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் சில விரல் நுனிகள் கூர்மையாக தெரியும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. 'இந்த குகை ஓவியம் சுமார் 67,800 ஆண்டுகள் பழமையானது என்றும் இது ஸ்பெயினில் உள்ள 66,700 ஆண்டுகள் பழமையான நியண்டர்தால் கை அச்சை விட சற்றே பழமையானது என்றும் தெரிவித்தனர். இதற்கு முன்பு தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட 73,000 ஆண்டுகள் பழமையான குறியீடுகள் கற்களில் செதுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் மலையடிவாரத்தில் நிலச்சரிவு; சுற்றுலா முகாம்கள் புதைந்தன - பலர் மாயம்

**வெலிங்டன், ஜன.24:**

நியூசிலாந்தின் ஆக்லாந்தில் இருந்து தென்கிழக்கே சுமார் 230 கி.மீ தொலைவில் மவுங்கானுய் மலை உள்ளது. இந்த மலையடிவாரத்தில் உள்ள மவுவோ பகுதியில் பிரபல சுற்றுலா முகாம் தளம் உள்ளது. இங்கு சுற்றுலா பயணிகள் முகாம்களை அமைத்து தங்குவார்கள். இந்தநிலையில், மலையடிவாரத்தில் திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், கூடாரங்கள், ஒரு குளியலறை ஆகியவை மீது பாறைகளும், மண்ணும் சரிந்து விழுந்தது. இதனால் அந்த முகாம்கள், வாகனங்கள் மண்ணில் அடித்து செல்லப்பட்டு புதைந்தன. உடனே மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். நிலச்சரிவில் சிக்கி பலர் மாயமாகி உள்ளனர். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அந்த பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. இதனால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு கள் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் நாடாளுமன்றத்தை பதவியேற்ற மூன்றே மாதத்தில் கலைத்த பிரதமர்!

ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சிக்குள் பிரதமராக இருந்த ஷிகெரு இஷிபாவுக்கு எதிர்ப்பு எழுந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் தனது பதவியை ராஜிநாமா செய்தார். இதனிடையே, ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் கூட்டணியில் இருந்த கௌமேட்டோ கட்சி, தனது ஆதரவை திரும்பப் பெறுவதாக அறிவித்தது.

இதன்காரணமாக ஜப்பான் நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையை இழக்கும் நிலை ஏற்பட்டது. ஜப்பான் இன்னோவேஷன் கட்சியுடன் லிபரல் ஜனநாயகக் கட்சி கூட்டணி அமைத்த நிலையில், சனே தகாய்ச்சி முதல் பெண் பிரதமராக கடந்தாண்டு அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நிலையில், ஜப்பான் நாடாளுமன்றத்தில் வழக்கமான கூட்டத்தொடர் நேற்று கூடிய நிலையில், 465 உறுப்பினர்களைக் கொண்ட கீழவையைக் கலைப்பதாக தகாய்ச்சி அறிவித்தார்.

தற்போதைய ஜப்பான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 2028 ஆம் ஆண்டு வரை இருக்கும் நிலையில், வருகின்ற பிப். 8 ஆம் தேதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட அமைதி வாரியம் தொடங்கினார் ட்ரம்ப்




**டாவோஸ், ஜன.24:**

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட 'அமைதி வாரியம்' (போர்டு ஆஃப் பீஸ்) என்ற புதிய அமைப்பை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் முறைப்படி தொடங்கி வைத்தார்.

டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் இதுகுறித்து அதிபர் ட்ரம்ப் கூறியதாவது: 'போர்டு ஆஃப் பீஸ்' அமைப்பில் இணைய அனைவரும் ஆர்வம் காட்டுகின்றனர். வருங்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கே இது சவாலாக விளங்கும். இருப்பினும், அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகள் பல இந்த அமைப்பில் சேர மறுப்புத் தெரிவித்துள்ளன.

காசா முனையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது அமெரிக்காவுக்கானது மட்டுமல்ல, உலகுக்கானது. காசாவில் வெற்றி பெற்ற பிறகு, மற்ற உலகப் பிரச்சினைகளுக்கும் இந்த அமைப்பை விரிவாக்கம் செய்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

50 நாடுகள் கையெழுத்து: அசர்பைஜான் முதல் பராகுவே வரை சுமார் 59 நாடுகள் இதில் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவித்த டிரம்ப், அங்கு கூடியிருந்த தலைவர்களை நோக்கி, "நீங்கள் உலகிலேயே அதிகாரம் மிக்கவர்கள்; எனது நண்பர்கள்" என்று குறிப்பிட்டார். அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகள் இந்த அமைதி வாரியத்தில் இணைய மறுத்துவிட்டன.

முடிவெடுக்காத இந்தியா.. இந்தியா, சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள் இந்த அமைப்பில் சேருவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.

அமைதி வாரிய தொடக்க நிகழ்வில் அமெரிக்க வெளி உறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, அதிபரின் மருமகன் ஜாரெட் குஷ்னர், சவுதி அரேபியா, அர்ஜென்டினா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதற்கிடையே, நேற்று இரவு நடைபெற்ற தலைமைச் செயல் அதிகாரிகளுக்கான வரவேற்பு மற்றும் இரவு விருந்து நிகழ்ச்சியில் ட்ரம்ப் பேசும்போது, "என்னால் நம்பவே முடியவில்லை. வழக்கமாக அவர்கள், என்னை ஒரு பயங்கரமான சர்வாதிகாரி போன்றவர் என்பார்கள்.

நான் சர்வாதிகாரிதான். ஆனால் சில நேரங்களில் ஒரு சர்வாதிகாரி தேவைப்படுகிறார். ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் என்னை அப்படி கூறவில்லை" என்றார். டாவோஸில் இருந்து புறப்படும் முன்பு ட்ரம்ப் கூறியபோது, "நான் இங்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசினேன். விரைவில் புதினையும் சந்திப்பேன். என்னைப் பொறுத்தவரை போர் முடிவுக்கு வரவேண்டும்" என்றார்.